# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்



டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

மண்ணில்
நல்லவண்ணம்
வாழலாம்

# மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர்-தலைவர்
தமிழ்மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

நறுமலர்ப் பதிப்பகம்
சென்னை-600029

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் |
| ஆசிரியர் | : | டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| வெளியீடு | : | **நறுமலர்ப் பதிப்பகம்**<br>19, சயம்மாள் தெரு,<br>ஐயாவு குடியிருப்பு,<br>சென்னை-600 029. |
| வெளியிடப் பெற்ற நாள் | : | அக்டோபர் 1989 |
| தாள் | : | 11.6 k.g |
| நூலின் அளவு | : | கிரௌன் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 176 (viii+168) |
| படிகள் | : | 1000 |
| அச்சகம் | : | மாருதி பிரஸ்<br>சென்னை-600 014 |
| நூல்கட்டு | : | அட்டைக் கட்டு மானம் |
| விலை | : | ரூ. 18-00 |
| விற்பனை உரிமை | : | **பாரி நிலையம்**<br>184, பிரகாசம் சாலை<br>சென்னை-600 108 |

# முன்னுரை

'என்று பிறந்தவள் இவள்' என்று இயம்ப முடியாத அளவிற்குக் காலத் தொன்மையும், 'சமயந்தொறும் நின்ற தையல்' என்று சமயப் பொதுமையும் கொண்டவள் தமிழ்த்தாய். எனவே 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடியினரான தமிழர்கள்' திங்களொடும் செழும்பரிதி தன்னோடும், விண்ணோடும் முகிலோடும் உடுக்களோடும், கடலோடும் பிறந்த தமிழ்மொழியினை, அதன் தொன்மை நோக்கியும், பெருமை நோக்கியும் பெருமிதம் கொள்ளலாம். அப் பழம் பெருமையை மட்டும் பேசிக்கொண்டிருந்தால் தமிழர்க்குப் பெருமை சேர்ந்துவிடாது. காலந்தொறும் தமிழ்மொழி புதுமை போர்த்தி நின்ற திறத்தினையும் அறிந்துகொள்ளுதல் வேண்டும் என்ற அவாக்காரணமாக இச் சிறு நூலினைத் தமிழ்கூறு நல்லுலகிற்கு ஆக்கி அளித்துள்ளேன்.

எட்டுக் கட்டுரைகளைக் கொண்டிலங்கும் இந்நூலில் முதலாவது கட்டுரையாக அமைந்திருப்பது 'சங்க இலக்கியம்' என்னும் கட்டுரையாகும். 'சங்க இலக்கியம் ஒரு வாழைத் தோட்டம்' என்பார் என் ஆசிரியப்பெருந்தகையாம் டாக்டர் மு. வ. அவர்கள். அச் சங்க இலக்கியத்தின் பாடு பொருளாக அகமும் புறமும் அமைந்திருந்தாலும், பல்வேறு தரத்து மக்களின் மனவியல்புகளைப் புலப்படுத்துவனவாகச் சங்க நூல்கள் திகழ்கின்றன. அப்பொற்கால இலக்கியத்தின் புகழினைப் புலப்படுத்துவனவாக அமைந்துள்ள பழந்தமிழ் மக்களின் ஒழுகலாறுகளை, நாகரிக மேம்பாட்டினை, பண்பாட்டுச் சிறப்பினைத் தெற்றெனத் தெரிவிக்கும் வண்ணம் சங்க இலக்கியம் திகழும் பான்மையினை முதற் கட்டுரை உணர்த்தி நிற்கின்றது.

'சங்க இலக்கியம் உணர்த்தும் பண்பாடு' என்னும் இரண்டாவது கட்டுரை, அப் பொற்கால இலக்கியத்தில் தனித்து ஒளிவிட்டு நிற்கும் பழந்தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகளை விளக்கி நிற்கின்றது. 'பொழுது மறுத்துண்ணும் சிறுமதுகையளான' தலைமகளையும், 'அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும் முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்' தன்னையும் படம்பிடித்துக்காட்டும் பண்பாட்டுச் சிறப்பினை இரண்டாவது கட்டுரை இயம்பி நிற்கின்றது.

புறத்திணை நன்னாகனார் சங்ககாலத்துப் புலவர். அக்கால இலக்கியச் சிறப்பிற்குப் பெருமை சேர்க்கும்வரையில் அவர்தம் பாடல்கள் அமைந்திருக்கக் காணலாம். எனவே அவருடைய பாடல்களில் காணலாகும் அரிய செய்திகளைத் தொகுத்துரைக்கும் பாங்கில் 'புறத்திணை நன்னாகனார் பாடல்கள்' என்னும் பெயரிய கட்டுரை மூன்றாவது கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

'முல்லைத்திணை' என்ற தலைப்பினைக் கொண்டுள்ளது நான்காவது கட்டுரை, 'முல்லை' என்ற சொல்லிற்கே 'கற்பு' என்பது பொருள். அகத்திணை ஒழுகலாறுகளுள் முல்லை எனப்படும் கற்பு தனியிடம் பெறுவதாகும். 'பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லை தொகுமுகை இலங்கெயிறாக நகுமே தோழி நறுந்தண் காரே' என்னும் ஒக்கூர் மாசாத்தியாரின் குறுந்தொகைப் பாடலடிகள் ஒரு பெண்ணின் அடிமனத்தாழத் தெழுந்த ஏக்கப் பெருமூச்சினை எடுத்தியம்புவதாகும்.

'திருக்குறளும் சமுதாயமும்' என்னும் கட்டுரை, சங்ககாலச் சமுதாயத்தினை அடுத்தமைந்த சங்கமருவிய காலச்சமுதாயத்தினைத் தெற்றெனத் தெளிவாக்கி நிற்கின்றது. சமுதாயப் பிணி தீர்க்கும் மருத்துவராகத் திருவள்ளுவர் இலங்குவதனை இக்கட்டுரை இயம்பி நிற்கின்றது. 'கார் நாற்பது காட்டும் தலைமகன் பண்புகள்' என்னும் ஆறாவது கட்டுரை ஒரு சிறு நூல் 'ஆடியின் நிழல்

போல்' அக்காலச் சமுதாய நிலைகளைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கும் திறலினை விளக்கிநிற்கின்றது. 'தலைமகளை நெஞ்சத்திரையில் எழுதிய' தலைமகனின் நேர்த்திப் பண்பினை வெளியிடுவதாக அக் கட்டுரையில் செய்திகள் இடம்பெற்றிருக்கக் காணலாம்.

'தமிழ் அறநூல்கள் காட்டும் தமிழர் கல்வி' என்னும் தலைப்பில் அமைந்த ஏழாவது கட்டுரை, சங்கநூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பிற்கால அற நூல்கள் ஆகியவற்றுள் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்துக் கூறுகின்றது. 'தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெல்லாம் எற்றே இவர்க்கு நாம் என்று' என்னும் குமரகுருபர அடிகளாரின் வாக்கின் நுண்மை இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்னும் ஈற்றுக் கட்டுரைத் தலைப்பு, நூலின் பெயராகவும் அமைகின்றது. 'வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத்துறைவிளங்க, பூத பரம்பரை பொலிய, புனிதவாய் மலர்ந்தழுத' திருஞானசம்பந்தப் பெருமான் மக்கட்சமுதாயத்தை நோக்கி 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்று புகன்றார். அவர்தம் வாழ்வுப் போக்கினை வகையுறக் காட்டி நிற்கிறது நூலின் இறுதிக்கட்டுரை.

எப்போதும் போல் இப்போதும் தமிழுலகு என்னுடைய இந்த நூலினையும் வரவேற்று மகிழும் என்னும் துணிபுடன் என் முன்னுரையினை முடிக்கின்றேன்.

**சி. பா.**

'தமிழகம்'
*30-10-1989*

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1, | சங்க இலக்கியம் | ... 1 |
| 2. | சங்க இலக்கியம் உணர்த்தும் பண்பாடு | ... 20 |
| 3. | புறத்திணை நன்னாகனார் பாடல்கள் | ... 45 |
| 4. | முல்லைத் திணை | ... 68 |
| 5. | திருக்குறளும் சமுதாயமும் | ... 84 |
| 6. | கார் நாற்பது காட்டும் தலைமகன் பண்புகள் | ... 102 |
| 7. | தமிழ் அற நூல்கள் காட்டும் தமிழர் கல்வி | ... 115 |
| 8. | மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் | ... 139 |

# 1. சங்க இலக்கியம்

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்'[1] என்று தமிழ்நாட்டின் தொன்மையும், 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி' என்று தமிழ்க் குடியின் பழமையும்'[2] 'என்று பிறந்தவள் என்று உணர முடியாத இயல்பினள்'[3] என்று தமிழ்மொழியின் நீண்ட நெடும் வரலாறும் சுட்டப் படக் காணலாம். ''எள்ளினின்று எண்ணெய் எடுபடுவது போல் இலக்கியத்தினின்று எடுபடுவது இலக்கணம்''[4] என்பதற்கிணங்கத் தொல்காப்பியம் எனும் இலக்கண நூல், எண்ணற்ற இலக்கியங்கள் கண்டு எழுதப்பட்ட இலக்கண நூல் எனலாம். மேலும் தொல்காப்பியனாரே பலவிடங்களில் 'என்ப', 'என்மனார் புலவர்', 'நுவல்ப' 'நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே', 'மொழிப' என்று தமக்கு முற்பட்ட வழக்கைச் சுட்டுவதனால் தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழில் இலக்கண நூல்களும் இருந்திருக்கவேண்டும் எனலாம். ''வடிவேலெறிந்த வான்பகை பொறாது பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்ள, வடதிசைக் கங்கையு மிமயமும் கொண்டு தென்திசை யாண்ட தென்னவன் வாழி''[5] என வரூஉம் சிலப்பதிகார அடிகளும், சிலப்பதிகாரத்திற்கு முன்னர் எழுந்த கற்றார் ஏத்துங் கலித்தொகையில்—அதிலும் முல்லைக்கலியில்,

**"மலிதிரை யூர்ந்து தன்மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"[6]**

என வருஉம் அடிகளும், டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களின் என் சரிதமும் கொண்டு கடல் கோளால்—புனலால் கொள்ளப்பட்ட நூல்கள் பல என உணரலாம்.

இன்று கிடைக்கும் நூல்களில் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆவது போல, சங்க இலக்கியங்கள் பழமையான இலக்கிய நூல்கள் ஆகின்றன. பாட்டும் தொகையும் சங்க இலக்கியம் என்பர். 'மூத்தோர்கள் பாடியருள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்'[7] என்றதற்கேற்பத் திருமுருகாற்றுப்படை முதலாக மலைபடுகடாம் ஈறாக அமைந்த பத்துப் பாடல்களும் பத்துப்பாட்டாகும். நற்றிணை முதலாகப் புறநானூறு இறுதியாக அமைந்துள்ள எட்டு நூல்களும் எட்டுத்தொகை நூல்களாகும்.

மூன்று அடிகள் ஐங்குறுநூறு தொடங்கி 782 அடிகள் கொண்ட மதுரைக் காஞ்சி வரை இவற்றின் அடிவரை அமைகின்றன. 473 சங்கச் சான்றோர்கள் பாடிய இத் தொகுதியுள் 102 பாடல்களைப் பாடிய புலவர் தம் இயற்பெயர் அறியப்படவில்லை. காரணப்பெயரால் இவர்கள் அழைக்கப்படுவதனைக் காணலாம். பெண்பாற் புலவர்கள் முப்பதின் மரும், 25 அரசப் பெருமக்களும் இத் தொகுப்பில் காணப்பெறுகின்றனர். 2381 பாடல்கள் கொண்ட சங்கத் தொகை நூல்களில் 1862 பாடல்கள் அகம் பற்றியனவாகும். 473 சங்கச் சான்றோர்களில் 378 புலவர்கள் அகத்திணை பற்றிப் பாடிய புலவர் பெருமக்களாவர்.

சங்கவிலக்கியம் ஒரு வாழைத்தோட்டம் எனலாம். வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்து மரபினர் சங்கச் சான்றோர் ஆவர். தமிழின் பொற்காலம் எனச்

சங்க காலத்தைச் சொல்லலாம். காரணம் சங்ககாலத்தே நான் செறிந்த உயர்ந்த தமிழ் வழக்கில் இருந்தது. உயரிய உணர்வுகள், செறிவான கற்பனை, பொருத்தமான வடிவம், விழுமிய கருத்துகள் இவற்றிற்கு இருப்பிடமாய்ச் சங்கப் பாடல்கள் துலக்கமுறக் காணலாம்.

எளிய சொற்கள் கொண்டு உயரிய பொருள்களை உணர்த்தி நிற்றல் சங்கச் சான்றோர் கவிதைகளின் சாரம் எனலாம். இதனாலன்றோ கவிச்சக்கரவர்த்தியாம் கம்ப நாட்டாழ்வார் கோதாவரி ஆற்றை வருணிக்கப் புகுங்கால் "ஐந்திணை நெறியளாவிச் சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியினை"[8] வீரர் கண்டார் என விளம்பலுற்றார்.

மலைநாட்டு மங்கையொருத்தி, தன்மாட்டுத் தலைமகன் கொண்ட காதலின் எல்லையினைப் பின்வருமாறு குறிப்பிடு வாள்:

> **"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
> **நீரினும் ஆரளவின்றே சாரற்**
> **கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
> **பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"[9]**

என்**பது** எவ்வளவு எளிய சித்திரம்!

> **"பத்துப்பாட்டாதிமனம் பற்றினார் பற்றுவரோ**
> **எத்துணையும்**
> **பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே"[10]**

என்பார் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை. அதற்கேற்ப ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊர் என்றால் உறையூர் போலப், பட்டினம் என்றால் அச்சொல் காவிரிப் பூம்பட்டினத் தையே குறிக்கும்.

**"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே"[11]**

என்று கூறிச் செலவழுங்க முற்படுமுகத்தான் தன் காதற் பெற்றியைக் கட்டுரைத்த தலைமகனைப் பட்டினப்பாலை பகரும், "ஒருநாள் புணரப் புணரின் அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே"[12] என்று காதல் மாட்சியைக் கட்டவிழ்த்து நிற்கும் குறுந்தொகை காட்டும் தலைவனைக் காண்க.

சங்கச் சான்றோர் கற்பனை விழுமியது. அவர்கள் பாட்டில் உள்ளதுபுனைதலைக் காணலாம்; இல்லது புனைதல்—மகளிர் அழகை—உறுப்புநலன்களை வருணிக்க முற்பட்டாலுங்கூட அதில் வெறுக்கத்தக்க வருணனையைப் புகுத்தாமல் மனங்கொளத்தக்க வகையில் அளவோடு அமைந்த வருணனை காணலாம்.

**"பூவொடு புரையுங் கண்ணும், வேயென
விறல்வனப் பெய்திய தோளும், பிறையென
மதிமயக் குறூஉ நுதலும்"[13]**

என்று வருணனை காண்க. ஆற்றுப்படை நூல்களில் விறலியரைப் பற்றி முடிமுதல் அடிவரை வருணனை அமைந்திருந்தாலுங்கூடப் பெரிதும் வெறுக்கத்தக்க அளவிற்கு வருணனை இல்லை மேலும் கற்பனையில் இயல்புகற்பனையென்றும், நினைவுக் கற்பனையென்றும், கருத்துவிளக்கக் கற்பனை என்றும் காணும் மூவகைக் கற்பனைகளுக்கும் ஏற்பக் கற்பனைகளைச் சங்க இலக்கியங்களில் காணலாம். புறத்தே ஒரு காட்சி வழங்கினும் ஆழ்ந்து நோக்கினால் ஓர் உட்பொருள் அமையும் உவகை கொண்டு உயர்பொருளை விளக்கும் திறனையும் சங்கச் சான்றோர் வாக்கிற் காணலாம்.

"கழனி மா அத்து விளைந்துகு தீம்பலும்
பழன வாளைக்கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மில்
கையும் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே"[14]

ஈண்டுக் கழனி தலைமகள் வாழும் ஊராகவும், மாமரம் தலைமகளாகவும், தீம்பழம் தலைமகனாகவும், பழனம் பரத்தையர் சேரியாகவும், வாளைமீன் பரத்தையாகவும் கொள்ளுமிடத்து விளையும் உட்பொருள் உற்றுணரற்பாற்று. கதிரவனைக் கண்டு தாமரை மலர்கள் தலையவிழ்வதும், நிலவுகண்டு அல்லி மலர் அலர்வதும் இயற்கை. கதிரொளியில் அலரும் தண்டாமரை நிலவுக்கதிர் கண்டு கூம்பிவிடும். நிலவுத் திங்கள் கண்டு நெகிழும் அல்லி மலர் ஆதவன் வரவு கண்டதும் மூடிவிடும். உலகில் இயல்பாக நிகழும் இக் காட்சியைக் கண்டார் 'பொய்யா நாவிற் கபிலர்' அவர் பழகிய அரண்மனைக் காட்சி அவர் கருத்தில் வந்து நின்றது. அந்தப்புரத்தில் இளவரசி ஒருத்தி தன் தோழியரைப் பார்த்துச் சீற்றங் கொண்டாள். அவள் முகம் சிவந்தது. அதனைக் கண்ட தோழியர் தலைகளைத் தாழப்போட்டு முகங்கவிழ்ந்து நின்றனர். இந்தக் காட்சி 'புலனழுக்கற்ற அந்தணாளனாம்' கபிலர் கருத்திற்பட்டதும்,

"சுடர்த்தொடிக் கோமகள் சினங்தென அதனெதிர்
மடத்தகை ஆயம் கைதொழு தாஅங்கு"[15]

என்று கவிதை பிறந்தது. இணையென எழும் இனிய கற்பனை இது.

பதினான்கு நாள்கள் நிலவு தேய்வதும் பின் பதினான்கு நாள்கள் வளர்வதும் இயற்கை. ஆயிரம் சங்கச் சான்றோர் ஒருவர்க்கு இக் காட்சி—இந் நியமம் குலையா நிகழ்முறை ஓர் அரிய உண்மையினை உணர்த்துகின்றதாம்.

**"தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உன்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கள் புத்தேள் திரிதரும் உலகம்"[16]**

எனக் கவிதை பிறக்கின்றது. துன்பம் வரும்போது துவண்டு விடாமலும், இன்பம் வரும்போது இறுமாந்து விடாமலும் இருக்க வேண்டும் என்ற உயர்பேரறத்தை இக் கவிதையடிகள் விளக்கி நிற்கின்றனவன்றோ!

இனித் திணைகளுக்குப் பெயரமைந்த காரணத்தினைச் சுட்டி மேற்செல்வாம். பன்னிரண்டாண்டிற்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூக்கொண்டு மலையும் மலையைச் சார்ந்த குறிஞ்சிநிலத்திற்குக் 'குறிஞ்சி' என்றும், கார்காலத்தே மாலை நேரத்தே மலரும் முல்லை மலர்கொண்டு காடும் காடு சார்ந்த முல்லை நிலத்திற்கு 'முல்லை' எனறும், வளஞ் சார்ந்த வயற்புறங்களில் வளரும் மருதப்பூக்கள் காரணமாக வயலும் வயல்சார்ந்த மருதநிலத்திற்கு 'மருதம்' என்றும், நெய்தலங்கானலில் நெகிழ மலர்ந்திருக்கும் நெய்தல் பூக்கள் கொண்டு கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்திற்கு 'நெய்தல்' என்றும் பெயரிட்டுச் சங்கச் சான்றோர் கவிதை புனைந்திருப்பது தமிழர்தம் மலர்ப் பண்பாட்டினை உணர்த்தி நிற்பதாகும். பிறப்புத் தொடங்கி இறப்புவரை தமிழர் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், நிகழ்ச்சியிலும் இன்றியமையாப் பங்கு பற்றும் மலர்கள் திராவிட நாகரிகத்தின் தனிக்கூறுகளுக்கு விளக்கங்காட்டி நிற்பதாக அறிஞர் தனிநாயக அடிகளாரும், அறிஞர் சுந்தரகுமார சாட்டர்ஜியும் அறைவர்.

அகம் புறம் எனும் பொருள்கள் சங்க இலக்கியம் உணர்த்தும் சால்புகள் எனலாம். காதலும் போரும் சங்க இலக்கியங்களின் சாரம் என்பர் பேராசிரியர் பூரணலிங்கம் பிள்ளை அவர்கள். காதலைப் பேசாத மொழியும்

இலக்கியமும் இருக்க முடியாதுதான். ஆயினும் சங்க இலக்கியத்தின் தனித்தன்மை யாது? எனக் கேட்பின் "மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன் செவ்வி தலைப்படுவர்"[17] என்று திருவள்ளுவர் கூறியுள்ளபடி பெண்மையின் மென்மை போற்றி, பெண்ணின் பெருந்தக்கன வான பண்புகளைப்பலபடப் பாராட்டிப் பேசும் உளப்பாங்கு உணர்த்தவல்ல உயர் பேரிலக்கியங்களாகச் சங்க இலக்கியங் கள் துலங்குகின்றன எனலாம். காட்டொன்று காண்போம் :

பெண்மகவு பிறந்த ஞான்றே பின்னாளிற் தரப்போகும் சீர்வரிசையை எண்ணிக் கலக்கமுறும் பெற்றோர்கள் இன்று பலர். ஆனால் அந்நாளில் பெண்மகவு வேண்டும் என்று ஒரு குன்றக் குறவன் தவமிருந்து ஒரு பெண்மகவுக்குத் தந்தை யாகின்றானாம். இவ்வரிய உயரிய செய்தியை ஐங்குறுநூறு உணர்த்தும்.

**"குன்றக் குறவன் கடவுட் பேணி**
**இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்."**[18]

இதுபோன்றே நல்கூர்ந்தார் செல்வ மகளான ஒரு பெண்ணிற்கு, அவளைக் கண்ணின் இமையெனக் காத்தோம்பி வளர்க்கும் முதுமையும் வாழ்க்கையின் அனுபவ முதிர்ச்சியும் ஒருங்கே கூடிய செவிலித்தாயர், தம் ஒரு கையில் பொற்கலமும் அப் பொற்கலத்தில் தேன்கலந்த பாற்சோறும். மறு கையில் விளையாட்டாக அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் சிறுகோலும் கொண்டு, உணவூட்ட முற்படுகிறாள். பசியறியாது விளையாட்டயர்ந்து நிற்கும் அச்சிறு பெண் தன் கால்களில் அணிந்திருக்கும் முத்துக்கள் பதித்த பொற்சிலம்பு 'கலீர் கலீர்' என ஒலிக்க மல்லிகைப் பந்தர்க் கீழ் ஓடிஓடி ஒளிந்து, அத்தாயர் நடை தளர, முயற்சி மெலிய ஏவல் மறுக்கிறாள். ஆனால் அந்த நாள்கள் கழிந்து போயின. சிறுமி வளர்ந்தாள். வயது நிறைந்தாள்; மனச்

செவ்வி பெறும் மங்கல மடந்தையானாள். திருமணமும் நடந்தேறியது. ஆறிடு மடுவும் மேடும்போல்ஆம் செல்வமன்றோ! கொண்ட கொழுநன் குடி வறுமைவாய்ப் பட்டது. பசியறியா வாழ்க்கையில் பசியே நிறைந்தது. அன்பாற் பிணைந்த வாழ்க்கையில் அவலம் தலைதூக்கிற்று. உணர்ந்தான் தந்தை. மகள் விரும்பியுண்ணும் கொழுத்த சோற்றினைக் கொடுத்து அனுப்பினான். ஆனால் மகளோ உண்டாளில்லை. தன் காதற்கொழுநன் முயற்சியால் பெறும் புற்கை உணவாயினும் அதுவே இந்திரர் அமிழ்தத்தினும் இனியது எனக் கருதினாள். அன்பால், தந்தை மகள்மாட்டுக் கொண்ட பரிவால் கொடுத்தனுப்பிய சோற்றினை மறுத்து, பசியோடும் வாழக் கற்று, ஒருவேளை விட்டு ஒருவேளை உணவு உண்ணும் நெஞ்சுரம் பெற்றாள். இத்தகைய அறிவும் ஒழுக்கமும் இவளுக்கு எவ்வாறு வாய்த்தன? வழிவழியாக இந்நாட்டில் வளர்ந்துவரும் மாண்புநிறை மகளிர் பண்பாடே அவளுக்கு இவ் வறிவினையும் உணர்த்தி நின்றது.

"பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை எந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரீஇமெலிந் தொலியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகு நீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணுஞ் சிறுமது கையளே"[19]

இவ் வழிவழிவந்த பண்பாடு காரணமாகத்தான் அறிவிற் சிறந்த ஔவையாரும் பெண் என்றால் பண்பாடு

என்பதுபட, ஒரு நாடு நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும், ஒரு நிலம் பள்ளமாக இருந்தாலும் மேடாக இருந்தாலும் கவலை இல்லை; அந்நிலத்தில் வாழும் ஆடவர்கள் நல்லவர்களாக அமைந்து விடுவார்களேயானால் அந்நிலமும் வாழ்ந்துவிடும் என்று குறிப்பிட்டார் ;

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே."[20]**

நெருப்பு ஆற்றல் மிக்கதுதான்; ஆனால் அந்த நெருப்பைத் தண்மை மிகுந்த தண்ணீர் அணைத்து அவித்து விடுகிறது. அதுபோல நீரோ ரன்ன சாயலாள் தீயோரன்ன ஆடவனின் உரத்தினை அவித்து விடுகின்றாள். ஆயினும் தன்னை மணக்கும் ஆடவன் வீரத்தின் விளைநிலமாக வீறுடன் விளங்க வேண்டும் என்றே விரும்பினாள் நங்கை. கொம்பாற் குத்திக் கொல்லவரும் காளைக்கு அஞ்சும் கட்டிளங்காளையினை முல்லைநிலப் பெண் கருத்திற் கொள்வதே இல்லை.

**"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே ஆய மகள்"[21]**

என்றபடி மறுபிறவியிலும் காளையை அடக்க இயலாத காளைக்குக் கடிமணம் கூடுதல் இல்லை என்பதோடு "நலஞ்சார் விழுப்பொருள் கலநிறை கொடுப்பினும் பெறலருங் குரையர்"[22] (அகம் : 280; 4-6) என்றும்,

**"முழங்குகடன் முழவின் முசிறி யன்ன**
**நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்**
**புரையர் அல்லோர் வரையலள் இவளெனத்**
**தந்தையுங் கொடாஅன்"[23]**

என்றும் அகமும் புறமும் காட்டும் அருந்தொடர்கள் பெண்ணின் உரிமையைப் பெரிதும் பேசும். தலைமகன் ஒருவன் தலைமகளைச் சுட்டி, அவளுக்குக் கணவன் யான் எனக் கூறிக் கொள்வதில் ஒருசிறிதும் நாணவில்லை; மாறாகப் பெருமிதம் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ள செய்தியினை உள்ங்கொளல் தகும்.

**''நல்லோள் கணவன் இவன்எனப்**
**பல்லோர் கூறயாம் நாணுகம் சிறிதே.''[24]**

இதுகுறித்தன்றோ நக்கீரர் பெருமானும், திருப்பரங் குன்றத்தில் தெய்வயானைப் பிராட்டியாரைத் திருமணம் முடித்துத் திகழ்தரும் திருமுருகனைக் குறிப்பிடவந்தவிடத்து, ''மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்''[25] எனத் தெய்வ யானைக்குச் சிறப்புத்தந்து, தெய்வயானையின் கணவனே என முருகனை விளித்தார். சேரநாட்டுப் பெருவேந்தர்களைப் பலபடப் பாராட்டிப்பேசும் பைந்தமிழ்ப் புலவர்களெல்லாம் அவ்வேந்தர்களை,

**''பெண்மை சான்று பெருமட நிலைஇக்**
**கற்பிறை கொண்ட கமஞ் சுடர்நுதல்**
**புரையோள் கணவ''[26]**

என்றும் ''சேணாறு நல்லிசைச் சேயிழை கணவ''[27] என்றும் அவர் தம் மனைவியோடு சார்த்தியே பாராட்டியுள்ளனர். பின்னாளில் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய முத்தமிழ் விரகாம் திருஞானசம்பந்தப் பெருமானும் திருமறைக் காட்டுறை சிவபெருமானைப் பாடப்புகுங்கால், அச் சிவனார் வள்ளியின் 'தேனூறு கிளவிக்கு வாயூறி நின்ற' செந்தில்மேய வள்ளிமணாளனாம் முருகனுக்குத் தந்தை என்றே குறிப்பிட் டிருக்கக் காணலாம்:

**''நம் செந்தில்மேய**
**வள்ளி மணாளர்க்குத்தாதை கண்டாய்''[28]**

—திருமறைக்காட்டுப் பதிகம்.

இனிப் புறம் பற்றிய இரு செய்திகளைக் காண்போம். புறத்துறையினும் அறத்துறை பற்றிய நாடு தமிழ்நாடு. மறப்போரேயாயினும் அறம்வழுவா அறப்போர் ஆற்றிய அரசர் திறலைப் புறநானூறு புகலும். ஒரு நாட்டின் மீது படையெடுப்பதற்கு முன்னால் அந்நாட்டிலுள்ள பசுக்களும், அந்தணர்களும், பெண்களும், நோயாளிகளும், கடிமணம் முடிந்தும் மக்கட்பேறு வாய்க்காத நிலையிலுள்ள மணமக்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுங்கள் என அறிவித்துவிட்டே போர் தொடங்கப் பெற்ற தாக அறியவருகிறோம்.

**"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என**
**அறத்தாறு நுவலும் பூட்கை மறம்"**[29]

பசுக்கள் அன்று செல்வத்தை அளக்கும் அளவுகோலாகத் திகழ்ந்தன. ஒரு பசுவால் வரும் வருவாய் கொண்டு வாழும் வாழ்க்கை சிறப்பற்ற வாழ்க்கையாக 'ஓரான் வங்கிச் சீரில் வாழ்க்கை'[30] எனப்பட்டது. எனவே பகைநாட்டு மன்னனின் பசுக்களைக் கவர்ந்து வந்துவிடுதல் வெட்சி எனப்பட்டது. அப் பசுக்கள் தன் நாட்டுக்கு வந்துவிட்டால் பகைவன் நாட்டுச் செல்வம் தன் நாட்டிற்கு வந்துவிட்டதோடு அல்லாமல், பொது அறம் நோக்கிக் காக்கப்படவேண்டிய பசுக்களைக் காத்தவாறும் ஆயிற்று. சாலையோரத்தில் வழிச் செல்வோர் நீர்விடாய் தணிக்கும் பொருட்டு நடப்பட்ட நெல்லிமர நெல்லிக்காய் 'அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்' எனப்பட்டது ஈண்டுக் கருதத்தக்கது.

அடுத்து, தமிழர் வீரம் விளங்கி நின்ற மரபினர் என்பதற்கு ஒரு காட்டுத் தருவல். பகைநாட்டு அரணைச் சுற்றி முற்றுகை; பலநாள் அம் முற்றுகை நீடித்தது. எயில்

காத்தனர் நொச்சியார். அம்மதில் வளைத்து நின்றனர் உழிஞையார். உழிஞையர்க்கு ஒருநாள் பொறுமை எல்லை கடந்தது. சினம் மூண்டது; ஊக்கம் மிகுந்தது. அடுத்த வேளைக்குரிய சமையலை நிறுத்தினர். சமையலுக்குப் பயன்படும் அனைத்துப் பொருள்களையும் கருவிகளையும் மூடையாகக் கட்டி இந்தப் பக்கத்திலிருந்து கோட்டையின் உட்பக்கம் எறிந்தனர். அடுத்தவேளை உணவு மதில் முற்றுகையை முடித்து, மதில் காக்கும் நொச்சியரை வென்று, கோட்டையின் உட்புகுந்த பின்னரே என்றனர்.

> "மண்புனை யிஞ்சி மதில்கடந் தல்லது
> உண்குவ மல்லேம் புகாவென"[31]

உள உரத்தோடு நின்ற உயர்மறவர்களைப் பதிற்றுப்பத்து காட்டும்.

இனி இயற்கையின் பின்னணியில் துலங்கிய பழந்தமிழர் வாழ்வினை இரண்டு எடுத்துக்காட்டுகளால் காண்போம்.

வரையாது வந்து ஒழுகுகின்றான் தலைமகன் ஒருவன். தலைமகள் பேதுற்றாள்; மெலிந்தாள்; மேனி பசந்தாள்; நெற்றி ஒளி இழந்தாள். ஆயினும் அவளுக்கு ஓர் ஆறுதல். தலைமகன் நாட்டில் எழிலும் ஏற்றமும் உயர்தோற்றமும் கொண்டு விளங்கிய மலையைப் பார்த்தாள்; தலைமகனைப் பார்த்தது போன்ற ஆறுதலைப் பெற்றாள். வரியும் வனப்பும் வண்ணம் வாடிய அவள் மேனி பண்டுபோல் துலக்கமுற்றது; நெற்றி ஒளி நிறைந்தது.

> "..........................அவர்நாட்டுக்
> குன்றம் நோக்கினேன் தோழி
> பண்டை யற்றே கண்டிசின் நுதலே"[32]

என்றாள். இது சிறுபிள்ளைத்தனமும் அன்று; வேடிக்கையும் அன்று. இறைவன் படைத்த இயற்கையில்தான் மனித மனம் அமைதிபெற முடியும் என்பது மேனாட்டினரும் இன்று தெளிந்து போற்றும் உண்மையாகும்.

"The world is too much with us late and soon
Getting and spending we lay waste our powers
Little we see in Nature that is ours.
We have given our hearts away a sordid boon."[33]

ஈட்டலும் இழத்தலுமாயமைந்திருக்கும் வாழ்க்கையில் இயற்கையொன்றே என்றும் அமைதி நல்குவது என ஏரிவட்ட இயற்கைநெறி பரவு ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ்வொர்த் கிளத்திப் போந்தார். இம்முறையில்தான் நற்றிணைத் தலைமகள் ஒருத்தி, தான் ஒரு ஞான்று புன்னைமரத்தடியில் நின்றுகொண்டிருக்கவும், தன்னோடு காதற்பேச்சினைக் கட்டவிழ்த்துவிட வந்த தலைமகனிடமிருந்தும் பிரிந்து போய்ப் பிறிதோரிடம் நிற்கவும், அதற்குரிய காரணம் வினவிய தலைமகனுக்குத் தன் தமக்கை முன் காதற் பேச்சினைக் கேட்க நாணம் மேலிடுமன்றோ என்று கூறிப் புன்னைமரத்தின் சிறப்பினைப் புகன்றதாகவும் ஒரு செய்தி உளது. சிறுவயதில் தலைமகனின் தாய் மணலில் புன்னைக் கொட்டையை அழுத்தித் தோழியருடன் விளையாடா நிற்க, அவளைப் பெற்ற தாய் உணவுண்ண அழைக்க, அதுகாறும் விளையாட்டிற்குப் பயன்பட்ட புன்னைக் கொட்டையை மறதியாக மணலிலேயே மறந்து வைத்துவிட்டுப் போய்விட, பின்னர்ப் பெய்த பெருமழையாற் புன்னை தழைக்க, அதுகண்ட மகள் எருவிட்டு, நீர் பாய்ச்சி, காவல் அமைத்துப் புன்னையை வளர்க்க, அது வளரவும், தான் பருவம் வந்து திருமணம் கண்டு மகள் பிறக்கவும், அம்மகளை ஒருநாள் அழைத்து, வளர்ந்திருந்த புன்னைமரத்தைக் காட்டி, அப் புன்னைமரம் தலைமகளைப் பெற்றெடுத்துப் பேணி வளர்ப்பதற்கு முன் வளர்க்கப்பட்ட காரணத்தால் அப் புன்னை இன்றைய தலைமகளுக்குத் தமக்கை முறை ஆக வேண்டும் எனக் குறிப்பிட்ட செய்தியினை நினைவூட்டினாள்.

"நும்மிற் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே,"[34]

"முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்"[35] விளங்குவது தமிழ், 'வறிது நிலைஇய காயம்',[36] 'வளவன் ஏவா வானவூர்தி'[37] முதலிய தொடர்கள் தம் முந்தையோருடைய அறிவியல் அறிவைக் காட்டும். 'சேமச் செப்பு' இன்றைய தெர்மாஸ்பிளாஸ்க் போன்றது. இவையெல்லாம் அறிவியல் திறம் உணர்த்தும்.

"அற்சிரக் காலத்து வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ"[38]

எனத் தோழி அறிவரைப் பார்த்து, வினவும் கூற்றில் அமைந்துள்ள நுட்பம் நுணுகி உணரத்தக்கது.

சின்னஞ்சிறுவயதில் விளையாட்டை வினையாக்கிக் கொண்டு சிறுபூசல் விளைவித்த தலைமகனும் தலைமகளும் வாழ்வில் இணைகின்றனர். இவர்களை இணைத்து வைத்தது பாலே—ஊழே—என்பர் ஒரு புலவர்.

"இவன் இவள் ஐம்பால் பற்றவும் இவள் இவன்
புன்றலை ஓரி வாங்குநள் பரியவும்
காதற்செவிலியர் தவிர்ப்பவும் தவிரார்
ஏதிற் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டியோயே,"[39]

முன்னால் ஒருவர்க்கொருவர் தாயினையும் தந்தையினையும், ஏன்? தங்களையே கூட அறிந்திராதவர்கள், இன்று செம்மண் பூமியிற் பெய்த மழைநீர் அந்நிலத்தோடு ஒன்று கலப்பதுபோல மனத்தால் இணைகின்றனர்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே."[40]

ஒருவரையொருவர் விரும்பினதாலே அவர்கள் பின் வாழ்வில் ஒன்றுபட்டனர்.

"நின்வெய்யன் அவனாயின் அவன்வெய்யை நீயாயின்
நின்னை நோதக்கதோ இல்லைமன்
நின்நெஞ்சே அன்னைநெஞ்சாகப் பெறின்."[41]

இவ்வாறு வாழ்வில் இணைந்த இவர்தம் இல்லற வாழ்க்கை பிறர் பாராட்டத் தகுவதாய் உளது. தலைமகள் கெட்டித் தயிரைத் தன் பிஞ்சு விரல்களால் பிசைந்து புளிக்குழம்பு செய்தாள். தாளிப்பு மணம்வரக் கண்களில் புகை சூழ்ந்தும் தானே நின்று தாளிதம் செய்தாள், தயிர்க்கறை படிந்த தன் சேலையை மாற்றி உடுத்தக்கூட நேரமில்லாமல் தலைமகன் உணவிற்கு வந்துவிட அவன் இனிது இனிது என்று கூறி மகிழுமாறு உணவு படைத்தாள். அவன் பாராட்டால் அவன் முகம் சிறிதளவு மலர்ந்தது.

"முளிதயிர்ப் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே."[42]

இவ்வாறு பீடுசான்ற தமிழர் வாழ்வியல் கூறும் நூல்களில் தலையாய பண்பாடாக வற்புறுத்தப் பெறுவது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பலாகும். வறுமையின் எல்லைக்கோட்டைத் தொட்டுத் துயருழந்த புலவர் பெருஞ்சித்திரனார் பழந்தூங்கு முதிரமலைத் தலைவன் குமண வள்ளலிட மிருந்து பெரும்பொருள் பெற்றுவந்த நிலையிலும் தன் மனைவியை அழைத்து, "முன்னால் கடன்பெற்ற அளவே

பொருளைத் திருப்பித் தராமலும் வளமாக எஞ்ஞான்றும் வாழலாம் என்ற எதிர்காலச் சிந்தனையில் அமிழ்ந்து விடாமலும் எல்லோர்க்கும் வாரி வழங்குவாயாக'' என ஆணையிட்டதனை எண்ணிப் பார்ப்பின் தமிழர்தம் தலையாய அறப்பண்பு விளங்கிடக் காணலாம்.

''நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னார்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்றென்னாது
எல்லார்க்கும் கொடுமதி மனைகிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.''[43]

இனிச் சங்க இலக்கியங் காட்டும் மணியான தொடர்கள் வழி வாழ்வியல் உண்மைகளைக் கண்டு தெளியலாம்.

''வினையே ஆடவர்க் குயிரே வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்.''[44]

''எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.''[45]

''அல்லி யாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்.''[46]

"கற்பினீன் வழாஅல் நற்பல வுதவி
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகென."[47]

''ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு.''[48]

"  "யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறமும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ராயோ."[49]
"நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க."[50]
"உண்டா லம்மவிவ் வுலகம்......
தமக்கென முயலா நோன்தாள், பிறர்க்கென முயலுநர்
உண்மையானே."[51]

சங்க இலக்கியத்தின் முடிமணியாக உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கத்தக்க பாடலாக அமைந்துள்ள பாடல் கணியன் பூங்குன்றன் பாடியுள்ள புறநானூற்றுப் பாடலாகும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே முனிவில்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆதலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."[52]

இத்தகு சீர்த்தி வாய்ந்த சங்க இலக்கியம் காருள்ள அளவும், கடல் நீருள்ள அளவும், வானுள்ள அளவும், வானில் வான்கருணை உள்ள அளவும் நின்று நிலவுதல் உறுதி, சங்க காலம் தமிழகத்தின் பொற்காலம் எனக்கூறி அமைவல்.

## குறிப்புகள்

1. தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம்: 1-9.
2. புறப்பொருள் வெண்பாமாலை.
3. பாரதியார் கவிதைகள், தேசீய கீதங்கள்: 9; 2.
4. நன்னூல்.
5. சிலப்பதிகாரம்: 11; 18-22.
6. முல்லைக்கலி 4; 1-4
7. தமிழ்விடுதூது: 55-56
8. கம்பராமாயணம், பஞ்சவடிப் படலம்: 1; 2-4.
9. குறுந்தொகை: 3.
10. மனோன்மணீயம்.
11. பட்டினப்பாலை 218-220.
12. குறுந்தொகை: 280; 4-5
13. குறுந்தொகை: 225 : 1-3
14. குறுந்தொகை: 8.
15. நற்றிணை: 300; 1-2.
16. புறநானூறு: 27; 11-14.
17. திருக்குறள், புணர்ச்சி விதும்பல்: 9.
18. ஐங்குறுநூறு: 227 : 1.2.
19. நற்றிணை: 110.
20. புறநானூறு: 107.
21. முல்லைக்கலி: 3: 63-64
22. அகநானூறு: 280; 4-6.
23. புறநானூறு; 343; 10-13.
24. குறுந்தொகை: 14; 5-6
25. திருமுருகாற்றுப்படை: 6.
26. பதிற்றுப்பத்து: 7; 10:14-16.
27. பதிற்றுப்பத்து: 9; 8:36.
28. திருமறைக்காட்டுப் பதிகம்.
29. புறநானூறு: 9.
30. குறுந்தொகை: 295; 4.

31. பதிற்றுப்பத்து: 6;8: 5-6.
32. குறுந்தொகை: 249; 3-5.
33. William Wordsworth: Sonnet
34. நற்றிணை; 172; 4-5.
35. திருவெம்பாவை: 9:1.
36. புறநானூறு; 30: 4.
37. புறநானூறு; 27: 8.
38. குறுந்தொகை; 277:5.
36. குறுந்தொகை: 229.
40. குறுந்தொகை: 40.
41. முல்லைக்கலி: 7; 21-23.
42. குறுந்தொகை: 167.
43. புறநானூறு: 163.
44. குறுந்தொகை; 135; 1-2.
45. புறநானூறு: 206; 13.
46. நற்றிணை: 142; 9-11.
47. அகநானூறு: 86; 13-14.
48. முல்லைக்கலி: 17; 10-11.
49. பரிபாடல்: 5; 78-81.
50. ஐங்குறுநூறு: 2;1.
51. புறநானூறு: 182.
52. புறநானூறு: 192.

# 2. சங்க இலக்கியம் உணர்த்தும் பண்பாடு

மனித சமுதாயத்தின் செம்மையான வாழ்வு நிலையைக் கண்டறிய உதவுவனவற்றுள், அச்சமுதாயம் பின்பற்றுகின்ற நாகரிகக் கூறுகளும் போற்றிப் புரக்கின்ற பண்பாட்டுக் கூறுகளும் தலைமை சான்றவை. இவற்றுள் நாகரிகம் மனிதர்களின் புறவளர்ச்சியைத் தெளிவுபடுத்தவல்லது. அதாவது நடை, உடை, பாவனைகளால், காலந்தோறும் பெருகி வருகின்ற புதுமைகளைக் கடைப்பிடிப்பதால் மனிதர்களிடையே—அவர்தம் புற ஒழுகலாறுகளிடையே—காணத் தக்க மாற்றங்களை விளக்கவல்லது. ஆயின் பண்பாடு அத்தகையதன்று. அது மனித சமுதாயத்தின் அகவளர்ச்சியை —மனவளர்ச்சியை முழுமையாக உணர உதவுவதாகும். தொன்றுதொட்டு நிலவிவரும் நம்பிக்கைகள், பொதுமைச் சிறப்பு, மனிதநேயம், கடமை உணர்வு, அழியாத மன உணர்வு முதலானவற்றைத் தெள்ளத் தெளிவாகக் காட்ட வல்ல செயல்களின் அடிப்படையில் பண்பாட்டு நிலை உணரப் பெறுகின்றது. தொழிற்பெருக்கத்தாலும், புதிய கண்டுபிடிப்புகளாலும் மாறுதலடைகின்ற நாகரிகக் கூறுகள் போல் இல்லாமல் பழமைச் சிறப்புகளைப் போற்றி ஒரு சமுதாயத்தின் உள்ளார்ந்த வாழ்வு நிலையைச் சித்திரிக்க வல்லவையாகத் திகழ்பவை பண்பாட்டுக் கூறுகள். இத்தகு பண்பாட்டுக் கூறுகள் மனிதர்கள் போற்றும் கலைகளின்வழி வெளிப்படுகின்றன. அவற்றுள் இலக்கியம் என்னும் கலையின் வழிப்படும் பண்பாட்டு நிலை அறியத்தக்க

ஒன்றாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட நெடிய வரலாற்றையுடைய நம் மொழியின் இலக்கியங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு வளத்தை நயம்பட நவின்றுள்ளன. அவ்விலக்கியங்களுள் சங்க இலக்கியம் முதன்மையுடையது. அதன்கண் உணர்த்தப் பெறும் பண்பாட்டுச் சிறப்பை இவண் நோக்கலாம்.

## சங்க இலக்கியம்

சங்க இலக்கியம் தொன்மையும் பழமையும் வாய்ந்தது; பண்பாட்டின் நிலைக்களனாய் விளங்குவது; பண்பாடு என்பதற்கு மிகப் பொருத்தமான விளக்கத்தை அளிக்கின்றது. 'கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை'யில்,

> **பண்பெனப் படுவது பாடறிந்தொழுகுதல்**

என்னும் தொடர் ஆளப் பெற்றுள்ளது. பிறர்தம் இயல்பும் மனப்போக்கும் கண்டுணர்ந்து மதித்து அதற்கியைய நடந்து கொள்ளலே பண்பாகும் என்னும் இவ்விளக்கம் அருமையும் தெளிவும் உடையது. இத்தகு பண்பைப் பேணும் பெருமக்கள் இருப்பதாலேயே உலகம் நிலைத்திருக்கின்றது. இதனை,

> **பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
> **மண்புக்கு வாய்வது மன்[1]**

என வள்ளுவப் பெருந்தகை தம் ஈரடிச் செய்யுளில் இயம்புதல் நோக்கத்தக்கது. சங்க இலக்கிய நூல்கள் அக்காலச் சான்றோரின் பண்பாட்டுச் சிறப்பை எடுத்து மொழிந்திருப்பதன் மூலம் தமிழினத்தின் தனித்தன்மை ஏற்றம் பெற்றிருக்கின்றது; உலக அரங்கில் உயர்பேரிடத்தில் வைத்துப்போற்றத் தக்க நிலையை எய்தியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் தமிழ்ச் சமுதாயம் போற்றிய பண்பாட்டுக் கூறுகளுள் சிறந்தவற்றை, உயரியவற்றை அடுத்துக் காணலாம்.

**அகம்**

## காதல் வாழ்வு

சங்க இலக்கியத்தின் பெரும்பகுதி ஆண் பெண் இருவரும் இணைந்து வாழும் வாழ்வு நிலையைச் சித்திரிப்பதாக அமைந்துள்ளது. இதனை அக ஒழுக்கம் அல்லது அகத்திணை என்னும் பெயரால் குறிப்பர். வயது, கல்வி, செல்வம், குலம் முதலானவற்றால் ஒத்த ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தம்முள் எதிர்ப்பட்டு ஒருவரையொருவர் கவர்ந்து மன மகிழ்வுற்றுக் காதல்கொள்ளும் தன்மை பழந்தமிழகத்தில் பெருவழக்கினதாய் இருந்தது. இதனை, குறுந்தொகைப் பாடலொன்றால் அறியலாம். தாய், தந்தை, தமையன் முதலான சுற்றத்தாரை விட்டுப் பிரிந்து தலைமகன்மாட்டுக் கொண்ட காதல் ஈர்த்தலாலே அவனுடன் புறப்பட்டுச் சென்றாள் தலைமகள் ஒருத்தி. அவளைத் தேடிச் சென்று காணாத செவிலித் தாய், தன் மகளைத் தவிரப் பிற ஆண்களும் பாலைவழியில் மிகுதியாகச் சென்றனர்; அவர்களின் எண்ணிக்கை வானிலுள்ள நட்சத்திரங்களைவிடக் கூடுதலானது எனக் கூறிப் பெருமூச்சு விடுகின்றாள். அவளது கூற்றாக வரும்,

> **அகலிரு விசும்பின் மீனினும்**
> **பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே[2]**

என்னும் இப் பாடலடிகள் வாயிலாகப் பண்டைநாளில் காதல் மணம் புரிதல் என்னும் பண்புநிலை மிக்கிருந்ததை உணர முடிகின்றது.

## காதல் வாழ்வில் தலைமகன்

இத்தகைய காதல் வாழ்வில் தத்தம் பண்புத்திறம் பளிச்சிடும்வண்ணம் சங்க இலக்கியத் தலைமகனும் தலைமகளும் வரம்பு இகவாது வாழ்ந்தமை அறிகின்றோம்.

தலைமகன் ஒருவன் தன் காதலியை விட்டுப் பிரிய மனமில்லாது அவளை அவாவி நிற்றலை மட்டும் விரும்பும் போக்கு பட்டினப்பாலையில் திறம்பட மொழியப் பெற்றுள்ளது.

**மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்**
**முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்**
**வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய**
**வாரேன் வாழிய நெஞ்சே**[3]

என வரும் பாடலடிகள் காதலின் வலிமையைக் காட்டுவன. பழிதீர் தேயமாக மிக்க சிறப்புடன் விளங்கிய காவிரிப்பூம் பட்டின நகரையே பெறுவதாக இருந்தாலும் தன் காதலி இல்லாமல் தன்னால் தனியனாய் வரவியலாது என்று கூறும் தலைமகனின் காதலுணர்வு பண்பட்ட உறவாய்—உணர்வாய் ஒளிர்கின்றது. வாழ்வில் காதலின் வலிமை பெறுகின்ற இடத்தையும் அதனை முறையாகப் பேணும் தலைமகனின் இப்பகுதி தெளிவுபடுத்துகின்றது. இது போன்றே,

**குடநாடு பெறினும் தவிரலர்**
**மடமான் நோக்கிநின் மாணலம் மறந்தே**[4]

என்னும் தோழியின் கூற்றாகவும் தலைமகனின் காதலொழுக்கம் கிளத்தப்பட்டுள்ளது. செல்வம் வரும்; போகும். ஆகையால் அது குறித்துக் கவலுவதில்லை. ஆயின் மனத்திற்கிசைந்த பெண்ணின் நல்லாளின் பெருநட்பு வாழ்வின் இறுதிவரை வரக்கூடியது; அது நீடித்து நிலைக்க வேண்டும்; இன்பம் நல்க வேண்டும் என்றே யாவரும் விரும்புவர். எனவேதான் அந்நட்பை உதறித்தள்ளும் பண்பற்ற நிலையைப் பழந்தமிழ் மக்கள் பேணாது ஒதுக்கினர். இஃது அவர்தம் காதல் ஈடுபாட்டிற்குச் சான்றாகும்.

## காதல் வாழ்வில் தலைமகள்

இல்லத்திலிருந்துகொண்டு நல்லனவற்றை ஆற்ற வேண்டிய கடமை தலைமகளுக்குரியது; வினைமேற் சென்று திரும்பும் ஆடவரே பெண்டிர்க்கு உயிர் போன்றவர் என்னும் சீரிய பண்பு வாய்க்கப்பெற்ற சமுதாயமாகப் பழந்தமிழ்ச் சமுதாயம் நிலவியது. தன்பால் அன்பு செலுத்திக் காதல் கொண்டவனைப் பெரிதும் நம்பும் தலைமகளைச் சங்க நூல்கள் பாங்குடன் பகர்கின்றன. தலைமகளுடன் தான் கொண்ட உறவினை, நட்பினை,

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவின்றே சாரற்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே**[5]

எனப் பெருமிதப் பண்பு தோன்றக் கூறும் தலைமகளின் நலமிகுமொழியைக் குறுந்தொகை வாயிலாக அறிகின்றோம். இத்தகு காதல் வாழ்வில் ஒரு சிறிது நேரப் பிரிவு ஏற்பட்டாலும் வருத்தம் மேலிட்டு, அத்துன்பத்தைப் பொறுக்க ஆற்றாது வாழ்வை மறக்கும் தலைமகளை,

**ஒரு நாள் விழுமம் உறினும் வழிநாள்**
**வாழ்குவள் அல்லளென் தோழி**[6]

என அகநானூறு காட்டுகின்றது. அவள் தலைமகனிடத்துக் கொண்ட காதல், பிணைப்பிற்கு இப்பாடல் ஏற்ற சான்றாகும். இது போன்றே,

**யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பின்**
**இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே**[7]

என்னும் பாடலடிகளும் ஒருமித்த காதலுணர்வின் வெளிப்பாடாய் இலங்குகின்றமை உணரத்தகும். காதல் கொண்ட பிறகு தான்வேறு அவன் வேறு; தான் வேறு அவள்

வேறு என நினைக்கும் இருவகை நினைப்பொழிந்து ஒருமை யுணர்வில் திளைக்கும் பண்பட்ட தலைமக்களைக் கொண்ட சமுதாயமாக நம் பழந்தமிழகம் நிலவிற்று. மனித ஆன்மா இறைவனுடன் ஐக்கியமாகும்போது தோன்றுகின்ற 'எல்லாம் இறை' என்னும் இறைக் கொள்கை போன்று 'ஈருடல் ஓருயிர்த் தன்மைத்தாய்' சங்ககாலத் தலைமக்களின் காதல் கொள்கை அமைந்திருந்தது. இதில் தலைமகள் கொண்ட காதற்பிணைப்பே மிக ஆழமாக வெளிப்படுகின்றது. இத்தகு காதற் பிணைப்பென்னும் பண்பைச் சங்க இலக்கியம் மிகுதி யும் போற்றியுரைக்கின்றது.

தலைவன், தலைவியை மறந்தாலும் அவள் அவனை மறவாது போற்றுகின்ற நிலையைச் சில பாடல்கள் சுட்டு கின்றன. குறித்த காலம் கடந்தும் வாராத தலைவனை எண்ணி வருந்திய தலைவி தன் வருத்தத்தைத் தணித்துக் கொண்டு தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொள்ளுதல் போல,

மறந்தோர் மன்ற மறவா நாமே[8]

எனப் பேசுகின்றாள். தலைமகன்பால் அவள் கொண்டி நக்கும் பிணைப்பிற்கு இதுவும் சிறந்த சான்றாகும். நஞ்சையள்ளும் சிலம்பிலே,

**தம்முடைய தண்ணளியும் தாமுந்தம் மான்றேரும்**
**எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க**
**அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்**
**நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்[9]**

என மாதவி பாடும் கானல்வரிப் பாடலுடன் மேற்சுட்டிய பாடலடியை இயைபுபடுத்திக் காணுதல் தமிழ்ச் சமுதாயத்தின் பண்புநலத்தை மேலும் அறியத் துணைபுரியும்.

அடுத்து, தலைமகன் வாழ்வு போன்றதே தன் வாழ்வும்; தனக்கென்று தனியொரு வாழ்வில்லை எனக் கருதும் சீரிய பண்புத்திறம் தலைமகளிடம் குடிகொண்டிருத்தலைச் சங்கப் பாக்களில் காண முடிகின்றது. வினைவயிற் சென்று பொருளீட்டி வந்து இல்லறம் போற்றல் அக்காலத்தில் ஆடவரின் இயல்பாக—கடமையாகக் கருதப்பட்டது. கடமையைக் கருத்திற்கொண்டு பொருளீட்டச் செல்லும் தலைமகன் தன் செலவைக் குறிப்பால் தலைமகளுக்கு உணர்த்த அவள் அவனைப் பிரிந்து வாழப் பொறாதவளாய், தன்னையும் அழைத்துச் செல்லுமாறு வேண்டினாள். தலைமகனோ செல்லும் வழியின் சிதைவுகளையும், அவ் வழியில் செல்வதால் நேரும் இன்னல்களையும் எடுத்துரைத்து அவளது வரவைத் தவிர்க்க முயன்றான். ஆயின், அவள் வழியது அருமையைக் கருதாது அவனுடன் செல்லுவதையே பெரும் பேறாகக் கருதி,

**..................நும்மொடு**
**துன்பம் துணையாக நாடின் அதுவல்லது**
**இன்பமும் உண்டோ எமக்கு[10]**

என மறுமொழி பகர்ந்தாள். உனது துன்பத்தின்கண் நான் துணையாக இருப்பதொன்றே எனக்கு இன்பமாக இருக்கும்; அதைத் தவிரப் பிற இன்பம் எதுவும் இல்லை எனக் கூறும் தலைமகளின் பண்புத்திறம் சங்க இலக்கியப் பதக்கத்துள் பதிக்கப்பெற்ற நவமணியென ஒளிர்கின்றது.

பிறிதொரு தலைமகள் தன்னிடம் உள்ள வளத்தை விடவும் தலைமகனிடம் உள்ள வறுமையை உயர்வாகக் கருதுகின்றாள்; அவ்வறுமையைப் பெருமையாகக் கருதுவதில் அவள் அவனுடன் கொண்டுள்ள பிணைப்பின் உறுதி, இறுக்கம், செறிவு ஆகியவற்றை உணர முடிகின்றது. இதனை,

**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலைக் கூவற் கீழ்**
**மானுண்டு எஞ்சிய கலிழி நீரே[11]**

என்னும் பகுதியால் விளங்கிக் கொள்ளலாம். தன்னிடமுள்ள தேன் கலந்த பாலைவிட, தலைமகன் நாட்டில் சிறுகுழியில் தேங்கியுள்ள தூசி படிந்த மான்கன்றுகள் குடித்து எஞ்சிய நீர் இனிமையானது என மொழிவதில் தலைமகனை மட்டு மல்லாமல் அவனது நாட்டையும் நேசிக்கும் அவளது பரந்த உளப்போக்கினை நினைந்து மகிழ்தல் சாலும். தன்பால் அன்பு செலுத்துபவன் என்கிற ஒரே காரணத்தால்—அந்தப் பிணைப்பு தருகின்ற மகிழ்ச்சியால், அவளது உள்ளம் தலைமகனை அவாவுதலோடு அவனைச் சேர்ந்த நாடு, நகரம், காடு, மலை, உற்றார், சுற்றம் ஆகிய யாவற்றையும் அவாவி நிற்கின்றது, அவற்றையெல்லாம் இனியனவாகக் கருதிப் பெருமிதம் கொள்கின்றது. இத்தகு மனவளர்ச்சியினை, மனச் செம்மையினை மிக எளிய முறையில் இயல்பான மொழிநடையில் எடுத்துரைக்கும் சங்க இலக்கியத்தைக் காலத்தை வென்ற கருவூலம் எனல் தகும்.

அடுத்து, பழந்தமிழ் மகளிரின் கற்பெனும் பண்பு போற்றத் தக்கதாய் உள்ளது 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்பதாம். அகவாழ்வில் தலைமகன், தலைமகளை விட்டுப் பிரிய நேர்கையில் ஒரு குறிப்பிட்ட பருவத்தைச் (காலத்தை) சொல்லி அதற்குள் வந்துவிடுவேன், அதுவரை ஆற்றியிரு எனக் கூறிப்பிரிதல் மரபு. தலைமகளும் அவ்வாறே ஆற்றியிருப்பாள்; எனினும் தலைமகன் மாட்டுக் கொண்ட காதலுணர்வின் அழுத்தம் உடலிலும் உளப்பாங்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தலால் ஊராரின் அலரஞ்சித் தலைமகளின் வரவை நினைந்து வருத்தம் மேலிடப் பேசுவாள். அவளது அந்தப் பேச்சுகளில் தலைவனிடத்து அவள் பூண்டிருக்கும் உரிமையும் நம்பிக்கையும் தெற்றென வெளிப்படுகின்றன.

**நின்றசொல்லர் நீடுதோ றினியர்**

எனத் தலைமகனைப் புகழ்ந்துரைக்கும் பகுதி தலைமகளின் நம்பிக்கையுணர்வுக்குச் சான்றாகவல்லது. தலைமகன் குறித்துச் சென்ற காலத்தில் வாராதிருப்பினும் அவன் மீது கொண்ட நம்பிக்கையைச் சிதையாது அவன் நினைவை விட்டொழியாது வாழும் பண்பினைத் தலைமகள் கொண்டிருந்தாள். பொதுவாக, கார்காலம் தலைமகன் வினைமுடித்து வீடு திரும்பும் காலமாகும். கார்காலம் தொடங்கியவுடன் காயா, கொன்றை முதலான மரங்களில் செழிப்பும் வனப்பும் கொண்ட அழகிய மலர்கள் பூக்கும்; முல்லையரும்பு முகிழ்த்து மலரத் தொடங்கும். இந்தப் புறநிகழ்வுகளைக் கொண்டு கார்ப்பருவத்தை அறிந்து தலைவன் வரும் காலமிது என எண்ணுதல் அக்கால மக்களின் இயல்பு.

கார்காலம் வந்தும் தலைமகன் வரவில்லை என்றால் கலக்கம் கொள்வர். அவ்வாறே ஒரு தலைமகன் வாராததால் தலைமகளிடம் அவள்து தோழியும் பிறரும் தலைமகனின் வருகை பிறழ்ந்தமை கூறி வருந்தினர். வருந்த வேண்டிய தலைவியோ, அதற்கு வருந்தாது என் காதலர் குறித்த காலத்தில் வந்துவிடுவார்; இது கார்காலம் இல்லை, ஏனெனில் அவர் பொய்கூறமாட்டார் என மறுமொழியுரைத்தாள். இதனை,

**கானங் காரெனக் கூறினும்**
**யானோ தேறே னவர்பொய்வழங் கலரே[12]**

என்னும் குறுந்தொகைப் பாடலடிகளால் அறியலாம். சங்க இலக்கியத் தலைமகள் தன் காதலன் மீது கொண்டிருந்த நம்பிக்கையை, தான் வரும்வரை ஆற்றியிரு என அவன் விடுத்த வேண்டுகோளைச் செவிமடுத்துத் தன் நிலையிலிருந்து மாறாமல் கற்புத்திறம் மேம்பட வாழ்ந்தமை உணர முடிகின்றது.

தலைவனின் சொற்களில் நம்பிக்கை வைத்தது போன்றே அவன் வரும்வரை ஆற்றியிருந்த தலைவியின் நிலையையும் சங்கப் பாடல்களில் காணலாம். குறுந்தொகைப் பாடலொன்றில் இக் கருத்து அழகுற மொழியப்பட்டுள்ளது. தச்சன் செய்த சிறிய தேரை இழுத்து இன்பமுறுகின்ற சிறுவர்கள் போல் தேரின்கண் அமர்ந்து செல்ல இயலாத நிலையில் அதனை இழுத்தாவது மகிழும் சிறுவர்களைப் போல்— தலைவனைச் சேராவிடினும் அவனிடத்து நட்பு மட்டும் பூண்டு மகிழ்ந்தேன். எனவே என் கைவளைகள் நெகிழ்ந்த நிலையிலிருந்து மாறிச் செறிவுற்றன எனக் கூறுகின்றாள் தலைவி.

**பொய்கை யூரன் கேண்மை**
**செய்தின் புற்றனெம் செறிந்தன வளையே**[13]

எனவரும் இப்பகுதி 'ஆற்றியிருத்தல்' என்னும் பண்பு நிலைக்குச் சீரிய எடுத்துக் காட்டாக அமைகின்றது. மற்றொரு தலைமகள் தலைமகனைக் கண்டாலே போதுமானது; அதுவே இன்பமுடைத்து; அவர் வேறெதுவும் தனக்குத் தரத்தேவையில்லை என்று கூறுவதும் இவண் கருதத்தக்கது.

**காதலர். நல்கார் நயவா ராயினும்**
**பல்காற் காண்டலு முள்ளத்திற் கினிதே**[14]

என்னும் இப்பகுதியும் தலைமகளின் ஆற்றியிருக்கும் அருங்குணச் சிறப்பிற்கு அணியாகின்றது.

அடுத்து, சங்கப் புலவர் ஒருவர் தலைமகன் கூற்றாக உரைக்கும்,

**ஆறிய கற்பின் அடங்கிய சாயல்**
**ஊடினும் இனிய கூறும் இன்னகை**
**அமிர்து பொதி துவர்வாய் அமர்த்த நோக்கிற்**
**சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்**[15]

என்னும் அடிகள் தலைமகளின் கற்பெனும் பண்புநலத்தைக் காட்டுகின்றது. இவற்றின் வாயிலாக அக்கால மகளிர் தலைவன்பால் நம்பிக்கையையும் அவன் வரும்வரை ஆற்றி யிருக்கின்ற தன்மையையும் அவன் சொற்படி நடக்கும் கேண்மையையும் நற்பண்புகளாகப் பெற்றிருத்தமை புலனா கின்றது.

தலைமகளைப் போன்றே அவளது தோழியும் நற்பண்பு களின் பெட்டகமாய் அமைதலைச் சங்கப்பாடல்கள்வழி அறிய முடிகின்றது. தோழி, தலைமகன் தலைமகள் இருவரின் அன்புக்கும் உரியவள்; அவ்விருவருக்கும் மாறாக் காதல் வாழ்வு வாய்க்கக் காரணமானவள்; அவ்விருவருக் கிடையே பாலமாய் அமைந்து அவர்தம் வாழ்வு சிறக்கப் பாடுபடுபவள். அவளது பண்புகளில் குறிப்பிடத்தக்கவை ஊடல் கொண்ட தலைமகனை ஆற்றுவிப்பதும் வரையாது வந்தொழுகும் தலைமகளை வரைதலுக்குத் தூண்டுவதும் ஆகும். பின்வரும் குறுந்தொகைப் பாடல் ஊடல் தணிவிக்கும் வாயிலாகத் தோழி ஒளிர்வதைக் காட்ட வல்லது.

**நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்**
**இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்கு**
**அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி**
**புலவியஃ தெவனோ அன்பிலங் கடையே**[16]

இதன்கண் தோழி தலைமகன் அன்னையாகவும் அத்தனாக வும் கருதத்தக்கவர். அவரால் நம் நலமும் அழகும் சிதைந்து சிறப்பு நேரினும் அவரிடம் புலவிகொள்ளுதல் கூடாது என அறிவுரை பகர்ந்து தலையை ஆற்றுவிக்கின்றாள். அதே நேரத்தில் தலைமகன் விரைந்து மணம்முடிக்க வேண்டும் இன்றேல் தலைவியின் இளமையும் அழகும் கெடும் என்பதை யும் குறிப்பாக உணர்த்துகின்றாள். குறிப்பாகப் பேசுதல் என்னும் அரும்பண்பை அக்கால மகளிர் பெற்றிருந்தமையை இப்பாடலால் அறியலாம். தோழி யின் சொல்வன்மைக்கு மற்றுமொரு குறுந்தொகைப்

பாடல் சான்றாகின்றது. வரைவு நீட்டித்த தலைவனை நோக்கிக் கூறப்பெற்ற இப்பாடலில் தலைவியின் பண்பு நலம், தோழியின் பண்பட்ட பேச்சுநலம் ஆகியன ஒருங்கே வெளிப்படுகின்றன.

**தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்டு**
**அன்னா வென்னும் குழவி போல**
**இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்**
**நின்வரைப் பினளென் தோழி**
**தன்னுறு விழுமங் களைஞரோ விலளே**[17]

என்னும் இப்பாடலின்கண், தாய் அடித்தாலும் குழந்தை 'அம்மா அம்மா' என்றுதான் சொல்லி அழும்; அது தன் தாயைவெறுத்து ஒதுக்கி விடுவதில்லை. அதுபோல நீ தலைவிக்கு இனியவை செய்தாலும் இன்னாதவை செய்தாலும் அவளுக்கு அடைக்கலம் உன்னைத் தவிர பிறர் இல்லை; அவளது துயரை நின்னையன்றிப் பிறர் எவரும் போக்கலர் என்று தருக்க நெறியோடு கூடிய வேண்டுகோளை மொழியும் தோழியின் பண்பைப் பார்க்க முடிகின்றது. அத்துடன் பண்டைத் தமிழ் மகளிர் தம் காதலரைத் 'தாய்' என்னும் உயர் நிலையில் கருதி அவரே தமக்கு எல்லாம் என்று எண்ணிய பாங்கினையும் இப் பாடலின் வழி உணரலாம். ஆடவரின் பீடுநடைக்குப் பெருங்காரணமாக இத்தகு பெண்களே விளங்குவர் என நம்மை எண்ணத் தூண்டுகின்ற பாடலாக இஃது அமைந்துள்ளது.

இனி, வறுமையிலும் செம்மையான வாழ்வு வாழ்ந்த பெண்டிரின் அருங்குணச் சிறப்பைக் காணுதல் இன்றியமையாதது. நற்றிணை தலைவியொருத்தியின் பண்பை அவளது செவிலித்தாய் புகழ்ந்துரைக்கின்றாள்:

**பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர் பொற்கலத்து ஒருகை ஏந்திப்**
**புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**

உண்ணென்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்த னள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளான்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே[18]

இப்பாடலில் அக்கால மகளிரின் குறிப்பாகத் தலைமகளின் உயிர்நிலைப் பண்பு வெளிப்படுகின்றது. என் மகள் சிறியவளாக இருக்கும்பொழுது பொற்கலத்தில் பால்சோறு ஏந்தி 'உண்ணுக உண்ணுக' என நான் திரும்பத் திரும்பக் கூறியும் ஏற்காது விளையாட்டிலேயே காலத்தைக் கழித்தாள். இப்பொழுது கணவன் வீட்டிலே வறுமையுற்ற நிலையில் தன் தந்தை கொடுத்தனுப்பிய செல்வத்தை ஏற்காது ஒரு பொழுது விட்டு ஒரு பொழுது உண்ணுகின்ற வறுமைச் சூழலில் வாழ்கின்றாள்; இதற்கு அறிவும் ஒழுக்கமும் அவள் எங்கிருந்து பெற்றாள் என வியந்து வினவுவதிலிருந்து தலைமகளின் செம்மார்ந்த வாழ்வினை பிறர்தர ஏற்றுக் கொள்ளாத உயரிய பண்பினை அறிய முடிகின்றது.

அடுத்து, விருந்தோம்பல் என்னும் பண்பு சங்க இலக்கிய மாந்தரிடம் செறிந்திருந்தமை உணர்தற்குரியது. சங்ககால மகளிர் நள்ளிரவில் விருந்தினர் வந்தபோதும் முகம் மாறுபடாது இனிமை நிரம்ப அவர்களை எதிர்கொண்டு அழைத்து உபசரித்தனர். இதனை,

அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியள் குறுமகள்[19]

என்னும் பாடலடிகளின்வழி அறியலாம். குறுந்தொகைப் பாடலொன்றில் விருந்தினர் எவரேனும் வெளியில் தங்கி விட்டார்களா? என ஏவலர்களை அனுப்பி அழைத்து வந்து உபசரிக்கும் பண்புடைய நிலை இருந்தமை சுட்டப் பெறுகின்றது.

........................மாலைப்
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ வெனவும்
வாரார் தோழி[20]

என்பதில் 'பலர்புகு வாயில்' என வரும் தொடர் குறிப்பிடத் தக்கது. நிறைய விருந்தினர்கள் வந்து செல்வதற்கேற்ற அகன்ற வாயில் என்பதை இத் தொடர் குறிக்கின்றது. பழந்தமிழர் விருந்தோம்புதலை ஒரு கடமையாகக் கருதிய பாங்கு இவண் நினைந்து மகிழத்தக்கது.

## புறம்

### வீரம்

தமிழர் அகவாழ்வில் திளைத்து அருங்கடன் ஆற்றியது போன்றே புறவாழ்விலும் செம்மை குன்றாது சீருடன் வாழ்ந்தனர். அவர்தம் புறவாழ்வு வெஞ்சமர் விரும்பி வீரம் வளர்க்கும் வாழ்வாக அமைந்தது. வீரம் உடம்போடும் உயிரோடும் சேர்ந்து பிறந்த பண்பாக அக் காலத்தில் விளங்கியது. குழவியிறப்பினும் ஊன்றடி பிறப்பினும் அதனை வாளால் வெட்டிய பிறகே புதைத்தல் அக் காலத்தவர் வழக்கம். இறப்பு இயல்பாக நேரக்கூடாது; போரினால்தான் ஏற்பட வேண்டும் என எண்ணிய தன்மை, நோக்கத்தக்கது. அக் கால அரசியல் சமுதாயச் சூழ்நிலைகளுக்கு வீரம் வேண்டியிருந்தது. அது ஒரு பண்பாகக் கருதப்பெற்றது. வாழ்க்கையின் நிலைபேறு வீரத்தின் அடியாக உருவெடுக்கிறது என அக்காலத்தவர் நம்பினர். அதன் விளைவாகவே

போர்கள் பல நிகழ்ந்தன. வஞ்சினம் கூறும் வழக்கமும் இதனடிப்படையில் தோன்றியதெனலாம். பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னை எதிர்த்து வரும் பகைவர்களை வெட்டிச் சாய்த்து வெற்றி கொள்ளாவிடில்,

**மாங்குடி மருதன் தலைவனாக**
**புலவர் பாடாது வரைக என்நிலவரை**

என வஞ்சினம் உரைத்து அவ்வாறே வெற்றியும் பெற்றான் என அறிகிறோம். இத்தகு வீரவுணர்வு ஆண்களிடத்தில் இருந்தது போன்றே பெண்டிரிடத்திலும் இருந்தது. நாட்டைக் காக்க வேண்டிப் போரில் மடிந்த தன் தமையனையும் கணவனையும் எண்ணிக் கலங்காத மறக்குலப் பெண்ணொருத்தி தன் ஒரே மகனையும் போருக்கனுப்பி வைத்த செய்தியைப் புறநானூறு புகல்கின்றது.

**இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்**
**பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுக நோக்கிச் செல்கென விடுமே**[21]

என்னும் பகுதியில் சிறுவயது மகனையும் செருக்களத்திற்கு அனுப்பும் மறக்குல மாண்பு பளிச்சிடுகின்றது.

வீரமில்லா இளைஞரை இக் கால மகளிர் வெறுத்தனர்; குறிப்பாக முல்லைநில மகளிர் வலிய, கொல்லும் தன்மையையுடைய காளையை அடக்க இயலாத ஆண்மகனை அடுத்த பிறவியில் கூட ஏற்க முன்வருவதில்லை என்னும் கருத்து காணப்படுகின்றது.

**கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆயமகள்**[22]

என்பதில் வீரப் பண்பை விரும்பும் மகளிரைக் காணலாம். எனவே, அக் காலத்தில் வீரவுணர்வு ஒரு மானிடப் பண்பாக

ஏற்றம் பெற்றிருந்தமையும் அது மகளிரிடத்தும் குடிகொண்டிருந்தமையும் தமிழ்ச் சமுதாயத்தின் வரலாற்றில் குறிப்பிடத் தக்கவையாகும்.

## பொருளீட்டல்

சங்க காலத்தில் பொருளீட்டி வாழும் வாழ்க்கை போற்றப்பட்டது. வாழ்வின் தேவைகளை நிறைவு செய்வதற்கு வேண்டிய செல்வத்தை ஒவ்வோர் ஆடவனும் முயன்று ஈட்ட வேண்டும். அவ்வாறன்றிப் பிறர் உழைப்பில் வாழும் வாழ்க்கையைப் பெருமையற்ற வாழ்க்கையாகக் கருதினர். இது பற்றியே,

**வினையே ஆடவர்க்கு உயிர்**

என்னும் சீரிய கருத்தும் எழுந்தது. மேலும்,

**உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்**
**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு**[23]

என உழைக்காத வாழ்வையும், பொருள் இல்லாத வாழ்வையும் இழிவாகக் கருதினர். செறுநர் செருக்கழிக்கும் எஃகாக விளங்கும் பொருளை ஈட்ட வேண்டி ஆடவர் அகல்வதை அவர்களுக்குரிய பண்பாகக் குறிப்பர். இதனை,

**செயல்படு மனத்தர் செய்பொருட்கு**
**அகல்வர் ஆடவர் அதுஅதன் பண்பே**[24]

என்னும் பாடற்பகுதி சுட்டும். எனவே, பொருளீட்டல் என்னும் வினை ஒரு பண்பாகப் பண்டைக் காலத்தில் கருதப்பட்டமை போதரும்.

## ஈகை

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு**

எனச் செல்வத்தின் சேகரிப்பையும் அது செலவழிக்கப்படும் முறையையும் கூறுவார் வள்ளுவப் பெருந்தகை. இயற்றல், ஈட்டல், காத்தல் இம் மூன்றுடன் பொருளின் பெருமை நின்று விடுவதில்லை. காத்தவற்றை முறையாகச் செலவிடுதல் இன்றியமையாதது. அத்தகு செலவினங்களுள் ஒன்றுதான் ஈகைப் பண்பு. செல்வத்தின் பயன் பிறர்க்குக் கொடுத்தலாகும். இதனை நக்கீரர் என்னும் புலவர்,

**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே[25]**

என மிகத் தெளிவாகச் சுட்டியுள்ளார். பண்டைத் தமிழர் தாம் ஈட்டிய செல்வத்தின் பெரும்பகுதியை இரவலர்க்கு இல்லையென்னாது வழங்கி இன்புற்றனர். தமிழக மன்னர்களிடம் இப்பண்பு மேலோங்கியிருந்தது.

**ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரோடு செல்லினும்**
**தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ[26]**

என அதியமானின் அருங்கொடைச் சிறப்பை ஔவையார் எடுத்தியம்புகின்றார். எத்தனை முறை சென்றாலும் இல்லையென்னாது கொடுக்க விரும்பும் பண்பை அதியனிடத்துக் காண்கிறோம். மேலும்,

**உண்டாயிற் பதங்கொடுத்து**
**இல்லாயின் உடனுண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்[27]**

எனவும் அதியனின் விருந்து புரந்தரும் மாண்பைப் புகழ்கின்றார் ஔவையார். முடிகெழு வேந்தரிடமும் காணுதற்கரிதாகிய ஈகைப் பண்பைக் கடையெழு வள்ளல்களிடம் காணலாம். பாரி, ஆய், குமணன், பேகன் முதலானவரின் ஈகைச் சிறப்பைப் புலவர் பெருமக்கள் போற்றிப் பாடியுள்ளனர். சேர மன்னவன் ஒருவன்,

கொடைக்கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்.[28]

எனப் புகழப் பெறுகின்றான். மற்றொரு சேரவேந்தன் இரவலரைத் தேடிச் சென்று பொருள் வழங்குதலை,

வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்
தேரின் தந்தவர்க்கு ஆர்பதன் நல்கும்.[29]

எனவரும் புகழுரையால் அறியலாம். இவ்வாறு மன்னர்கள் பலரும் தம்மை நாடி வந்தவர்க்கு வேண்டுவன வழங்கி மகிழ்ந்தமை பண்டைத் தமிழ் இலக்கியப் பாக்களின் துணையால் அறியலாகின்றது.

மன்னரையும், பிற புரவலரையும் நாடிச் சென்று பரிசில் பெற்றுவரும் புலவர்களும் தம்மிடமுள்ள பொருளை நாளைக்குத் தேவைப்படுமே என எண்ணிச் சேர்த்து வைக்காது இல்லாதவர்க்கு வழங்கிய திறத்தையும் புறநானூற்றுப் பாடல்வழி அறியலாம். குமண வள்ளலிடமிருந்து பெற்றுவந்த செல்வத்தை,

எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே[30]

எனப் புலவர் பெருஞ்சித்திரனார் தம் மனைவியிடம் கூறுவது இதனை மெய்ப்பிக்கும்.

இரத்தல் இழிவானதாகவும் இரப்பவர்க்கு இல்லையெனல் அதைவிட இழிவாகவும் கருதப்பட்ட சூழலை,

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேனென்றல் அதனினும் இழிந்தன்று[31]

என்னும் பாடற்பகுதி உரைக்கின்றது. இதனை நன்குணர்ந்த நிலையில் பழந்தமிழர் தம்மிடம் வருவோர்க்கு வழங்கி இன்புற்றனர். எனவே அவர்களிடம் ஈகைப் பண்பு மேலோங்கியிருந்ததென ஐயத்திற்கிடமின்றி உரைக்கலாம்.

## புகழ்

மண்ணக மாந்தர் ஒவ்வொருவரும் புகழை நாடுதல் இயல்பு. நற்சிந்தை, நற்செயல், நற்பேச்சு ஆகியன மனிதன் புகழடைவதற்கு உதவுவன. பண்டைத் தமிழர் புகழுடை வாழ்வே வாழ விரும்பினர். ‘மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே’ என்னும் புறப்பாடலடி இதனை நிறுவும். புகழெனின் உயிரையும் தர முன் வந்தனர். அத்தகைய பண்பாளரின் இயல்புகளைப் புறநானூற்றுப் பாடலொன்று சித்திரிக்கின்றது:

**உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்**
**துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சி**
**புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்!**
**அன்ன மாட்சி அனைய ராகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே[32]**

என்னும் இப்பாடலில் இவ்வுலகம் நிலை பெற்றிருப்பதன் காரணம் விளக்கப்பட்டுள்ளது. புகழுக்காகத் தம்மின்னுயிரையும் ஈயவல்ல சான்றோர்கள் நிலவுலகில் உள்ளனர். அவர்கள் உலகத்தையே பெறுவதாக இருந்தாலும் பழிச் செயல் புரியாதவர்கள்; அயர்ந்து விடாது உழைப்பில் ஆர்வம் செலுத்த வல்லவர்கள்; தன்னலம் கருதாது பிறர் நலம் பேணும் பெருந்தகையாளர்கள். அத்தகையோரின் அருங்குணப்பண்புகளே இவ்வுலகை அழியாது காக்கின்றன என்னும் கருத்து சாலப் பொருத்தமானது. அத்துடன் இப் பாடல்வழிப் பண்டைத் தமிழரின் பண்பாட்டுக் கோலத்தைத் தெள்ளிதின் உணர முடிகின்றது.

## வாழ்வியல் உண்மைகள்

நம் முன்னோர் வாழ்க்கை என்னும் அனுபவத்தில் பிறந்த உயரிய உண்மைகள் பலவற்றை எந்நாளும் நிலைத்திருக்கவல்ல, மனித வாழ்வைச் செம்மைப்படுத்தி மேம்படுத்த வல்ல சீரிய கருத்துகள் பலவற்றை எளிய தமிழில் இனிய பாடல்களில் பொதிந்து வைத்துள்ளனர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றையுடைய தமிழர்களின் பண்பாட்டுச் செல்வமாக அக்கருத்துகள் நின்று நிலவுகின்றன. அவை மனித சமுதாயம் முழுமைக்கும் பொதுவான, மனித சமுதாயம் முழுவதும் ஏற்றுக்கொள்ளத்தக்க அறநெறி சார்ந்த அருங்கருத்துகளாகும்.

சொல் திறம்பாமை—அதாவது சொன்ன சொல்லிலிருந்து வழுவாமை என்பது ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய பண்பாகும். இதனை,

**நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்**[33]

என்னும் தொடர் வலியுறுத்துகின்றது. நன்றி மறப்பது ஒரு பாவமான செயல்; நன்றி மறந்தவனுக்கு உய்தி கிடையாது என்பது அக்கால அறம்.

**நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென**
**அறம் பாடிற்றே**[34]

எனச் செய்நன்றிச் சிறப்பைக் கூறுகின்றது புறநானூறு. சொன்ன சொல் வழுவாதிருத்தல் போன்றே சொல்லும் சொல்லை வாய்மையுடையதாகச் சொல்லுதல் ஒரு சிறந்த பண்பாகும். புரைதீர்ந்த நன்மை பயக்குமெனில் பொய்யுரைக்கலாம் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. சங்கப் புலவர் ஒருவரும் இக்கருத்தைச் சற்று மாற்றி,

**வாழ்தல் வேண்டிப்**
**பொய்கூறேன் மெய்கூறுவல்**[35]

எனச் சிறுசிறு பயன்களுக்காகப் பொய்யுரை பகர்தலைத் தவிர்க்கிறார்.

ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் வாழப் போகும் காலம் குறுகியது. இக்குறுகிய காலத்தில் மன்னுயிர்க்கெல்லாம் நன்மை செய்து வாழ்வதைக் குறிக்கோளாகக் கொள்வது உலகம் உய்வதற்கான வழியை வகுக்கும். எனினும் காலச் சூழலும் சமூக நெருக்கடிகளும் மனிதனை நன்மை செய்யவொட்டாது தடுக்கின்றன. இந்நிலையில் அவன் பிறருக்குக் கெடுதல் செய்யாது இருத்தலே போதுமானது. அதுவே அவன் செய்யும் நன்மையாகக் கருதப் பெறும். இக்கருத்தையே,

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே**[36]

என ஔவையார் தம் பாடலின்மூலம் உரைத்துள்ளார். மனிதனை நல்லாற்றுப்படுத்தும் நெறியாக அல்லது செய்யாதிருத்தல் என்னும் பண்பைக் கருதி அதனை நம்முன்னோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மனிதர்களின் வாழ்வு வினைப்பயன் சார்ந்தது. மனிதன் செய்த நல்வினைகள் நன்மையையும் திவினைகள் தீமையையும் தருவன. இக்கருத்தை இறையியலார் அடிக்கடி வலியுறுத்துவர். இறைக் கொள்கையில் உறுதி கொண்ட நம் ஔவையாரும்,

**வாழச் செய்த நல்வினை யல்லது**
**ஆழுங் காலை புணைபிறி தில்லை**

என வினைவழி வாழ்வு அமைவதைச் சுட்டி மக்களுக்கு நற்பண்பினைப் புகட்டுகின்றார். இதிலிருந்து பழந்தமிழர்

வினைப் பயனில் நம்பிக்கை கொண்டிருந்தமை தெளிவுறுகின்றது.

வினையின் நீங்கி விளங்கிய அறிவனாகிய செவ்வேள் முருகனைச் சிந்தையுள் இருத்தி வழிபடும் பழந்தமிழர்,

.........யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும்அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர் கடம்பின் ஒலிதா ரோயே[37]

என அருளையும் அன்பையும் அறனையும் மட்டுமே வேண்டுகின்றனர். பொன், பொருள், போகம் வேண்டாத அவர்தம் அருட்பண்புக்கு இஃது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அடுத்து, வாழ்வின் உண்மைகள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துரைக்கும் கணியன் பூங்குன்றனாரின் பாடல் பழந்தமிழ்ப் பண்பாட்டு நிலையை உலகிற்கு எடுத்துக் காட்டும் உயரிய பாடலாக விளங்குகிறது. இதன்கண் இடம் பெற்றுள்ள கருத்துகள் யாவும் அனுபவப் பிழிவெனக் கொள்ளத்தக்கவை. விரிந்துபரந்த இவ்வுலக மக்களை எல்லாம் உறவினராகத் தழுவிக் கொள்ளும் மனப் பக்குவத்தை இப்பாடல் வளர்க்கின்றது. நன்மையும் தீமையும் பிறர்தர வருவன அல்ல; அவரவர் செயலால் விளைவன இறப்பெய்தல் புதுமையானதன்று; வாழ்வை இனிது, இன்னாது எனக் கூறாது அமைதல் முதலான கருத்துகள் மனித வாழ்வு உரமும் உறுதியும் பெறவும், மானுடம் போற்றல் என்னும் பண்பைப் பெறவும் உதவுகின்றன.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்

**இன்னாது என்றலும் இலமே மின்னொடு**
**வானம் தண்டுளி தலைஇ யானாது**
**கல்பொரு திறங்கும் மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே**[38]

எனவரும் இப்பாடலின் ஒவ்வோரடியிலும் உயிர்ப்புடைய பண்புநலம் ஒளி வீசித் திகழ்கின்றது. உடலிலிருந்து உயிர் பிரிந்து சென்று சேரும் முறையைப் பெருவெள்ளத்தின் போக்கிற்கேற்பச் செல்லும் புணைக்கு ஒப்புமைப்படுத்தி—மிக அரிய ஆழமான கருத்தாயினும்—எளிமையாக உரைத்திருப்பதும் ஒரு பண்பு நலமேயாம். சங்க இலக்கியப் பாடல்கள் பலவும் தனித்தனியே உணர்த்துகின்ற பண்பாட்டுக் கூறுகள் யாவும் இப்பாடலில் ஒருங்கே அமைந்துள்ளன. எனவே இதனையே சங்க இலக்கியம் உணர்த்தும் பண்பாடு எனவும் கொள்ளலாம்.

## முடிவுரை

பண்டைத் தமிழர்தம் பண்பாட்டு நிலைகள் அவர்களது அகவாழ்விலும் புறவாழ்விலும் பொலிந்து சிறத்தலை மேற்கண்ட கருத்துகள் உறுதிப்படுத்துகின்றன. சுருங்கக் கூறின் செம்மைநாடும் சிந்தை, மனித நேயம் போற்றல், பிறர்நலம் பேணும் பெற்றிமை, தன் நிலையிலிருந்து வழுவாமை, எவ்வுயிர்க்கும் இன்னருள் புரிதல் என்னும் நற்பண்புகளின் சிகரமாய் நந்தமிழ்ச் சான்றோர் வாழ்ந்து வாழ்வை வனப்புடையதாக்கினர். அச்சீரிய வாழ்வினைச் சங்க நூல்கள் நேரிய முறையில் எடுத்துமொழிவதை இயல்பாகக் கொண்டுள்ளன. சங்க இலக்கியம் முழுமையும் நாம் அலசிப் பார்க்கும்பொழுது கிடைக்கும் பேருண்மை இதுவெனலாம்.

## குறிப்புகள்

1. குறள். 996.
2. குறுந்தொகை 44:3-4.
3. பட்டினப்பாலை 219-220.
4. அகநானூறு 91:17-18.
5. குறுந்தொகை:3
6. அகநானூறு 17:9-10.
7. அகநானூறு 5:4-5.
8. குறுந்தொகை 200: 4.
9. சிலம்பு. கானல் வரி 32.
10. பாலைக்கலி 5: 9-11.
11. ஐங்குறுநூறு 203: 9 : 4.
12. குறுந்தொகை 21: 4-5.
13. குறுந்தொகை 61: 5-6.
14. குறுந்தொகை 60 :4-6.
15. பதிற்றுப்பத்து 2 6: 10.13.
16. குறுந்தொகை 93.
17. குறுந்தொகை 397: 4-8.
18. நற்றிணை 110.
19. நற்றிணை 142: 9-11.
20. குறுந்தொகை 118: 2-5.
21. புறநானூறு 279: 7-11.
22. முல்லைக்கலி 3: 63-64.
23. குறுந்தொகை 283: 1-2.
24. நற்றிணை 24: 8-9.
25. புறநானூறு 189: 7-8.
26. புறநானூறு 101: 1-3.
27. புறநானூறு 95: 6-8.
28. பதிற்றுப்பத்து 2 10: 24.
29. பதிற்றுப்பத்து 4 10: 11.
30. புறநானூறு 165.

31. புறநானூறு 204: 1-2.
32 புறநானூறு 182.
33. புறநானூறு 3: 14.
34. புறநானூறு 34: 5-7.
35. புறநானூறு 139: 5-6.
36. புறநானூறு 195: 6-9.
37. பரிபாடல் 5: 79-81.
38. புறநானூறு 192.

# 3. புறத்திணை நன்னாகனார் பாடல்கள்

## தோற்றுவாய்

பண்டைத் தமிழர்தம் அரசியல் முறையை—பண்பாட்டு வாழ்க்கையை—பொருளாதாரச் செழுமையை—புலவர்தம் உள்ளத்து உணர்வுகளை அறிய உதவும் கருவியாகத் துலங்குவது புறநானூறு. வரலாற்றுக் கருவூலமாகத் திகழும் இப்புறநானூற்றுள் பெரும்பாலான பாடல்கள் கலைஞர்கள் பழுமரம் தேடும் பறவைகளாவும், மன்னர்கள் அக்கலைஞர் தம் பசிப்பிணி தீர்க்கும் உரவோராகவும் விளங்கினமையைச் சித்திரிக்கின்றன. இன்னணம் பழுமரம் தேடும் புறவை களாய்ப் புரவலர்களை நாடி, அவர்தம் பொன்றாப் புகழ் பாடி, பரிசில் வாழ்க்கை நடாத்தும் நல்லிசைச் சான்றோர் ஒருவரான புறத்திணை நன்னாகனார் பாடல்கள் குறித்து ஆய்வதே இக்கட்டுரை.

## புலவர் பற்றிய செய்திகள்

புறத்திணைத் துறையைப் பாடுவதில் வல்லவர். அது பற்றியே இவர் புறத்திணை நன்னாகனார் எனப் பெயர் பெற்றார். பாரி பறம்பின் சுனை, கரும்பனூர் முதலியன இவராற் பாடப்பெற்றன. இவர் நன்னாகனார் எனவும், நன்னாதனார் எனவும் அழைக்கப்பட்டமையை ஏட்டுச் சுவடிகள் குறித்து நிற்கின்றன. இவர் ஓய்மான் நல்லியக்

கோடன், ஒய்மான் வில்லியாதன் கரும்பனூர் கிழான் முதலிய வள்ளியோர்களைப் பாராட்டி உரைத்துள்ளார்.

## பாடல் மரபு

ஒரு பாடல் நல்லியக் கோடனையும், ஒரு பாடல்ஒய்மான் நல்லியக் கோடனின் வழித்தோன்றலாய ஒய்மான் வில்லியாதனையும் இரண்டு பாடல்கள் கரும்பனூர் கிழானையும் சிறப்பித்து உரைக்கின்றன, திணை வழி நோக்கும்போது நான்கு பாடல்களும் பாடாண்திணைப் பாடல்களாகவே காணப்படுகின்றன. துறைவழி நின்று பார்க்கும்போது ஒய்மான் நல்லியக் கோடனை இயன்மொழி வாழ்த்துத் துறையிலும் ஒய்மான் வில்லியாதனைப் பரிசில் துறையிலும் கரும்பனூர் கிழானை இயன்மொழி வாழ்த்து, கடைநிலை ஆகிய துறைகளிலும் வைத்துப் பாடுவதாகக் காணப்படுகின்றன. கூற்றுவகையான் காணும்போது ஒய்மான் நல்லியக்கோடனைக் கிணைப் பொருநன் ஒருவன் கூற்றில் வைத்துப் பாடுகின்றார். ஒய்மான் வில்லியாதனை, கிணைப் பொருநன் ஒருவன் அவன் சிறப்புகளைக் கூறக்கேட்டுத் தான் வந்ததாகப் பாடுகின்றார். கரும்பனூர் கிழானைப் பாணரும் கிணைவரும் ஆகிய சுற்றத்தாருடன் சென்று காண்கின்றார். மற்றொரு பாடலில் கரும்பனூர் கிழானைக் கிணைப் பொருநன் கூற்றில் வைத்துப் பாடுகின்றார். நான்கு பாடல்களில் இரண்டு பாடல்களில் கிணைப் பொருநன் குரலினையும் புலவர் இரண்டு பாடல்களில் புலவர் குரலினையும் கேட்கின்றோம்.

## திணை விளக்கம்

பாடப்பட்ட ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது பாடாண்திணை. அதாவது பாடப்படும் மன்னனின் இசை, வன்மை, வண்மை ஆகியவற்றைக் கிளந்து ஓதுவது பாடாண்திணை.

**ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்**
**அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று**

என இலக்கணம் வகுக்கின்றது புறப்பொருள் வெண்பா மாலை. இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ் கின்றன புறத்திணை நன்னாகனார் பாடல்கள்.

## துறை விளக்கம்

புறத்திணை நன்னாகனார் பாடல்கள் நான்கில் மூன்று துறைகள் காணப்படுகின்றன. அவை இயன்மொழி வாழ்த்து, பரிசில் துறை கடைநிலை என்பன. இவற்றுள் இயன்மொழி வாழ்த்தாவது "இன்ன வள்ளல் இன்ன பொருளை நல்கினான். அன்னோன் போல நீயும் எமக்கு வரையாது வரைக' என இரவலன் புரவலனுக்குக் கூறியது ஆகும். இதனை,

**இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்**
**அன்னோர் போல அவை எமக் கீயென**
**என்னோரும் அறிய எடுத்துரைத் தன்று**

என்ற புறப்பொருள் வெண்பாமாலைக் கொளுவினால் தெளியலாம். இவையன்றி மன்னவன் இயல்பினைப் புகழ்ந்து கூறலும் இயன்மொழி வாழ்த்து என்பதனை,

**மயிலறு ஓர்த்தி மாண்தேர் மன்னவன்**
**இயல்பே மொழியினும் அத்துறை யாகும்**

என்றதனால் அறியலாம், தொல்காப்பியனார் இதனை 'அடுத்தூர்ந் தேத்தி இயல் மொழி வாழ்த்து' எனக் குறிக்கின்றார்.

ஓய்மான் வில்லியாதனைப் பரிசில் துறையில் வைத்துப் பாடுகின்றார். பரிசில் துறையாவது இரவலன், வேந்தன்

முன்னே சென்று தான் பெறக் கருதிய பரிசில் இதுவெனக் கூறுவதாம். இதனை,

**மண்ணகங் காவல் மன்னன் முன்னர்**
**எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று**

என்பதனால் தெளியலாம்.

கரும்பனூர் கிழானைக் கடைநிலைத் துறையில் வைத்துப் பாடுகின்றார். அரண்மனை வாயிலை அடைந்த இரவலன் தன் வருகையை மன்னனுக்கு அறிவிக்குமாறு இரவலனுக்குக் கூறுவது வாயில்நிலை என்னும் துறையாகும். புறப்பொருள் வெண்பா மாலை வாயில் நிலை எனக் கூறுகின்றது. தொல்காப்பியம் கடைநிலை எனச் சுட்டுகின்றது.

**புரலவன் நெடுங்கடை குறுகிய என்னிலை**
**கரவின் றுரையெனக் காவலற் குரைத்தன்று**

என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

**சேய்வரல் வருத்தம் விட வாயில்**
**காவலர்க் குரைத்த கடைநிலை**

என்பது தொல்காப்பியம்.

## பாடல் தலைவர்கள்

புறத்திணை நன்னாகனார் பாடல்கள் நான்கின் பாட்டுடைத் தலைவர்களாக மூவர் விளங்குகின்றனர். இவர்கள் மூவருமே குறுநில மன்னர்களாக இருந்தவர்கள்.

ஒய்மான் நல்லியக்கோடன் ஒய்மானாட்டு நல்லியக் கோடன் எனவும் வழங்கப்படுவன். பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகத்துலங்கும் சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத்

தலைவன். கடையெழு வள்ளல்களுக்கு முற்பட்டவன். இவன் நல்லூர் நத்தத்தனார் புறத்திணை நன்னாகனார் இருவரின் இசைமாலையினைச் சூடியவன். நாகர் வகுப்பினுள் ஒரு பிரிவு எனப்படும் ஒவியர்குடியிற் பிறந்தவன் எனக் கருதப் படுகின்றான். இவன் ஏறுமா நாட்டு நல்லியக்கோடன் எனவும் வழங்கப்படுகின்றான்.

ஓய்மான் வில்லியாதன் ஓய்மான் நல்லியக்கோடனின் வழித்தோன்றல். இவன் இலங்கை என்னும் ஊர்க்கு இறைவன். இவ்விலங்கை மாவிலங்கை என்னும் ஊராகக் கருதப்படுகிறது. இம்மாவிலங்கை புனனாட்டுக்கு வடக்குள்ள அருவி நாடு, அருவா வடதலைநாடு இரண்டும் சேர்ந்த இடமாகக் கருதப்படுகிறது. இவனைப் பாடிய புலவர் புறத்திணை நன்னாகனார் ஒருவர் மட்டுமே.

கரும்பனூர் கிழான் வேங்கடமலைக்குத் தலைவன். கரும்பனூர் என்பது தொண்டை நாட்டுத் திருவேங்கடக் கோட்டத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊர். திருக்கழுக்குன்றத் துக் கல்வெட்டு ஒன்று 'கரும்பனூர் வணிகன் ஆதித்த' என்று குறிக்கின்றது. இவன் அறத்துறை அம்பி போல் விளங்கு பவன். மண் நாண புகழ் வேட்டு நீர் நாண நெய் வழங்கு பவன். இவன் வள்ளியனாகவும் வலியனாகவும் ஊமையனா கவும் துலங்குமாற்றைப் புறத்திணை நன்னாகனார் தம் பாடல்களில் சிறப்பித்து உரைக்கின்றார்.

## பாடல் அமைப்பு

நான்கு பாடல்களின் அமைப்பினை நோக்கும்போது ஒரு பகுதி புலவரின் வறுமையைச் சித்திரிப்பனவாகவும், ஒரு பகுதி வள்ளலின் சிறப்பினைப் போற்றுவதாகவும் அமைகிறது. வள்ளலைக் காண்பதற்கு முன் தாம் இருந்த நிலை, வள்ளலைக் கண்ட பின்பு தான் பெற்ற வளம் இவற்றைத் தன் பாடல்களில் தெளிவாகக் காட்டுகின்றார்.

மன்னனின் நாட்டுவளம், அவன் வெற்றிச் சிறப்பு, கொடைச் சிறப்பு இவற்றைப் பற்றி விரிவாகப் பேசுகின்றார்.

## புரவலர் நாட்டுச் சிறப்பு

புலவர்கள் தாம் காணும் வள்ளலைப் பாடிப் பரவி நிற்கும்போது அவன்தன் நாட்டுச் சிறப்பினை வாழ்த்தி உரைப்பது மரபு. இந்த நிலையில் புறத்திணை நன்னாகனார் ஓய்மான் வில்லியாதனைச் சென்று காணும்போது அவன்தன் ஊராகிய மாவிலங்கையின் வளத்தைக் கூறிச் சிறப்பிக்கின்றார். நெல்லரி தொழுவர் தம்முடைய கூரிய வாள் வாய் மழுங்கி விட்டதெனின் பின்னரும் மறத்தோடு அரியவேண்டிச் சேற்றிலே கிடக்கும் யாமையின் வளைந்த முதுகினையே கல்லாகக் கொண்டு தீட்டும் நெற்பயிர் நெருங்கிய விளைவயல்களையுடைய மாவிலங்கை என அதன் சிறப்பினைக் கூறுகின்றார். இதனை,

**நெல்லரி தொழுவர் கூர்வாண் மழுங்கிற்**
**பின்னை மறத்தோ டரியக் கல்செத்து**
**அள்ளல் யாமைக் கூன்புறத் துரிஞ்சும்**
**நெல்ல மல்புரவின் இலங்கை** (புறம். 376)

என்ற புறநானூற்றுப் பகுதியால் தெளியலாம்.

மேலும் இந்த ஓய்மான் வில்லியாதனின் ஊர் அரணை அடுத்த ஆழ்ந்த அகழியினையும் நீண்ட மதிலினையும் உடையது. இவன் தன் திருமனையானது செல்வமிக்கது. இத்திருமனைக்கண் தோன்றும் நறிய புகை மழைமுகில்போல மறுகெல்லாம் நிறைந்து விளங்கும் என்பதனை,

**திருவுடைத் திருமனை ஐதுதோன்றுகமழ்துகை**
**வருமழை மங்கலின் மறுகுடன் மறைக்கும்**
**குறும்படு குண்டகழ் நீண்மதி லூரே**

என்ற பாடல் அடிகளில் அறிவிக்கின்றார் ஆசிரியர் நன்னாகனார்.

கரும்பனூர் கிழானின் வேங்கட நாட்டில் அருவிகள் ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதை,

**ஒலி வெள்ளருவி வேங்கட நாடன்**

எனக் கூறுகின்றார். புறத்திணை நன்னாகனார் ஓய்மான் நல்லியக்கோடனின் நாட்டுச் சிறப்பினைப் பற்றிப் பேச வில்லை.

## புரவலரின் கொடைச் சிறப்பு

தமிழக வரலாற்றை நோக்கும்போது மன்னர்கள் புலவரைப் போற்றும் செம்மல்களாகத் துலங்கினமையைக் காண்கின்றோம். புலவர் பாடும் புகழைப் பெறற்கரும் பெரும்பேறாகக் கருதியவர்கள் தமிழ் மன்னர்கள். புறத்திணை நன்னாகரின் நாவிசை நுவறலைப் பெற்ற ஓய்மான் நல்லியக்கோடன் தம்மை உள்ளி வந்தவர்க்கு வரையாது வழங்கும் வண்கையன். அவன்தன் வள்ளண் மையைப் புறத்திணை நன்னாகனார் கிணைப்பொருநன் ஒருவன் கூற்றில் வைத்துப் போற்றுகின்றார். புலவரின் நைந்து கறை படிந்த உடையை நீக்கி நானுமடி கலிங்கம் நல்கி, அரவு வெகுண்டன்ன தேறலையும் சூட்டிறைச்சியை யும் தந்து நிரயத்தன்ன வறுமையை நீக்கும் கொடையாளன் என்பதை,

**பண்டறி வாரா வுருவொ டென்னரைத்**
**தொன்றுபடு துளையொடு பருவிழை போகி**
**நைந்துகறை பறைந்த என்னுடையு நோக்கி**
**விருந்தினன் அளியன் இவன்எனப் பெருந்தகை**
**நின்ற முரற்கை நீக்கி நன்றும்**
**அரவுவெகுண் டன்ன தேறலொடு சூடுதருபு**
**நிரயத் தன்னவென் வறன்களைந் தன்றே**

என்ற பாடலடிகளில் வடித்துக் காட்டுகின்றார்.

ஓய்மான் வில்லியாதன் இரவலர்க்கு குறுந்தாலேற்றைக் கொழுங்கண் நல்விளர் நறுநெய் உருக்கி நாட்சோறு ஈந்து பசிதீர்க்கும் வள்ளியன் என அவன் கொடைச்சிறப்பைப் பசிப்பிணி தீர்க்கும் மருத்துவனாய் விளங்கும் பான்மையைச் சித்திரிக்கின்றார்.

**குறுந்தா ளேற்றைக் கொழுங்கண் நல்விளர்**
**நறுநெய் யுருக்கி நாள்சோ றீயா**
**வல்லன் எந்தை பசிதீர்த்தல் என**

என்பது அப்பகுதி.

ஒலிவெள்ளருவி வேங்கடங் கிழவனாய் கரும்பனூரன் ஊனும் ஊணும் முனையின் பாலிற் பெய்தவற்றையும், பாகிற் கொண்டவற்றையும் அளவாகக் கலந்து இனிதென விருந்தினர்க்கும் அளிக்கும் தகையன்,

**இருநிலம் கூலம் பாறக் கோடை**
**வருமழை முழக்கிசைக் கோடிய பின்றையும்**

வாரி வழங்கும் நீர்மையன். மேலும் இக்கரும்பனூர் கிழான் உறுவருஞ்சிறுவரும் ஊழ்மாறு உய்க்கும் அறத்துறை அம்பி போன்றவன் என்றெல்லாம் அவன் தன் கொடைச் சிறப்பினைப் பாராட்டி உரைக்கின்றார்.

மேலும் இக்கரும்பனூர் கிழானின் கொடை நலத்தை மற்றொரு பாட்டில் விரித்துரைக்கின்றார். இவன் நெல்லும் பொன்னும் நறவும் மிக உடையவன். இரவலர்கள் அவற்றால் குறைவுறும்போதும் அவன் அவற்றைத் தந்துதவுபவன்.

**நிணம் பெருத்த கொழுஞ் சோற்றிடை**
**மண்ணானப் புகழ்வேட்டு**
**நீர்நாண நெய்வழங்கி**

புரக்கும் இயல்புடையனாதலின் வெள்ளியாண்டு நிற்பினும் இரவலர்க்கு உண்ட நன்கலம் பெய்து நுடக்கவும், தின்ற

நண்பல் ஊன் தோண்டாவும் வழங்கும் வண்மையன் எனப் போற்றி உரைக்கின்றார்.

## புலவர் உள்ளம்

புறத்திணை நன்னாகரின் பாடல்களை நோக்கும்போது அவர்தம் புலமைச் செருக்கினையும் உறுதிப்பாட்டினையும் உள்ள விழைவினையும் நன்கு தெளியமுடிகிறது. ஓய்மான் நல்லியக் கோடனிடம் சென்று பரிசில் பெற்று வரும் புறத்திணை நன்னாகனார்,

**இரவினானே யீத்தோன் எந்தை**
**அன்றை ஞான்றினோ டின்றி னூங்கும்**
**இரப்பச் சிந்தியேன்**

எனக் கூறுகின்றார். இனி ஒரு மன்னனிடம் சென்று பரிசில் வேண்டி நிற்க மாட்டேன் எனக் கூறும் புலவர்தம் உள்ளத்து உறுதியினை இவ்வடிகள் உணர்த்தி நிற்கின்றன.

உள்த்தின் நிகழ்வனவற்றை உள்ளத்தால் அள்ந்தறியும் விளங்குகின்ற புலமையையுடையவன்தான் என்பதை

**உளத்தின் அளக்கும் 'விளிர்ந்த தகையேன்**

எனக் கூறுவதால் புலவர்தம் புலமைச் செருக்கினை—தம் புலமையில் அவர் கொண்ட அசையா நம்பிக்கையை அறிய முடிகிறது.

ஓய்மான் வில்லியாதனைப் பற்றிப் பாடும்போது அவன் தன் அருள் நிழலில் வாழும் பேறு தனக்கு உண்டாக வேண்டும் என்றும், தன் நாவிசை நுவறலைப் பெறும் பேற்றினை அவன் பெறவேண்டும் என்றும் கூறுவது புலவர் தம் உள்ளத்து விருப்பத்தினை அறிவதற்குவாயிலாக அமைகிறது.

**யானே பெறுக அவன் தாணிழல் வாழ்க்கை**
**அவனே பெறுக என்நாவிசை நுவறல்**

என்பது அப் பகுதி. ஓய்மான் நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று மீண்டு வரும் புலவர் தம் உள்ளத்து மகிழ்ச்சியை நிறைக்குளப்புதவிற்கு உவமைப்படுத்தி உரைப்பதால் புலவரின் மன மகிழ்ச்சியையும் அறிய முடிகிறது.

## புரவலர் மாட்சி

ஓய்மான் நல்லியக்கோடன் வறுமையை வீட்டுப் புணையாக இருந்தமையை,

**நிரப்படு புணையின்**

என்ற தொடர்வழி உணர்த்துகின்றார் புலவர் புறத்திணை நன்னாகனார். மேலும் அவன் நேரம் காலம் பார்க்காமல் வழங்குபவன் என்பதை,

**இரவினானே ஈத்தோன் எந்தை**

எனக் குறிக்கின்றார்.

கரும்பனூர் கிழான் உறுவரும் சிறுவரும் ஊழ்மாறு உய்க்கும் அறத்துறை அம்பி போன்றவன். மேலும் அவன் கொண்ட கொள்கையினின்றும் மாறாதவன் என்பதை,

**உறுவருஞ் சிறுவரும் ஊழ்மா னுய்க்கும்**
**அறத்துறை யம்பியின் மான மறப்பின்**
**றிருங்கோ ளீராப் பூட்கைக்**
**கரும்ப னூரன் காதன் மகனே**

என்ற பாடல் அடிகள் உணர்த்தி நிற்கின்றன. இவன் இல்லை என்று வரும் இரவலர்களிடம் பெரிதும் அன்புடையவன். இரவலர்கள் தன்னுடன் நீண்ட நாள் தங்கியிருந்து பின்னர் பிரிந்து செல்கின்றார் எனில்,

துணரியது கொளா வாகிப் பழமூழ்த்துப்
பயம்பகர் வறியா மயங்கரின் முதுபாழ்ப்
பெயல்பெய் தன்ன செல்வத் தாங்கண்
ஈயா மன்னர் புறங்கடைத் தோன்றி

சிதார் வார்பின் சிதர்ப்புறத் தடாரியின் ஊன்சுகிர் வலந்த தெண்கண் ஒற்றி விரல்விசை தவிர்க்கும் அரலையில் பாணி பாடித்தம் இலம்பாட்டினை நீக்கிக் கொள்வது துன்பம் தரும் செயல் ஆதலின் இரு நிலம் கூலம் பாறக் கோடை வருமழை முழக்கிசைக்கு ஓடிய பின்னரும் அண்மையில் இருந்த போதிலும், சேய்மையில் இருந்த போதிலும் தன்னிடம் வருக எனக் கூறுவது அவன்தன் உயர்ந்த உள்ளத்தைப் புலப்படுத்தி நிற்கிறது.

## புலவர் புரவலரை அணுகும் முறை

புறத்திணை நன்னாகனார் பாடல்களை நோக்கும்போது புலவர் புரவலர்களைத் தனித்தும் தம் இரும்பேர் ஒக்கலுடனும் சென்று கண்ட இரு நிலைமையினை அறிய முடிகிறது. தனித்துச் செல்லும்போது தாமாகவே செல்லல், அப் புரவலன் புகழினைப் பிறர் கூறக்கேட்டு அதனால் விருப்புற்றுச் செல்லல் ஆகிய இரண்டு முறைகளைக் காண்கிறோம். ஓய்மான் நல்லியக்கோடனைத் தனித்துச் சென்று கண்டார் என்பதை,

விசும்பு நீத்தம் இறந்த ஞாயிற்றுப்
பசுங்கதிர் மழுகிய சிவந்துவாங் கந்தி
சிறுநனி பிறந்த பின்றைச் செறிபிணிச்
சிதாஅர் வன்பின்என் தொடார் தழீஇப்
பாணர் ஆடும் அளவை யான்றன்
யாணர் நன்மனைக் கூட்டுமுதல் நின்றனென்

என்றதனால் தெளியலாம். ஓய்மான் வில்லியாதனின் பெருமைகளை அவன் இணைவன் கூறக்கேட்டு அதனால் மிக்க வேட்கையொடு அவனை உள்ளிச் சென்றமையை,

**கொன்வரல் வாழ்க்கை நின்கிணைவன் கூறக்**
**கேட்டதற் கொண்டும் வேட்கை தண்டாது**
**விண்டோம் தலைய குன்றம் பின்படர**
**நசைதர வந்தனன் யானே**

என்பதனால் அறியலாம். கரும்பனூர் கிழானைக் கரும்பு முதல் சுற்றமொடு சென்று கண்டமையை,

**ஊனும் ஊணும் மனையின் இனிதெனப்**
**பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்**
**அளவுபு கலந்து மெல்லிது பருகி**
**விருந்துறுத் தாற்றி யிருந்தன மாக**

என்ற புறநானூற்றுப் பாடல் பகுதி புலப்படுத்தி நிற்கின்றது.

**கரும்பனூரன் கிணையேம் பெரும**

என்றதனால் அவன் இரும்பேர் ஒக்கலுடன் சென்று கண்டமையை உணர முடிகிறது.

புறத்திணை நன்னாகனார் ஒய்மான் நல்லியக்கோடனை அந்தி மாலைப் போதில் சென்று கண்டதை,

**விசும்பு நீத்தம் இறந்த ஞாயிற்றுப்**
**பசுங்கதிர் மழுகிய சிவந்துவாங் கந்தி**
**சிறுநனி பிறந்த பின்றை செறிபிணிச்**

என்ற பகுதியால் உணரலாம். பிற மன்னர்களை இவர் சென்று கண்ட நேரத்தை இவர் பாடல்கள் குறித்து நிற்க வில்லை.

## அறியப்படும் ஊர்கள்

புறத்திணை நன்னாகனார் பாடல்களினின்றும் மாவிலங்கை கரும்பனூர் என்ற இரண்டு ஊர்களைப் பற்றி

அறிய முடிகிறது. மாவிலங்கை என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் பகுதியில் மேன்மாவிலங்கை எனவும் கீழமாவிலங்கை எனவும் இரு கூறுற்று வழங்குகிறது எனக் குறிக்கின்றார் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள். நெல்லமல் புரவின் இலங்கை என்றதனால் இஃது இன்று போலப் பண்டும் நல்ல வளம் பொருந்திய ஊராக இருந்தமை குறிக்கத்தக்கது எனவும் குறிக்கின்றார் அவர். இம்மாவிலங்கையின் சிறப்பினை ஆசிரியர் புறத்திணை நன்னாகனார்,

> **நெல்லரி தொழுவர் கூர்வாண் மழுங்கிற்**
> **பின்னை மறத்தோ டரியக் கல்செத்து**
> **அள்ளல் யாமைக் கூன்புறத் துரிஞ்சும்**
> **நெல்லமல் புரவின் இலங்கை**

எனக் கூறுகின்றார்.

கரும்பனூர் என்பது தொண்டைநாட்டுத் திருவேங்கடக் கோட்டத்தில் உள்ள ஓர் ஊர். திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டு ஒன்று கரும்பனூர் வண்கண் ஆதித்தன் என்பவனைக் குறிக்கின்றார். இவனை நன்னாகனார் என்னும் புலவர் இணைவரும் பொருநரும் ஆகிய சுற்றத்துடன் சென்று வாழ்த்தியுரைக்கின்றார். இக் கரும்பனூர் இப்போது கரும்பூர் என வழங்கப் படுகிறது. இக்கரும்பனூர் இயற்கை வளம் நிறைந்தது என்பதனை 384ஆம் பாடல்வழி அறியலாம்.

## உவமைச் சிறப்பு

இலக்கியங்களில் கையாளப்படும் உத்திகளில் உவமையும் ஒன்று. புலவர் தம் உள்ளக் கருத்தை வெளியிடுவதற்கும், உணர்ச்சி வெளிப்பாட்டிற்கும், கருத்திற்கு விரைந்த ஓட்டம் தரவும், உவமைகள் பயன்படுத்தப்படுகின்றன. புறத்திணை

நன்னாகனார் தம் பாடல்களில் மன்னனின் சிறப்பினை—தன் உள்ள நிலையினை—புரவலர்கள் தந்த பரிசினை—விரித் துரைக்கின்ற நிலையில் உவமைகளைப் பயன்படுத்து கின்றார்.

ஒய்மான் நல்லியக்கோடனின் புகழ்பாடும்போது அவன் வறுமை தீர்க்கும் தெப்பமாக இருக்கின்றான் என்பதை,

**நிரப்படு புணையின்**

என்ற உவமைவழி உணர்த்துகின்றார்.

கரும்பனூர் கிழானைச் சிறப்பித்து உரைக்கும்போது அவன் அறைத்துறை அம்பி போல இருந்தவன் எனக் குறிக் கின்றார்.

**உறுவருஞ் சிறுவரும் ஊழ்மாறு உய்க்கும்**
**அறத்துறை யம்பியின் மான மறப்பின்று**
**இருங்கோள் ஈராப் பூட்கைக்**
**கரும்பனூரன் காதல் மகனே**

எனக் கரும்பனூரனின் புகழினை அறத்துறை அம்பிக்கு உவமிக்கின்றார்.

தன்னைப் பற்றிக் குறிக்கும்போது தன்னைக் குழந்தை யாகவும் ஒய்மான் வில்லியாதனைத் தாயாகவும் வைத்துப் பாடுகின்ற ஒரு மரபினையும் இவர் பாடல்வழி அறிய முடிகிறது. தான் ஒய்மான் வில்லியாதனைக் காணுதற்கு வந்த நிலையை உரைக்க வருகின்றவர்,

**நசைதர வந்தனன் யானே வசையில்**
**தாயில் தூஉங் குழவி போல**

என்ற உவமைவழி உணர்த்துவார்,

இவ்வாறே ஓய்மான் நல்லியக்கோடனைக் கண்டு திரும்பு கின்ற நிலையில் தன் உள்ளத்து மகிழ்ச்சியினை நிறைக் குளப்புதவிற்கு உவமித்துரைக்கின்றார். இதனை,

**நிறைக்குளப் புதவின் மகிழ்ந்த னெனாகி**

என்ற பாடற் பகுதியால் தெளியலாம்.

புரவலரின் கொடையை இரவலர் போற்றி நிற்கின்ற நிலையில் அவர் அரவு வெகுண்டதைப் போன்ற தேறலை நல்கினர் எனத் தேறலுக்கு அரவின் வெருட்சியைக் கூறுகின் றார். தன்னுடைய வறுமை நிலையை நரகத்திற்கு ஒப்பிட்டு உரைக்கின்ற போக்கினையும் காணமுடிகிறது.

**நிரயத்தன்ன வென் வறன்களைந் தன்றே**

என்பதனால் இதனை அறியலாம்.

இவ்வாறாகப் புறத்திணை நன்னாகனார் தம் பாடல் களில் உவமைகளைப் பல்வேறு நிலைகளில் படைத்துக் காட்டுகின்றார்.

## பண்பாட்டுச் செய்திகள்

புறத்திணை நன்னாகனார் பாடல்கள்வழி அக் காலச் சமுதாயச் செய்திகள் சிலவற்றை அறிய முடிகிறது. ஓய்மான் நல்லியக் கோடனைக் கண்டு வந்த புலவர் அவன் கொடைச் சிறப்பினைக் குறிக்கையில்,

**இரவி னானே யீத்தோன் எந்தை**

எனக் குறிக்கின்றார். 'இரவி னானே' என இரவுப் பொழு திற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அக் காலத்தில் இரவுப் போதில் பிறர்க்கென்று ஈயும் வழக்கம் இல்லை. இருந்தும் அவன் நல்கினான் என்ற ஒரு குறிப்புப் புலனாகிறது.

இதனால் அக் காலத்தில் இரவுக் காலத்தில் பிறர்க்கு ஒன்று வழங்கும் வழக்கும் இல்லை என்பது புலனாகிறது.

கரும்பனூர் கிழானிடம் தன் இரும்பேர் ஒக்கலுடன் தங்கியிருந்த புலவர் ஒரு நாள்,

**சென்மோ பெரும் வெம் விழவுடை நாட்டெனு**

என வினவுகின்றதால் நாட்டில் விழா நடத்தும் சிறப்பு உண்டென்பதும் புலனாகின்றது. இவர் காலத்திய உணவுப் பொருள்களைக் காணும்போது, தேறல், சூட்டிறைச்சி, பாலிற் பெய்தன, பாகிற் கொண்டன, இக் காலத்தில் புலவு எனப்படும் கொழுஞ்சோறு முதலியன அனைத்தும் வழக்கத்தில் இருந்தமை புலனாகிறது.

**அரவு வெகுண் டன்ன தேறலொடு சூடுதருபு**

என்றதனால் சூட்டிறைச்சியும் தேறுகூடலும் உண்ணப் பட்டமை தெளிவாகிறது.

**குறுந்தா ளேற்றைக் கொழுங்கண் நல்விளர்**
**நறுநெய் யுருக்கி நாட்சோறு ஈயா**

என்றதனால் நிணமிட்ட கொழுஞ்சோறும் அக்கால மக்களின் உணவுப் பொருள்களில் ஒன்றாக விளங்கினமையை உணர முடிகிறது.

கரும்பனூர் கிழான் புறத்திணை நன்னாகனாரையும் அவர்தம் கடும்பு முதல் சுற்றத்தையும்,

**ஊனும் ஊணும் முனையின் இனிதெனப்**
**பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்**

ஆகிய இவற்றை நல்கி விடுந்துறத்து ஆற்றினான் என்பதால் க் காலத்தில் ஊன், ஊண், பாலிற் பெய்தன, பாகிற்

கொண்டன ஆகியனவும் பழக்கத்தில் இருந்தமை, புலனாகிறது.

நெல், பொன் முதலியனவும் அக்காலத்தில் மிகுந்து விளங்கினமையை,

**நெல்லென்னாம் பொன்னென்னாம்**
**கனற்றக் கொண்ட நறவென்னாம்**

என்பதால் தெளிவாகிறது.

கரும்பனூர் கிழானைப் புறத்திணை நன்னாகனார் சென்று கண்டபோது வெள்ளி தன்னிலை திரிந்து காணப் பட்டது. இருப்பினும் அவர் அதனைக் கண்டு கலங்காது,

**அன்னோனை உடையோ மென்ப கனிவறட்கு**
**யாண்டு நிற்க வெள்ளி**

எனக் கூறுவதால் வெள்ளிமீன் தன்னிலை திரிவதால் கேடு உண்டாகும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் இருந்தமையை உணர முடிகிறது.

அக் காலத்தில் தானியங்களைப் பெய்து வைத்தற்கெனத் தனியே ஒரு கூடு இருந்தமையை,

**பாணர் ஆடும் அளவை யான்றன்**
**யாணர் நன்மனைக் கூட்டுமுதல் நின்றனென்**

என்பதால் தெளியலாம். சமுதாயத்தில் குளம், தெப்பம் முதலியனவும் விளங்கினமையையும் இவர் பாடல்வழி அறிய முடிகிறது.

**நிறைக்குளப் புதவின் மகிழ்ந்தன னாகி**
**அறத்துறை யம்பியின் மான**
**நிரப்படு புணையின்**

என்ற பகுதிகள் இக்கருத்தை வலியுறுத்தி நிற்கின்றன. இவர் காலத்தில் தெடார் முதலிய இசைக் கருவிகளும் அரிவாள்

போன்ற கருவிகளும் வழக்கத்தில் இருந்தமையையும் இவர் பாடல்வழி அறிய முடிகிறது.

## புலவரின் வறுமைக்கோலம்

புலவர் தம்முடைய வறுமைக்கோலத்தை ஒரு பாடலில் மிகத் தெளிவாகக் காட்டுகின்றார். ஒய்மான் நல்லியக் கோடனிடம் செல்லும்போது மெலிந்து, நலிந்து உருத் தெரியாமல் மாறிப் போயிருக்கின்றார். இவருடைய உடை மிகவும் நைந்து கிழிந்து காணப்படுகிறது. பசிப்பிணி வாட்டு கின்றது. இவ்வாறாக நிரயத்தன்ன வறுமையில் வாடும் தன் நிலையினை,

**பண்டறி வாரா வுருவொ டென்னரைத்**
**தொன்றுபடு துளையொடு படுவிழை போகி**
**நைந்து துவற பறைந்த என்னுடை**

என்ற பகுதியால் குறிக்கின்றார். பிற பாடல்களில் இதுபோல் வறுமைக்கோலத்தைச் சித்திரிக்கவில்லை எனினும் அவர் களை அணுகித் தம் பசிப்பிணியைப் போக்கிக்கொண்ட மையை மட்டும் குறித்துச் செல்கின்றார்.

## இசை ஈடுபாடு

ஒவ்வொரு மன்னனைக் காணச் செல்லும்போது புலவர் தடாரிப் பறைகொட்டி அவர்தம் புகழினைப் பாடி நிற்பது இசையில் அவர் கொண்ட ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறது. ஓய்மான் நல்லியக்கோடனை சிறுநனி யிறந்த பின்றை,

**சிதாஅர் வள்பின் தடாரி தழீஇ**

அவன் புகழ் பாடி நிற்பது அவர்தம் இசைவன்மைக்குக் காட்டாகிறது. இசை வல்லமையை இவர் கூற்றால் மட்டும் அன்றிக் கரும்பனூர் கிழான் கூற்றாலும் அறிய முடிகிறது.

சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
ஊன்சுகிர் வலந்த தெண்க ணொற்றி
விரல்விசை தவிர்க்கும் அரலையில் பாணியின்
இலம்பாடு அகற்றல் யாவது

எனக் கரும்பனூர் கிழான் வினவுவதால் இவர்தம் இசை வன்மை புலனாகிறது.

## இயற்கை ஈடுபாடு

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்தியவர்கள். புறத்திணை நன்னாகனார் இயற்கையில் தோய்ந்த தம் உள்ளத்தைத் தம் பாடல் பகுதிகளில் வெளிப் படுத்தி நிற்கின்றார். கரும்பனூரின் நாட்டுச் சிறப்பினை விவரிக்க வருகின்றவர் அதன் இயற்கை நலத்தை அவ்வாறே படம் பிடிக்கின்றார். 'கரும்பனூர் கிழானின் மென்புலத்தில் மீன் உண்டு பசி தீர்ந்த நாயை வஞ்சி மரத்தின் கிளையில் தங்கி பின் கரும்பின் பூ அருந்த அதன்பால் தங்கும். வரகரிந்த அரிகாலில் வாழும் எலியை யலைக்கும் இயல்பினதாகக் குறும்பூழ்க்கு அஞ்சி அவன் ஊரும் முயல் ஓட அதனால் இருப்பைப் பூ உதிரும்' என அந் நாட்டின் இயற்கைக் காட்சியை மிக அழகாக விரித்துரைக்கின்றார்.

மென்பா லான் உடன் அணைஇ
வஞ்சிக் கோட்டு உறங்கு நாரை
அறைக் கரும்பின் பூ அருந்தும்
வன்பாணற் கருங்கால் வரகின்
அரிகாற் கருப்பை யலைக்கும் பூழின்
அங்கட் குறுமுயல் வெருவ அயல்
கருங்கோட் டிருப்பைப் பூவுறக்குந்து

என்ற பகுதி இயற்கையில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்த புலவரை நமக்குக் காட்டி நிற்கின்றது.

இவ்வாறே ஓய்மான் வில்லியாதனைக் காணச் சென்றவர் அவனிடம்,

**விண்டோய் தலைய குன்றம் பின்பட**
**நசைதர வந்தனன்**

எனக் கூறுவது குறிஞ்சி நிலக் காட்சியில் ஒன்றிய புலவர்தம் உள்ளத்தைப் படம் பிடிக்கின்றது. கரும்பனூர் கிழானின் நாட்டுச் சிறப்பினை உரைக்கும்போது,

**ஒலிவெள் ளருவி வேங்கட நாடன்**

எனக் குறிப்பது அருவி நீரோசையில் தம் உளத்தைப் பறிகொடுத்து வியந்து நிற்கும் புலவரை நம் கண் முன் நிறுத்துகின்றது.

## அறிவியல் அறிவு

வெள்ளி என்னும் மீன் தன்னிலை திரிந்து தெற்குத்திசைக் கண் தோன்றின் நாட்டிற்கு நலம் உண்டாகாது என்பது கோள் நிலை அறிந்தோர் கொள்கை. புறத்திணை நன்னாகனாரும் இக்கோள்நிலையை அறிந்த அறிவியல் அறிவு மிக்கவராயிருந் தமையை,

**அன்னோனை உடையேமென்ப இளிவறட்கு**
**யாண்டு நிற்பினும் வெள்ளி**

என்ற பகுதி உணர்த்தி நிற்கின்றது.

## அடைவளம்

கவிஞனின் சொல்லாட்சித் திறமைக்கு முன்னோடி களாகவும், சிந்தனைச் செறிவிற்கு மைல் கற்களாகவும் கவிஞனின் வெளிப்படுந் திறமைக்கும் மொழிப் புலமைக்கும் சான்றாக நிற்பன இந்த அடைகள். மேலும் ஒரு பொருளை

(அல்லது) செயலை மனக்கண் முன் நிறுத்தவும் காட்சிகளின் பண்பை விளக்கவும் கவிதை இன்பம் நல்கவும் உணர்வினை மிகுவிக்கவும் அடைகள் பயன்படுகின்றன. இந்த நிலையில் புறத்திணை நன்னாகனார்தம் பாடல்களில் அடைவளம் சிறந்து நிற்றலைக் காணமுடிகிறது.

**நிறைக் குளப் புதவு**

என்ற சொல்லில் 'நிறைக்குளம்' என்றதனால் அக் குளம் நீர் நிறைந்து விளங்கும் இயற்கைக் காட்சியைப் படம் பிடிக்கின்றார்.

**வஞ்சிக் கோட்டு உறங்கு நாரை**
**அங்கட் குறுமுயர்**
**குறுந்தாள் ஏறு**

என்ற பகுதிகளில் உள்ள அடைகள்வழிச் இயற்கையை நன்கு படம் பிடிக்கின்றார்.

**கூர் வாண் மழுங்கு**
**நன்மனைக் கூடு**
**திருவுடைத் திருமனை**

என்ற பகுதிகளில் உள்ள அடைகள்வழிச் செயற்கைப் பொருள்களைக் கண்முன் நிறுத்துகின்றார்,

## சொல்லாட்சிச் சிறப்பு

ஏற்ற சொற்களை ஏற்ற இடத்தில் பெய்வது சொல்லாட்சித் திறத்திற்கு வலிமை சேர்ப்பதாகும். ஓய்மான் வில்லியாதனைச் சென்று காணும் புலவர் தான் அவனைக் காண வந்த முறையைக் கூறும்போது,

**கொண்வரல் வாழ்க்கைக் கிணைவன் கூறக்**

கேட்டு அதனால் வந்தனம் எனக் கூறுகின்றார். 'கொண்வரல் வாழ்க்கை' என்ற ஒரு சொல்லின் மூலம் அக்

கிணைவனின் வாழ்க்கை முறையை—வாழ்க்கை நிலையை உணர்த்துகின்றார்.

ஓய்மான் வில்லியாதனின் அரண்மனைப் பெருமையைக் கூறும்போது,

**திருவுடைத் திருமனை**

எனக் குறிக்கின்றார். இதனால் ஓய்மான் வில்லியாதனின் அரண்மனை, 'திருமகளை உடைய செல்வ மனை' என்பதும் அழகினைத் தன் செல்வமாகக் கொண்ட திருமகளே விரும்பிக் குடியேறியிருக்கும் மனை என்பதும் புறத்தோற்றத்தால் அழகிய மனை என்பதும் பெறப்படுகிறது.

கரும்பனூர் கிழானைப் பற்றிக் குறிப்பிடும்போது 'கரும்பனூரன் காதல் மகனே' எனக் குறிப்பதால் அவன் தன் சிறப்புப் பெறப்படுகிறது. கரும்பனூர் கிழானுக்கு உவமை கூறப்படும் அம்பினை 'அறத்துறை அம்பு' எனக் குறித்து அதன் சிறப்பினைக் குறிக்கின்ற நிலையில் கரும்பனூர் காதல் மகனின் அற வாழ்க்கையைப் பெற வைக்கின்றார். இவ்வாறாகப் புறத்திணை நன்னாகனார் பாடலில் பல சிறந்த சொல்லாட்சிகள் காணப்படுகின்றன.

## இறுவாய்

புறத்திணை நன்னாகனாரின் நான்கு பாடல்களையும் நோக்கும்போது பெறப்படும் செய்திகள்:

1. புரவலரின் நாட்டுச் சிறப்புப் போற்றி உரைக்கப்படுகிறது.

2. புரவலரின் கொடை வளம் சிறப்பிக்கப்படுகிறது.

3. புலவர்தம் உள்ள உறுதி, உள்ள விழைவு, அவர்தம் புலமைச் செருக்கு, உள்ள மகிழ்ச்சி இவை புலப்படுத்தப்படுகின்றன.

4. புரவலர்தம் மாண்பினை அறிய முடிகிறது.

5. புலவர் புரவலரை தனித்தும் தம் இரும்பேர் ஒக்கலுடனும் சென்று கண்டமை புலனாகிறது.

6. மாவிலங்கை, கரும்பனூர் என்ற இரண்டு ஊர்களின் சிறப்பினை உணர முடிகிறது.

7. அக்காலச் சமுதாயப் பழக்கவழக்கங்கள் சிலவற்றை இவர் பாடல்வழித் தெரிய முடிகிறது.

8. புலவரின் இசைவன்மை, இயற்கை ஈடுபாடு, வறுமைக்கோலம் இவற்றை இப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

9. புலவரின் உவமைச் சிறப்பிற்கு—அடை வளத்திற்கு—சொல்லாட்சித் திறத்திற்கு இப் பாடல்கள் நல்ல சான்றுகளாக விளங்குகின்றன.

# 4. முல்லைத்திணை

## தோற்றுவாய்

தொன்மைச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் உடையவர்கள் தமிழர்கள். ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுக் கால வரலாற்றைத் தமக்குரியதாகக் கொண்டவர்கள் அவர்கள். அக்காலத்திலேயே அவர்கள் தங்கள் வாழ்க்கையை அகம் புறம் என இரு பிரிவுகளாகப் பகுத்து வாழ்ந்தனர்.

**கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப**

என்பதனால் அகத்தை எழுதிணைகளாகவும் அதற்கேற்பப் புறத்தை எழுதிணைகளாகவும் கொண்டனர் என்பது புலனாகிறது. அகத்திணை ஏழனுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணை ஒழுக்கமே அவர்தம் பண்பாட்டுச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இவ் வைந்திணை ஒழுக்கங்களுள் ஒன்றான முல்லைத்திணை பற்றிக் காண்பதே இக் கட்டுரை.

## முல்லைத்திணை

காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை எனப் பட்டது. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி. வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். குறிஞ்சி நிலத்தில் மனிதன் இயற்கையை

எதிர்த்து வாழ வேண்டியிருந்தது. மருத நிலத்தில் மனிதன் உழைத்துப் பாடுபட்டு வாழ வேண்டிய சூழ்நிலை இருந்தது. நெய்தல் நிலத்தில் பிற நிலங்களை எதிர்பார்த்து வாழ வேண்டியிருந்தது. முல்லை நிலத்தில் மனிதன் இயற்கையை எதிர்பார்த்து நம்பி வாழ வேண்டியிருந்தது எனக் குறிக்கின்றார் டாக்டர் மு.வ. அவர்கள் (முல்லைத்திணை, ப.1)

மனிதன் காட்டுமிராண்டியாய் இருந்த நிலைமாறி அவன் நாகரிகம் பெற்றுக் கூட்டமாகக் கூடி வாழ்ந்தது முல்லை நிலத்தில்தான். எனவேதான் முல்லைநிலத்து ஆயர்கள் ஆநிரைகளை மேய்க்கும் கோல் அரசனுடைய ஆட்சிக்குரிய கோலாகியது. எனவே மக்கள் இனமாய்க்கூடி நாகரிகத்தை வளர்த்த இடம் முல்லை நிலம் என்பது தெளிவாகிறது.

## முதற்பொருள்

தொல்காப்பியனார் ஒவ்வொரு திணைக்கும் உரிய பொருள்களை முதல், கரு, உரி என மூன்றாக்கிக் கூறுகின்றார்.

> மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
> சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

என்றதனால் முல்லைக்குரிய நிலம் காடுறை உலகம் என்பது பெறப்படுகின்றது.

> வரையே சுரமே புறவே பழனந்
> திரையே அவைஅவை சேர்தரு மிடனே
> என வீரை வகைத் தணையியல் நிலமே

என்ற நம்பியகப் பொருள் நூற்பாவும் புறவும் புறவைச் சார்ந்த இடமும் முல்லை எனக் குறிக்கின்றது.

முல்லைக்குரிய பெரும்பொழுதாகக் கருதப்படுவது கார்காலம். சிறுபொழுது மாலை.

**காரும் மாலையும் முல்லை**

என்பது தொல்காப்பியம்.

**மல்குகார் மாலை முல்லைக்குரிய**

என்பது நம்பியகப் பொருள்.

## கருப்பொருள்

தெய்வம், பொருள், விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் முதலியனவும் பிறவும் ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருள்களாகக் கருதப்படும்.

**நெடுமால் குறும்பொறை நாடன் தோன்றல்**
**வடுவில் கற்பின் மனைவி கிழத்தி**
**இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்**
**கான வாரணம் மான்முயல் பாடி**
**குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை**
**நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவம்**
**கொன்றை காயா மன்றலங் குருந்தம்**
**தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை**
**ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி**
**சாமை வரகு தாமுடன் வித்தல்**
**அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்**
**செவிகவர் கொன்றைத் தீங்குழல் ஊதல்**
**மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்**
**கழுமிய குரவையொடு கான்யாறு என்றிவை**
**முழுதுடன் ஆடல் முல்லைக் கருப்பொருளே.**

என்ற நம்பியகப் பொருள் நூற்பாவினால் முல்லைத்திணைக் குரிய கருப்பொருள்கள் இன்னின்ன என்பதைத் தெளியலாம்.

## உரிப்பொருள்

முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆகும்.

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே**

என்ற தொல்காப்பிய நூற்பாவினாலும்,

**புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்**
**இரங்கலும் இவற்றின் நிமித்தமும் எனவாங்கு**
**எய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே**

என்ற நம்பியகப் பொருள் நூற்பாவினாலும், முல்லைக் குரிய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்பதைத் தெளியலாம்.

பொருள் காரணமாகவும் வேந்துவினை காரணமாகவும் தலைமகன் தலைமகளைப் பிரிந்து செல்கிறான். செல்பவன் திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழும் கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் செல்கிறான். சென்ற தலைமகனின் வருகையை எதிர்பார்த்து அவன் வரவில் அவன் சொல்லில் நம்பிக்கை வைத்து அவன் பிரிவை ஆற்றி யிருத்தலே இருத்தல் எனப்பட்டது. இதுவே முல்லைத் திணையின் உரிப்பொருளாகியது.

முல்லை என்பதற்குக் கற்பு எனவும் பொருள் கூறுவர். 'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' என்றெல்லாம் மகளிர் போற்றப்பட்டனர். கற்பு என்பதற்குக் கல்போன்ற எனவும், இல்வாழ்க்கைக்கு உரியன கற்று கற்ற நெறியில் நிற்றல், சொல் திறம்பாமை என்றெல்லாம் பொருள் கூறப்படுகிறது. இங்கு சொல் திறம்பாமையே முல்லை என்பதற்குப் பொருத்த மான பொருளாக அமைகிறது.

வினையே தன் உயிராகக் கொண்ட தலைமகன் தன்வினை முடித்துக் கார்காலத்தில் திரும்பி விடுவதாகக் கூறிச் செல்கின்றான். அதுவரை தன் பிரிவினை ஆற்றி யிருக்குமாறு தலைமகளிடம் கூறிச்செல்கின்றான். தலைமகளும் தலைமகன் சொற்படிக் கார்காலம் வரும் வரையில் பிரிவை ஆற்றியிருப்பதாகக் கூறுகிறாள். இருவரும் சொன்ன சொல் தவறாமல் ஒழுகுகின்றனர். இவ்வாறு சொன்ன சொல் தவறாமல்—சொல் திறம்பாமல்—நடத்தலே கற்பு என்னும் ஒழுக்கம். இதனாலேயே முல்லை என்பது கற்பு என்னும் பொருள் உடையதாயிற்று.

## சங்க இலக்கியத்தில் முல்லைத்திணைப் பாடல்கள்

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையிலும் பத்துப் பாட்டிலும் முல்லைத்திணைப் பாடல்கள் காணப்படுகின்றன. எட்டுத்தொகையில் ஐங்குறுநூற்றிலும் கலித்தொகையிலும் ஐந்தில் ஒரு பகுதியாக முல்லைத்திணைப் பாடல்கள் காணப் படுகின்றன. அகநானூற்றில் நாற்பது முல்லைத்திணைப் பாடல்கள் உள்ளன. குறுந்தொகை, நற்றிணைகளிலும் சில பாடல்கள் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை நூல்களில் முல்லைநில வருணனை இடம் பெறுகிறது. பத்துப்பாட்டுள் முல்லைப்பாட்டு முழுவதும் முல்லைத்திணை பற்றி எழுந்த நூலாகும். சங்க இலக்கியத்தை அடுத்துத் தோன்றிய கர்நாற்பது பாடல் களும் முல்லைத்திணையின் சிறப்பை எடுத்துரைப்பன. பதினெண்கீழ்க்கணக்கில் அமைந்த வேறு சில பாடல்களும் முல்லைத்திணையில் அமைந்தவையே. பின்னர்த் தோன்றிய காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்கள் சிலவற்றிலும் முல்லைத் திணை பற்றிய குறிப்புக்களைக் காணலாம். பொதுவாக முல்லைத்திணைப் பாடல்களை நோக்கும்போது உள்ளதை உணர்ந்தவாறு பாடும் நிலையே காணப்படுகிறது.

## ஆங்கிலத்தில் முல்லை

ஆங்கில இலக்கியத்திலும் முல்லைப்பாடல்கள் உண்டு. அவற்றைப் பாடிய புலவர்களும் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து தாம் கண்டவற்றையே பாடியுள்ளனர். "அப்பாடல்களைக் குறித்து வாஷிங்டன் இர்வின் என்பவர் புகழும்போது மற்ற நாடுகளின் முல்லைப் பாடல்களைப் பாடியவர்கள் இயற்கையை என்றோ ஒருமுறை சென்று கண்டு பொதுவான எழிலை மட்டும் அறிந்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் ஆங்கிலப் புலவர்களோ இயற்கையோடு கலந்து வாழ்ந்து திளைத்தவர்கள். கண்ணுக்கெட்டாத இயற்கையின் நுட்பங் களையும் நெருங்கிக் கண்டு பழகியவர்கள். இயற்கையின் நுண்ணிய திருவிளையாடல்களையும் துருவிக் கண்டவர்கள் என்கிறார்" எனக் குறிக்கின்றார் டாக்டர் மு.வ.

தமிழில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்களைப் போல ஆங்கிலத்தில் தலைவன் தலைவியரின் கற்பொழுக்கம் போற்றப்படவில்லை. நகர வாழ்க்கையிலிருந்து தப்பி ஓடி நாட்டுப்புறத்தின் நலங்களைத் துய்த்தல், ஆடம்பரத் தொல்லைகளிலிருந்து விலகி எளிமையின் இனிமையில் மகிழ்தல், கவலையும், பரபரப்பும் மிக்க வாழ்க்கையைத் துறந்து கவலையற்ற அமைதியான வாழ்வை நாடுதல் இவைகளை அடிப்படையாகக் கொண்டே முல்லைநிலப் பெண்களின் காதல் முதலியன புனைந்து உரைக்கப்படுகின்றன. முல்லைநிலத்து ஆயர்வாழ்வு ஆங்கிலப் பாடல்களில் வருகின்றன என்றும் அவர்கள் இத்தாலி நாட்டு ஆயர்களாகவே உள்ளனர் என்றும் அதனாலேயே குளிர் மிகுந்தது இங்கிலாந்து என்பதையும் மறந்தவர்கள் ஆயர்கள் என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். இன்னும் சில பாடல்களில் ஆடு மாடு முதலிய சொற்கள் எல்லாம் நேர்ப்பொருளை உணர்த்தாமல் உருவகப் பொருளையே உணர்த்துகின்றன. ஆதலின் அவை முல்லைத்திணைப்

பாடல்கள் அல்ல என்பது சிலர் கருத்து என மொழிகின்றார் டாக்டர் மு.வ.

## தமிழில் முல்லைத்திணைப் பாடல்கள்

ஆங்கிலத்தில் உள்ள முல்லைப் பாடல்களைப் போன்ற முல்லைப் பாடல்களைத் தமிழில் காணமுடிவதில்லை. தமிழ் இலக்கியத்தில் அமைந்த முல்லைப் பாடல்கள் ஆங்கிலத்தில் உள்ள முல்லைப் பாடல்களைப் போன்று கடன் வாங்கல்கள் அல்ல. முல்லை நிலத்து வளத்திலும் வனப்பிலும் தம் உள்ளத்தைப் பறிகொடுத்த புலவர் செம்மல்களின் உள்ளத்து வெளிப்பாடுகள் அவை. முல்லை நிலத்து வாழ் மக்களின் வாழ்க்கைச் செய்திகள், இயற்கைப் படப்பிடிப்பு, தலைமகன் தலைமகளிரின் அன்பின் பிணைப்பு முதலியனவற்றை முல்லைத்திணைப் பாடல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

## முதற்பொருள் வருணனை

முல்லைத்திணைக்குரிய முதற்பொருள்கள் முல்லை நிலமும் கார்காலமும் மாலைப்பொழுதும் ஆகும். இவற்றைப் பின்புறமாகக் கொண்டு எழுந்த முல்லைத் திணைப் பாடல் கள் பல.

முல்லை நிலமாகிய காட்டினைப் பற்றிக் கூற வருகின்ற புலவர் அம்முல்லைநிலப் பூக்களின் வண்ணத்தையும் வடிவத்தையும் கண்டு கற்பனை மெருகேற்றிப் பாடுகின்றார். செறிந்த இலைகளையுடைய காயா மரத்தில் அஞ்சனம் போன்ற நீலநிற மலர்களும் இளந்தளிர்கள் கொத்துக் கொத்துக்களாகத் தோன்றும் கொன்றை மரத்தில் நல்ல பொன் காசு போன்ற மலர்களும் வெண்காந்தளின் குவிந்த முகைகள் அழகிய கைபோல் மலர்ந்த மலர்களும் இதழ் நிறைந்த தோன்றியில் குருதி போன்ற செந்நிற மலர்களும்

நிறைந்த காடு பொலிவுற்றதாக முல்லைப்பாட்டு எடுத்துரைக்கின்றது.

**செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றிக் குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி**
—முல்லைப்பாட்டு

விதை விதைக்கும் ஆயர் பலபடியாக உழுதுள்ளனர். உழுத பழங்கொல்லைப் புழுதியில் உள்ள ஈரிய இலைகள் நிரம்பிய வரகின் கவைத்த கதிர்களைக் கலைமான்கள் உண்கின்றன. உண்டபின் அவை மரல் வித்துக்கள் உதிர்ந்து கிடக்கும் அழகிய காட்டின்கண் விளையாடி மகிழ்கின்றன. இத்தகைய இனிய காட்சியினையுடையது முல்லை நிலம் என்பதை,

**விதையர் கொன்ற முதையற் பூமி
இடுமுறை நிரப்பிய ஈரிசி வரகின்
கவைக்கதிர் கறித்த காமர் மடப்பிணை
அரலை யங்காட்டு இர லையொடு வதியும்
புறவு**
—நற்றிணை : 121

என்ற அடிகள் சித்திரிக்கின்றன.

முல்லை நிலம் பல நறிய மலர்கள் நிறைந்த அழகிய காட்சியினை உடையது என்பதை,

**பழம ழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவி சேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவ மென்பிணிக்
குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவு**

என்ற குறுந்தொகைப் பாடல் (222) குறித்து நிற்கின்றது.

**கண்ணியல் அஞ்சனம் தோய்ந்த போற் காயாவும்**
**நுண்ணரும் பூழ்த்த புறவு** —கார் 8

பவழஞ் சிதறியவை போலக் கோபந்
தவருந் தகைய புறவு கார். 5

**அணர்த்தெழு பாம்பின் தலைபோற் புணர்கோடல்**
**பூங்குலை நின்ற புறவு** கார். 11

**செல்வர் மனம்போற் கவினீன்ற நல்கூர்ந்தார்**
**மேனிபோற் புல்லென்ற காடு** —கார். 18

**......................நல்லார்**
**இளநலம் போலக் கவினி வளமுடையார்**
**ஆக்கம்போல் பூத்தன காடு** கார். 22

என்ற கார்நாற்பது பாடல் பகுதிகளினாலும் முல்லை நிலத்தின் கவின்மிகு காட்சியைக் கண்டு களிக்கலாம்.

இவ்வாறாக முல்லைத்திணைப் பாடல்கள் பல முல்லை நிலத்தின் வளத்தினை எடுத்துரைப்பனவாகத் திகழ்கின்றன. இனி முல்லைநிலத்தின் பெரும் பொழுதாகக் கருதப்படும் கார்காலச் சிறப்பை முல்லைத்திணைப் பாடல்கள் போற்று மாற்றைக் காண்போம்.

கார்காலத் தொடக்கம். இரவு முழுவதும் விடாத மழை. காலைப் பொழுதில் உழவர்கள் தத்தம் நிலத்தில் சென்று ஏர் பூட்டி செம்மண் பூமியின் புழுதி மேலும் கீழும் சென்றிடுமாறு உழுதொழில் செய்தனர். உழுத நிலத்தில் விதைத்த வரகு களின் முளைகள் மேலே தெரிந்தன. உழவர்கள் தங்கள் தலைமேல் ஓலைக்குடையைப் பிடித்துத் தொழில் செய்த காட்சி அங்கிருந்த கலைமான்கள் பரந்து திரிவதுபோல் காட்சி அளித்தது. பறை ஒலிக்க உழவர்கள் களையைக் களைய, களைந்தபின் வரகு செழித்து வளர்ந்துவிட்டது. இரண்டிரண்டாகப் பிளந்து காணப்பட்ட கதிர்களை மயில்

கள் பறித்து உண்டன. அந்த நீல நிற மயில்கள் அழகிய தோகையைப் பரப்பிக் குருந்த மரத்தின் வளைந்த கிளைகளில் ஏறியிருந்து அகவிய ஒலி கிளி ஒப்பும் மகளிரின் ஒலிபோல் இருந்தது. அத்தகைய கார்காலம் இது.

> பேருறை தலைஇய பெரும்புலவர் வைகறை
> ஓர்இடம் படுத்த இருமறுப் பூழிப்
> புறமாறு பெற்ற பூவல் ஈரத்து
> ஊன் கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
> வித்திய மருங்கின் விதைபல நாறி
> இரலை நன்மான் இனம்பரந் தவைபோல்
> கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்
> கறங்குபறைச் சீரின் இறங்க வாங்கிக்
> களைகால் கழீஇய பெரும்புன வரகின்
> கவைக்கதிர் இரும்புறம் கதூஉ உண்ட
> குடுமி நெற்றி நெடுமாத் தோகை
> காமர் கலவம் பரப்பி ஏமுறக்
> கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த
> வல்லிலைக் குருந்தின் வாங்குசினை இருந்து
> களிகடி மகளிரின் விளிபடப் பயிரும்
> கார்மன் இதுவால் ..................

கார்காலத்தின் தோற்றத்திற்கு முல்லை மலர்கள் மலர்ந்து நிற்றலே அறிகுறி என்பதை உணர்த்துவது போன்று பல பாடல்கள் காணப்படுகின்றன.

> பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லை
> தொழுமுகை இலங்கெயிருக
> நகுமே தோழி நறுந்தண் காரே

—குறுந்தொகை : 126

எனக் காரைச் சிறப்பித்துரைக்கின்றார் ஒக்கூர் மாசாத்தியார்.

தண்குளிக் கேற்ற பைங்கொடி முல்லை
முகை தலை திறந்த நாற்றம் புதல்மிசைப்
பூவமல் தளவமொடு தேங்கமழ் கழல
வம்பு பெய்யுமார் மழையே வம்பு அன்று
கார் இது

என்ற பாடலும் கார்காலத்தில் முல்லை மலர்கள் மலர்தலைக் குறித்து நிற்கின்றன.

அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூன் முண்டகம் கதிர்மணி கழாலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்
..............................
பைந்நனை அவரை பவழங் கேர்ப்பவும்
கடுநனைக் காயா கனமயில் அவிழவும்
கொழுங் கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
—சிறுபாணாற்றுப்படை 146—156

கார்காலம் சிறந்து பொலிந்து விளங்கினமையைச் சிறுபாணாற்றுப்படை புலப்படுத்துகிறது.

இனி முல்லைத்திணைக்குரிய சிறுபொழுதாகிய மாலைக் காலம் பெறும் இடத்தினைக் காண்போம்.

மேகம் கடலினது நீரைக்குடித்துப் பின்னர் மலைகளினிடத்தே தங்கியிருந்து உலகத்தை வளைத்தெழுந்த விரைந்த செலவினையுடைய முகில் பெரிய மழையைப் பெய்த சிறுபொழுதாய புல்லிய மாலைக்காலம் என மாலையின் சிறப்பினைப் பாடுகின்றது முல்லைப்பாட்டு.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியோடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்

பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
—முல்லைப்பாட்டு 1-6

தலைமகன் பிரிவினால் வாடும் தலைமகனுக்கு மாலைப் பொழுது புன்கண் மாலையாகத் தோன்றுகிறது.

ஆம்பற் பூவின் சாம்ப என்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி னுணங்கல் மாந்தி மன்றத்
தெருவில் நுண்டாது குடைவன ஆடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலை

என மாலைப்பொழுது துன்பம் மிக்கதாகத் துலங்குவதை எடுத்துக்காட்டுகின்றாள்.

பையுள்மாலை புலம்புகல் மாலை
பெரும்புகல் பாலை சிறுபுகல் மாலை
பழங்கண் மாலை புன்கண்மாலை
மருளின் மாலை அருளில் மாலை
கையறு மாலை புலம்பொடு
வந்த புன்கண் மாலை............
கையற வந்த மையல் மாலை

என மாலைப்பொழுது துணையிலோர்க்குத் துன்பம் தரும் நிலையினைச் சங்கப் பாடல்கள் குறிக்கின்றன.

இன்றுயில் வதியுநற் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந் தேற்றியும் ஒடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென உயிர்த்தும்
ஏவறு மஞ்ஞையின் நடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச் சுடர் அழல

இடஞ் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
இன்பல் இமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்

என்ற முல்லைப்பாட்டுப் பகுதி தலைமகனைப் பிரிந்து வாடும் தலைமகளைக் கண்முன் நிறுத்துகின்றது.

நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நின்னுதல் நாளும் முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்கி
நின்னே உள்ளி வந்தனென்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே

என்ற தலைமகன் தலைமகளைக் காணத் துடிக்கும் அவன் உள்ளத்து ஆர்வத்தினைப் புலப்படுத்துவதாகத் திகழ்கிறது.

இன்னும் அன்றைய வரலாற்றுச் செய்திகளையும் பண்பாட்டுச் செய்திகளையும் அறிய உதவுவனவாக முல்லைத் திணைப் பாடல்கள் திகழ்கின்றன.

## புறத்துறைப் பாடல்களில் முல்லை

அகத்திணைப் பாடல்களில் மட்டும் அன்றி புறத்துறைப் பாடல்களிலும் முல்லை என்று பெயர் பெற்ற துறைகள் பல காணப்படுகின்றன. ஏறத்தாழ இருபது முல்லைத் துறைகள் புறப்பொருள் வெண்பா மாலையில் இடம் பெறுகின்றன. அவை,

1. அரச முல்லை : மன்னனது இயல்பு மிகுதியைக் கூறுவது.

2. அவையமுல்லை : அறங்கூறு அவையத்துச் சான்றோர் இயல்பு கூறியது.

3. இல்லாள் முல்லை : கணவனைத் தொழுது எழும் மனைவிளக்கின் இயல்பு கூறியது.

4. **ஏறாண் முல்லை :** மறக்குடியின் ஒழுக்கம் கூறுவது.

5. **கணிவன் முல்லை :** காலக் கணிதனுடைய திறத்தைப் புகழ்ந்து சொல்லியது.

6. **கற்பு முல்லை :** 1. தலைவன் தலைவி நலத்தைப் பாராட்டி உரைப்பது,

2. கணவன் பிரியினும் மகளிர்க்குரிதாய நிறை காவலைக் கூறியது.

3. தலைவன் மனைவளத்தைத் தலைவி வாழ்த்துதல்.

7. **கார் முல்லை :** தலைவர் வினைமுற்றி மீளும் முன்னர் முகில் நீரை முகந்து கொண்டு வந்தது கார் முல்லை.

8. **காவல் முல்லை ;** 1. தவழ்திரை முழங்குந் தண்கடல் வேலிக் கமழ்தார் மன்னவனின் காவலை மிகுத்துக் கூறியது.

2. காவலியல்பினைத் தக்காங்குப் பிறர் எடுத்துக் கூறுவதும் காவல் முல்லையாம்.

9. **குடை முல்லை :** மொய்தாங்கிய முழுவலித் தோட கொய்தாரானின் குடையைப் புகழ்ந்து கூறுவது.

10. **சால்பு முல்லை :** வான்றோயும் மலையன்ன சான்றோர்தம் இயல்பினைக் கூறுவது.

11. **தேர் முல்லை :** ஒன்னாரின் வலியை அடக்கி மீண்டு வரும் மன்னரின் வருகையைக் கூறுவது.

12. **நாண் முல்லை :** கொழுநனைப் பிரிந்தாள் ஒருத்தி தனது நாணே காவலாக வறுமையினிடத்திருந்து தன்னைக் காத்துக் கொண்டது.

13. **பகட்டு முல்லை :** பகடு போன்று உலகிற்குப் பயன் படும் வேளாளனுடைய இயல்பு மிகுதியைக் கூறியது.

14. **பார்ப்பன முல்லை :** கான்மலியும் நறுந்தெரியற் கழல்வேந்தர் இகலவிக்கும் நான்மறையோன் நலம் பெருகும் நடுவுநிலை உரைத்தது.

15. **பால் முல்லை :** அரிபாய் உண்கண் ஆயிழைப் புணர்ந் தோன் பரிவுகல் உள்ளமொடு பால் தெய்வத்தை வாழ்த்திக் கூறியது.

16. **பேராண் முல்லை :** மறவர்கள் உளம் புகலக் களம் கொண்ட வேந்தனின் சிறப்பினை எடுத்துரைப்பது.

17. **மறமுல்லை :** வெள்வாள் வேண்டிய தீயவும் கொள்ளா மறவனின் கொதிப்பினை உரைத்தது.

18. **முல்லை :** தடவரை மார்பன் தன்னமர் காதல் மடவரல் புணர்ந்த மகிழ்ச்சி நிலையை எடுத்துக் கூறுவது.

19. **மூதில் முல்லை :** அடல்வேல் ஆடவர்க்கு அன்றி அவ்வில் மடவரல் மகளிர்க்கும் உள்ள மறம் மிகுதியை எடுத்துரைப்பது.

20. **வல்லாண்முல்லை :** மறவன் ஒருவனின் இல்லும் பதியும் ஆகியவற்றின் இயல்பினைக் கூறி அவனது நல்லாண்மையை எடுத்துரைப்பது.

## முடிவுரை

பொதுவாகத் தமிழில் அமைந்த முல்லைத் திணைப் பாடல்கள் அனைத்தும் மாறிப்புக்கு இதயம் எய்திய காதலர் இருவரின் கருத்தொருமித்த வாழ்வின் பிரதிபலிப்புகளாகக் காணப்படுகின்றன. முல்லை நிலத்துக் கார்காலமும் மாலைக்காலமும் உணர்ந்து பாடப்படுவதால் அதில் உயர்வு நவிற்சி சிறிதும் இல்லை. நிலமும் பொழுதும் மரமும் மலரும் புள்ளும் விலங்கும் பிறவும் பாடலின் பின்னணியாகத் துலங்கப்பாட்டின் உயிர்ப் பொருளாகக் காதலர் இருவரின் உள்ள நிலை விளங்குகிறது. இயற்கை உலகமும் மனித உலகமும் இயைந்த ஓர் இயைபை இப்பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

# .5 திருக்குறளும் சமுதாயமும்

உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள் சிறந்த நீதி இலக்கியமாகத் திகழ்கின்றது. பல நூற்றாண்டு களுக்கு முன்னர்த் தோன்றிய நூலாயினும் நாள்தோறும் அதன் புகழும் பயனும் பெருகி வருகின்றது. திருக்குறளின் இந்தப் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணங்கள் பலவாகும். எளிய, இனிய எல்லாரும் பின்பற்றத்தக்க அறநெறிக்கருத்து களைக் கூறுவது. நாடு, மொழி, சமயம், இனம் ஆகிய வற்றைக் கடந்து, பொதுநிலையில் அமைந்திருப்பது, பல்கிப் பெருகிய பல உரைகளைப் பெற்றிருப்பது. இன்னோரன்ன இயல்புகள் திருக்குறளுக்குப் பெரும் சிறப்பை நல்கியுள்ளன. அவ்வகையில் ஏறத்தாழப் பதினெட்டு நூற்றாண்டுகட்கு முன்னர்த் தோன்றிய திருக்குறள், தனது அறம் உரைக்கும் நோக்கத்திற்கேற்பச் சமூக நல்வாழ்விற்கான கருத்துகளின் பெட்டகமாக விளங்குகின்றது. காலப் பொதுவான கருத்து களாக அவற்றில் பெரும்பான்மை அமைந் துள்ளதால் அவை இன்றும் மனிதகுலம்உள்ளவரை பயன் படும்; பின்பற்றத்தக்க அறநெறிகளாக அமையும். மக்களினம் வாழும்வரை திருக்குறள் நின்றுநிலைத்து வழிகாட்ட வேண்டும் என்பது திருவள்ளுவர் திருவுள்ளம். அவ்வகையில் திருக்குறள் கூறும் சமுதாயத்தை, அவர் உருவாக்க விரும்பிய, நல்ல, சிறந்த சமுதாயத்திற்கான கருத்துகளை விளக்குவ தாக இக்கட்டுரை அமைகின்றது.

## சமுதாயம்

மனிதன் கூட்டமாகச் சேர்ந்து வாழத் தொடங்கியபோது சமுதாய அமைப்புத் தோன்றியதெனலாம். கூட்டமாகச் சேர்ந்து வாழும்போது கூட்டத்திலுள்ள தனிமனிதனுக்கும், மொத்தக் கூட்டத்துக்குமான நெறிமுறைகள் பல படிப்படியே தோன்றி வளர்ந்தன. இவை பின்னர் சட்ட திட்டங்களாகவும், சமுதாய ஒழுங்குமுறைகளாகவும் மாறின. இவ்வாறு இயல்பாகத் தோன்றி வளரும் முறைகள் சூழ்நிலையாலும், அம்மக்களின் அறிவுநிலை, நம்பிக்கைகள், நாகரீகம். பண்பாடு ஆகியவற்றிற்கேற்ப நல்லனவாகவோ, தீயனவாகவோ அமையலாம். சில பின்வருவோரால் புறக்கணிக்கப் படலாம். அப்போது சமுதாயத்தில் பல குழப்பங்களும் அமைதியின்மையும் தோன்றிச் சீரழிவு ஏற்படுகின்றது, இதைக்காணும் நல்நெஞ்சினர் இக்குறைகளைப் போக்கி நல்ல சமுதாயம் அமையப் பாடுபடுகின்றனர். அதற்காக அறக்கருத்துகளைக் கூறி அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்த முனைகின்றனர். தமக்கென வாழாப் பிறர்க்குரிய மாந்தரான இவர்களின் நல்லுரையால் சமுதாயம் செழிப்பும் செம்மையும் அடைகின்றது. அவ்வகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நூலான திருக்குறள் மண்ணில் நல்லவண்ணம் வாழப் பல வழிகளைக் கூறுகின்றது. அவற்றைத் தனிமனிதருக்கானவை, குடும்பத்துக்கானவை, அரசுக்கானவை எனப் பிரித்தறிதல் தெளிவு தரத்தக்கதாகும்.

## தனிமனிதன்

ஒரு முழுமை என்பது பல கூறுகளின் ஒருங்கிணைவாகும். அந்த முழுமைக்கென்று பல சட்ட திட்டங்கள் வகுக்கப்படும். அவ்வாறே அம்முழுமையிலுள்ள பகுதிகளுக்கும் பல சட்ட திட்டங்கள் வகுக்கப்படும். பகுதிகளின் சரியான கூட்டுறவே முழுமையின் சிறப்பாகும். அதுபோன்றே தனிமனிதனின்

சிறப்பான வாழ்க்கையே சமுதாயத்தின் சிறப்பாகும். தனி மனித வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாகவும் ஊக்குவிக்கியாகவும் விளங்குவது கடவுள் நம்பிக்கை. இறை வலியுறுத்தும் திருவள்ளுவர்,

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றா டொழாஅ ரெனின்**

*திருக்குறள்; கடவுள் வாழ்த்து : 2*

என்று கூறுகின்றார். ஒருவனுடைய கல்வியின் பயன் கடவுளினது இணையில்லா அடிதொழலே என்பது திண்ணம். கடவுளுக்கு இணையாகப் போற்றப்படும் தன் குல முன்னோர்களையும் ஒருவன் போற்றி வணங்கவேண்டும். இஃது அன்பின் அடிப்படையிலும் நன்றியுணர்ச்சியின் அடிப்படையிலும் தேவையானதாகும். அதை இல்வாழ்க்கை அதிகாரத்தில் முற்றுத்துறந்த முனிவரது பெருமையையும் அவரைப் போற்றிக்கொள்ளுமாற்றையும் திருவள்ளுவர் விரிவாகப் பேசுகின்றார். நல்ல நூல்களில் அவர்கள் போற்றப்படவேண்டும் என்பதை,

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவற் றுணிபு**

*திருக்குறள்; நீத்தார் பெருமை : 1*

என்னும் குறட்பாவில் சுட்டிச்செல்கிறார். இப்பெரியோர்கள் வலியுறுத்தும் அறம் அனைவரும் பின்பற்றவேண்டியதாகும். அறம் என்பது அகச்சார்பானதா? புறச்சார்பானதா?

**மனத்துக்கண் மாசில னாத லனைத்தற**
**னாகுல நீர பிற**

*—திருக்குறள்; அறன்வலியுறுத்தல் : 4*

என்ற மனத்தால் தீங்கில்லாதவனாக விளங்குதலே அடிப்படைத் தேவை என்பதை விளக்குகின்றார். இது போன்ற இடங்களில் திருவள்ளுவரின் சிறப்புத் தெளிவாகப்

புலனாகின்றது. மனத்தால் தூயவனாக விளங்கினால் புறச் செயல்களும் தூயனவாக விளங்கும் என்பது அறிவியலை யொட்டிய உண்மையாகவும் அமைகின்றது. மேலும் பொது நிலையில் சுட்டியுள்ளதால் எக்காலத்தாருக்கும் எந்நாட்டின ருக்கும் உரிய கருத்தாகவும் விளங்குகின்றது. அவ்வறம் என்பது என்ன?

**அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கு**
**மிழுக்கா வியன்ற தறம்**

—திருக்குறள்; அறன்வலியுறுத்தல் : 5

என்னும் குறட்பாவில் பிறராக்கம் கண்டு பொறாமை, இன்பமொழி, கோபம் கடுஞ்சுடுசொற்கள் இவை தவிர்ந்த செயல்களே அறம் ஆகும் என்று விளக்குகிறார். இவற்றைத் தவிர்த்து ஒருவன் இருப்பானேயானால் அவன்மாமனிதனாக விளங்குதல் கண்கூடு. மேலும் இவை பின்பற்ற முடியாதன என்று சொல்லவும் இயலாது. ஏனெனில் இவை ஒரு மனிதனின் அடிப்படை நற்குணங்களாகும். இவற்றை ஒவ்வொருவரும் பின்பற்றினால் நாடும் வீடும் நன்னிலையில் விளங்குவது உறுதி.

ஒவ்வொருவருடைய வாழ்நாளும் வளர்ந்து வரும்போது சமூகக் கடமைகளும் மாறிமாறி வருகின்றன. குழந்தைப் பருவம், குமரப்பருவம், பெற்றோர்நிலை, முதிர்ச்சிநிலை ஆகியவை இயல்பாக அனைவரின் வாழ்க்கையிலும் ஏற்படும் ஒன்றாகும். இனிமைத் தன்மையைக் கூறும்போது,

**குழலினி தியாழினி தென்பதம் மக்கள்**
**மழலைச்சொற் கேளா தவர்**

—திருக்குறள்; புதல்வரைப் பெறுதல் : 6

என்று குழந்தையால் பெறும் இன்பத்தை விளக்குகிறார் திருவள்ளுவர். மக்கள் தங்கள் பெற்றோர்க்குச் செய்யும் கைம்மாறு யாது? இதற்கு,

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்**
**சான்றோ னெனக்கேட்ட தாய்.**

—திருக்குறள்; புதல்வரைப் பெறுதல் : 9

**மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை**
**யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.**

—திருக்குறள்; புதல்வரைப் பெறுதல் : 10

என்னும் குறட்பாக்களில் விடை கூறுகின்றார் திருவள்ளுவர். இவ்விரண்டு பண்புகளையும் இளைஞர்கள் பெற்றுவிட்டால் பெற்றோர்களும் மற்றோர்களும் நிறைவான வாழ்க்கை வாழலாம் என்பது திண்ணம். தம் மக்கட்குப் பெற்றோர்கள் செய்ய வேண்டிய கடமைகளை விளக்கும்போது,

**தந்தை மகற்காற்று நன்றி யவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்.**

—திருக்குறள்; புதல்வரைப் பெறுதல் : 7

என்று கற்றோர் அவைகளில் முந்தியிருக்கச் செய்யும் பணியைப் பெற்றோர்களின் பணியாகத் திருவள்ளுவர் விளக்குகின்றார். பெற்றோர்களின் கண்காணிப்பே குழந்தைகளின் சரியான வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவது என்பதை அனைவரும் அறிவோம்.

தனி மனிதர்களின் நடத்தையில் சிறப்பாகப் பின்பற்றி நடக்க வேண்டியது பிறனில் விழையாப் பேராண்மையாகும். உலகத்தில் அனைத்துமே காமத்தின் அடிப்படையில் நிகழ்வது என்பது அறிஞர்களின் தெளிவு. ஆயின் அது மிகு காமமாகக் காமவெறியாக மாறும்போது சமுதாயத்தால் பழிக்கப்படுகின்றது; வெறுக்கப்படுகின்றது. அச்செயலைச் செய்வோரும் பழிக்கப்பட்டு வெறுக்கப்படுகின்றனர். மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகூறும் திருக்குறள் பிறன்மனை நயத்தல் என்னும் சமுதாயப் பெருநோயை வன்மையாகக் கண்டிக்கின்றது.

**அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று.**

—திருக்குறள்; பிறனில் விழையாமை : 10

என்று தீய செயல்கள் எல்லாவற்றிலும் தீயது பிறன்மனை நயத்தல் என்பதை விளக்குகின்றார் திருவள்ளுவர்.

சமூக ஒருங்கிணைவில் அனைத்துச் செயல்களும் நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்கின்றன. ஒருவரை யொருவர் நம்புவதற்கு அனைவரிடமும் வாய்மையும் பொய்கூறா நல்லியல்புகளும் அமைந்திருக்க வேண்டும். சமுதாயத்தைப் பீடித்துள்ள நோய்களுக்கு மருந்தளிக்கும் சமுதாய மருத்துவராகத் திருவள்ளுவர் விளங்குவதால் அந்நோய்களைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகளையும் சுட்டிக் காட்டுகின்றார்.

**தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

—திருக்குறள்; வாய்மை : 3

என்று பொய்கூறுதலைத் தவிர்க்கச் சொல்லும் திருவள்ளுவர்

**பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கு மெனின்.**

—திருக்குறள்; வாய்மை : 2

என்று கூறித் தனது, உலகத்தோடு ஒட்டிக் கருத்துகளைக் கூறும் பாங்கைப் புலப்படுத்துகின்றார். இதுதான் திருவள்ளுவர் மற்ற நீதி நூலாசிரியர்களிடமிருந்து வேறுபட்டுச் சிறந்து நிற்பதாகும்.

**வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்**
**தீமை யிலாத சொலல்**

—திருக்குறள்; வாய்மை : 1

என்று வாய்மையை விளக்கிக் காட்டுகின்றார் திருவள்ளுவர். தான் பெரிதும் உரைப்பதான,

**யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்**
**வாய்மையி னல்ல பிற.**

—திருக்குறள்; வாய்மை : 10

என்னும் திருக்குறளைப் படைத்தளித்துள்ளார்.

மனிதன் மனிதனாக வாழ வேண்டும். அவ்வாறு அவனை வாழவிடாது மனிதத் தன்மையிலிருந்து இறுக்கி விலங்கு நிலைக்குக் கொண்டு செல்வனவற்றுள் தலைமையானது கோப உணர்ச்சி. இதனை 'வெகுளாமை' என்னும் அதிகாரத்தில் விரிவாகச் சுட்டிச் செல்கின்றார் திருவள்ளுவர். ஒருவன் மற்றொருவனுக்குச் சினம் ஏற்படா வண்ணம் நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் சினத்தைத் தூண்டுமாறு ஒருவன் தன்னிடம் நடந்து கொண்டாலும் அதைப் பொறுத்து அருள வேண்டும் என்பது திருவள்ளுவர் திருவுள்ளம். வெகுள்ாமை என்னும் அதிகார விளக்கத்தில் பரிமேலழகர் 'சினத்தைச்செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டுளதாயவிடத்தும் அதனைச் செய்யாமை என்று கூறுவதும் இங்குச் சிந்திக்கத்தக்கது. தனக்கு மெலியார், வலியார் ஆகிய எவரிடத்தும் வெகுளாமை வேண்டும் என்பது திருக்குறள் கூறும் நடத்தையியல்.

**மறத்தல் வெகுளியை யார்மட்டுந் தீய**
**பிறத்த லதனான் வரும்.**

—திருக்குறள்; வெகுள்ாமை : 3

என்று தீமைகளுக்கெல்லாம் காரணம் சினம் என்பதை விளக்கிக் காட்டுகின்றார்.

**சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு**
**மேமப் புணையைச் சுடும்.**

—திருக்குறள்; வெகுளாமை : 6

என்னும் குறட்பாமூலம் தனது உய்வினைத் தடுக்கும் தடையாகச் சினத்தை உருவகப்படுத்தி, சினம் ஆனது தன்னைச்

சேருபவரையும் கொன்றுவிடும் என்று சுட்டுகின்றார். இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு போன்றவற்றுக்குச் சினம் அடிப்படைக் காரணம் என்பதை இன்றைய மருத்துவ நிபுணர்களும் வலியுறுத்தி வருகின்றனர். அடுத்து, இன்னா செய்யாமையைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். இன்னா செய்யாமை என்பதை விளக்கும் பரிமேலழகர் "தனக்கு ஒருபயனோக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானாதல் ஒருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை" என்று குறிப்பிடுகின்றார். இன்னாசெய்வாரை எச்சரிக்கும் திருவள்ளுவர்,

**பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் றமக்கின்னா**
**பிற்பகற் றாமே வரும்.**

—திருக்குறள்; இன்னா செய்யாமை : 9

என்று செய்பவனுக்கு வரும் தீங்கை எடுத்துக்காட்டிச் சமூக ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வழிகாட்டுகின்றார். அவ்வாறன்றி ஒருவர் இன்னா செய்துவிட்டாலும் அதைப் பொறுத்தருள வேண்டும். ஏனெனில் உலகில் அனைவரும் ஒரே நிலையில் இருப்பதில்லை. சூழ்நிலை, குடிப்பிறப்பு, கல்வி அறிவு, செல்வநிலை ஆகியவற்றிற்கேற்ப ஒவ்வொருவரது நடத்தையும் அமைகின்றது. ஆகையால் சமுதாய உறுப்பினர்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வினால், ஒருவர் இன்னாசெய்தல் என்பது இயல்பானது. அப்போது அதைப் பொறுத்து வாழ்வதே சிறப்பு என்பதை,

**இறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்.**

—திருக்குறள்; இன்னாசெய்யாமை : 2

என்றவாறு விளக்கும் திருவள்ளுவர் இதற்கும் ஒருபடிமேலே போய் அறநூலாசிரியர் என்னும் முறையில்,

**இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்**

—திருக்குறள்; இன்னாசெய்யாமை : 4

என்று சமுதாய நன்னிலைக்கு வழிகாட்டுகின்றார். சமுதாய உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய மற்றொரு அடிப்படைப் பண்பு ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கி உதவிப் பல்லுயிர் ஓம்புதல். இதுவே அறிவின் பயனாகும்.

**பகுத்துண்டு பல்லுயிரோம்புத னூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை**

—திருக்குறள்; கொல்லாமை : 2

**அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்**
**தந்நோய்போற் போற்றாக் கடை**

—திருக்குறள்; இன்னாசெய்யாமை : 5

என்னும் குறட்பாக்களில் சமுதாய ஒருங்கிணைப்பின் உச்ச நிலையையே சுட்டிக் காட்டுகின்றார் திருவள்ளுவர். இவ்வாறு இன்றிச் சமூகச் சீரழிவுக்குக் காரணமாக அமைவனவற்றை, சமூக நோயாக அமைவனவற்றைக் குறிப்பிடும்போது,

**காமம் வெகுளி மயக்க மிவைமூன்று**
**நாமங் கெடக்கெடு நோய்**

—திருக்குறள்; மெய்யுணர்தல் : 10

என்று காமவெறியும், வெகுளியும், மயங்க உயரும் மயக்கமும் சமுதாய நோய்கள் என்று சுட்டிக் காட்டுகின்றார். மயக்கத்தை நீக்கி.

**எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு**

—திருக்குறள்; மெய் உணர்தல் : 5

என்றவாறு ஒரு பொருளின் இயல்பான தன்மையை உணர வேண்டும் என்று திருவள்ளுவர் விளக்குகின்றார்.

ஒருவனுக்கு அமைய வேண்டிய உயரிய குணங்களை விளக்கும் திருவள்ளுவர்,

**பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய**
**சுருக்கத்து வேண்டு முயர்வு.**

திருக்குறள்; மானம்—:3

என்று பணிவு எல்லாவிடத்தும் எல்லார்க்கும் வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

**அன்புநா ணொப்புறவு கண்ணோட்டம் வாய்மையோ**
**டைந்து சால்பூன்றிய தூண்.**

—திருக்குறள்; சான்றாண்மை : 3

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை சான்றாண்மையின் தூண்கள் என்று விள்க்கி அனைவரும் பெறவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார். இவை அமையப்பெற்றால் சமுதாயம் சிறப்பான நிலையில் விளங்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஒவ்வொரு வருடைய வாழ்க்கைக்கும் பொருள் இன்றியமையாதது என்பதை உணர்ந்து, உணர்த்தும் திருவள்ளுவர்,

**பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.**

—திருக்குறள்; பொருள் செயல்வகை : 1

**செய்க பொருளைச் செறுநர்செருக்கறுக்கு**
**மெஃகதனிற் கூரிய தில்**

—திருக்குறள்; பொருள் செயல்வகை : 9

என்று பொருளின் இன்றியமையாமையை விளக்குகின்றார். ஆயின் அப்பொருளை எவ்வழியிலும் ஈட்டலாமா? கூடாது. நல்வழியில் ஈட்டி, தனக்கும் சமுதாயத்துக்கும் பயன்படு மாறு அப்பொருளைப் பயன்படுத்த வேண்டும். பொருள் ஒரு சிலரிடத்து மட்டும் குவியுமானால் அது பல தீமைகளை

ஏற்படுத்திச் சமூக ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கிச் சமுதாயப் பூசல்களை உருவாக்கிவிடும்.

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்**
**கலந்தமை யாற்றிரிந் தற்று**

*—திருக்குறள்; பண்பு உடைமை : 10*

அடுத்ததாகச் சமுதாயத்தைப் பிடித்துள்ள நோய்கள் மதுவும் விலைமகளும், சூதும் சாதிசமயப் பூசல்களும் முதலாயின. இவற்றை வன்மையாகக் கண்டிக்கும் திருவள்ளுவர்,

**அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா**
**ரின்சொ லிழுக்குத் தரும்.**

*—திருக்குறள்; வரைவின் மகளிர் : 1*

**உட்கப் படாஅ ரொளியிழப்ப யெஞ்ஞான்றுங்**
**கட்காதல் கொண்டொழுகு வார்.**

*—திருக்குறள்; கள் உண்ணாமை : 1*

**சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**
**வறுமை தருவதொன் றில்**

*—திருக்குறள்; சூது : 4*

என்னும் குறட்பாக்களில் அவற்றின் தீமையை விளக்கிக் காட்டுகின்றார். ஒருவன் உடல் நலத்தோடு வாழ்ந்தால் தான் தனக்கும் சமுதாயத்திற்கும் நன்மை செய்ய இயலும், நோயாளிகள் சமுதாயத்திற்குப் பெருஞ்சுமை. இதையுணர்ந்த திருவள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தைப் படைத்துச் சமுதாயச் சிறப்புக்கு வழிகாட்டுகின்றார். சமுதாயச் சீரழிவுக்கு முதற்காரணமாக அமைவது சாதி சமயப் பூசலாகும். மக்கள் ஓரினமாக வாழத் தடையாக இருப்பவற்றை வெறுத்தொதுக்குக என அறிவுரை கூறும் திருவள்ளுவர்,

**பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

—திருக்குறள்; பெருமை : 2

என்று விள்க்கிக் காட்டுகின்றார். தான் சமயப் பொதுவான கருத்துகளைக் கூறியதன் மூலம் ஒரு குறிப்பிட்ட கடவுளை முன்னிறுத்திக் கடவுள் வாழ்த்தை இயற்றாததன் மூலமும் தனது சமயப் பொதுவான நிலையை விளக்கிக் காட்டியுள்ளார் திருவள்ளுவர்.

அனைவரும் பழிபாவங்களுக்கு அஞ்சி இருந்தால்தான் சமுதாயத்தில் குற்றங்குறைகள் இல்லாமல் இருக்கும். நாணுடைமை என்னும் அதிகாரத்தில் பழிபாவங்களுக்கு அஞ்ச வேண்டியதன் இன்றியமையாமையைத் திருவள்ளுவர் பெரிதும் வலியுறுத்தியுள்ளார்.

**பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்**
**குறைமதி யென்னு முலகு**

—திருக்குறள்; நாண் உடைமை : 5

என்னும் குறட்பாவில் பிறர் பழிக்கும் நாணும் தன்மையை வலியுறுத்தியுள்ளார். இவ்வாறான பல அறக்கருத்துளைத் தனியொருவருக்குக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

## குடும்பம்

''இல்லறமல்லது நல்லறமன்று'' என்பது தமிழ் முதுமொழி. இதுவே தமிழர்களின் வாழ்க்கைக் கோட்பாடெனலாம். அன்பு கொண்டு கருத்தொருமித்து ஓர் ஆணும் பெண்ணும் கூடி மக்கட்பேற்றுடனும் சுற்றத்தாரைப் போற்றியும் வாழும் வாழ்க்கை குடும்ப வாழ்க்கை. இந் நிலையில்தான் அன்பும் அருளும் மலர முடியும். ஒருவருக் கொருவர் பிணைப்பு ஏற்பட முடியும். மன அமைதியையும் சமுதாய ஒருமைப்பாட்டையும் சிறந்த குடும்பங்கள்தான்

அளிக்க முடியும். இக்கருத்தையே திருவள்ளுவரும் பெரிதும் வலியுறுத்துகின்றார். இல்லறத்தின் சிறப்பு மனையாளின் அமைப்பைப் பொருத்தமைகின்றது. இதையே "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்னும் பழமொழியும் உரைக்கின்றது.

**மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை**
**யெனைமாட்சித் தாயினு மில்.**

*—திருக்குறள்; வாழ்க்கைத்துணைநலம் : 2*

என்று மனைச்சிறப்பு மனைவிச் சிறப்பு என்று பேசுகின்றது திருக்குறள். மனைவாழ்க்கையின் மாட்சிமை மக்கட் பேற்றால் சிறப்புறுகின்றது.

**மங்கல மென்ப மனைமாட்சி மற்றத**
**னன்கல நன்மக்கட் பேறு.**

*—திருக்குறள்; வாழ்க்கைத்துணைநலம் : 10*

என்று விளக்கும். திருவள்ளுவர், உலகத்துள் ஒவ்வொருவரும் பெறத்தக்க பேறுகள் பலவற்றுள் சிறப்பாகவும் முதன்மையானதாகவும் இன்றியமையாததாகவும் விளங்குவது மக்கட்பேறாகும் என்பதை,

**பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற.**

*—திருக்குறள்; புதல்வரைப்பெறுதல் : 1*

என்னும் திருக்குறள்மூலம் வலியுறுத்துகின்றார். மேலும் புதல்வரைப்பெறுதல் என்னும் அதிகாரக் குறட்பாக்களில் மக்கட்பேற்றினால் பெறும் இன்பத்தை விளக்கிக் காட்டுகின்றார். இவ் இல்வாழ்க்கையின் அடிப்படை அன்பும் அறனும் ஆகும்.

**அன்பிலா ரெல்லாந் தமக்குரிய அன்புடையா**
**ரென்பு முரியர் பிறர்க்கு.**

—திருக்குறள்; அன்புடைமை : 2

என்று அன்பே அனைத்திற்கும் அடிப்படையாயமைவதை விளக்குகின்றார். மற்றொரு கடமை, சிறப்பு விருந்தோம்பலாகும். விருந்தென்பது முன்னர் அறிமுகமானவர், அறிமுகமாகாதவர் என்று இருநிலைகளில் அமையலாம். இவ்விரு வகை விருந்தினரையும் போற்றி நிற்றலே இல்லறத்தின் பெரும் பயன்.

**இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

—திருக்குறள்; விருந்தோம்பல் : 1

என்பது வள்ளுவம். குடும்பத்திலும் வெளியிலும் இன்சொல் சொல்பவனாக, இன்முகம் உடையவனாக ஒவ்வொருவனும் விளங்கவேண்டும்; செய்நன்றியுடையவனாக இருத்தல் வேண்டும்; நடுவுநிலைமை தவறாமல் பிறன்பொருளையும் தன் பொருளாகப் போற்றவேண்டும்; மெய், மொழி, மனம் தீநெறிக்கண் செல்லாது அடங்கும் தன்மையுடையவனாக விளங்குதல் வேண்டும்; தத்தமக்குரிய ஒழுக்கத்தினைப் போற்றிவாழ்பவராக அமைதல் வேண்டும்; பிறர்மனைவியை விரும்பாப் பேராண்மையுடன் விளங்கவேண்டும்; பொதுமையுடையவராக விளங்கவேண்டும்; பிறர் ஆக்கம், செல்வம் கண்டு பொறாமை கொள்ளலாகாது; பிறர்க்குரிய பொருளை வஞ்சத்தால் அடைய எண்ணக்கூடாது; ஒருவரைக் காணாத வழி அவரை இகழ்ந்துரைக்கக் கூடாது; தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லக் கூடாது; பழிபாவங்கள் செய்தற்கு அஞ்ச வேண்டும்; உலகத்தோடு ஒட்ட வாழவேண்டும்; வறியார்க்கு வழங்கும் வள்ளல்தன்மை வேண்டும்; புகழுடையவராக வாழவேண்டும்? அருள் உடையவராக வாழவேண்டும்; ஊனுண்டலைத் தவிர்க்க வேண்டும் போன்றன திருவள்ளுவர்

வலியுறுத்தும் நல்லறங்கள். ஒவ்வொரு குடும்பமும் பல்கலைக்கழகமாக விளங்கவேண்டுமானால் மேற்கூறிய கருத்துகளை அனைவரும் பின்பற்றவேண்டும்.

திருவள்ளுவர் கூறும் துறவு இல்லிறந்து காடுசென்று கடுந்தவம் செய்யும் துறவல்ல, இல்லத்திலிருந்து நற்செயல் களைச் செய்து மக்கட்பேறடைந்து அவர்களைச் சான்றோராக்கி அவையில் முந்தியிருக்கச் செய்து நாள் தோறும் இயலும் வகையிலெல்லாம் சமூகத் தொண்டாற்றி, ஐம்பொறிகளையும் அடக்கி வாழ்வதே திருவள்ளுவர் கூறும் துறவு.

**அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்**
**போஒய்ப் பெறுவ தெவன்.**

—திருக்குறள்; இல்வாழ்க்கை :8

என்னும் திருக்குறள் திருவள்ளுவரின் துறவுக்கோட்பாட்டை விளக்குகின்றதெனலாம். 'இல்வாழ்க்கை' அதிகாரத்தில்,

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

—திருக்குறள்; இல்வாழ்க்கை : 10

என்று கூறுவதன்மூலம் இல்வாழ்க்கையையே திருவள்ளுவர் வலியுறுத்துவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் துறவறவியல் தொடக்கத்தில் பரிமேலழகர் துறவறம் பற்றி விளக்கும் போது 'துறவறமானது மேற்கூறிய இல்லறத்தில் வழுவா தொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய் அறம்' என்று குறிப்பிட் டிருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

**மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்**
**பழித்த தொழித்து விடின்**

—திருக்குறள்; கூடாஒழுக்கம் : 10

என்பன போன்ற குறட்பாக்களும் திருவள்ளுவரின் வாழ்வாங்கு வாழ்வதே வாழ்க்கை, இல்லறமே நல்லறம்

என்னும் கருத்தை வற்புறுத்துவனவாகும். பாவேந்தர் பாரதிதாசன் இக்கருத்தை வலியுறுத்திக் குடும்பவிளக்கின் இறுதிப் பகுதியாக 'முதியோர் காதல்' என்னும் பகுதியை வைத்துள்ளதும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

பல இடங்களில் திருவள்ளுவர் சமுதாயப் பழக்க வழக்கங்களைச் சுட்டிச் செல்கின்றார். சான்றாகக் குறியெதிர்ப்பை (திருக்குறள் ஈகை : 1) என்பதைக் குறிப்பிடலாம். குறியெதிர்ப்பை என்பதற்கு விளக்கம் தரும் பரிமேலழகர் அளவுகுறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது என்று கூறுகின்றார். இது போன்ற பல சமுதாய நிகழ்வுகளைத் திருவள்ளுவர் சுட்டிச் செல்கின்றார்.

### அரசு

தனிமனிதர்களின் சேர்க்கை குடும்பமாகவும், குடும்பங் களின் சேர்க்கை நாடாகவும் அமைகின்றது. நாட்டாட்சி நல்லதாக அமைந்தால்தான் மக்கள் நலமாக வாழ முடியும் தமிழக வரலாற்றில் முற்காலந்தொட்டு நிலையான ஆட்சி அமையாததால் ஏற்பட்ட குழப்பங்களும் இழப்புகளும் பல. இக்கால அரசியலில் நிலையான அரசாட்சி இல்லாத தால் பல நாடுகளில் ஏற்படும் பூசல்கள் நல்லாட்சியை வலியுறுத்தும் சான்றுகளாக அமைகின்றன. திருவள்ளுவர் பொருட்பாலில் அரசு பற்றி விரிவாகப் பேசிச் செல்கின்றார்.

அரசின் பண்புகள், அரசு நடத்துவார்க்கு வேண்டிய குணநலன்கள், அரசு அங்கங்களின் செயற்பாடுகள், அவர்தம் கடமைகள் போன்றன குறித்து விரிவாக விளக்கப்படுகின்றது. முடியாட்சி நடந்த காலத்துக் கருத்துகளே. எப்படியெனில் திருவள்ளுவர் அரசு வகை பற்றி விளக்காமல் அரசு நடாத்துவார் மாட்சி பற்றியே விளக்கியுள்ளார்.

சொல்வன்மை, வினைத்தூய்மை, அவையஞ்சாமை போன்றன இன்றைய மக்களாட்சித் தத்துவத்திற்குப்

பெரிதும் தேவைப்படுவன. இன்றைய அரசியல் துறையில் தேர்தலுக்கு முதன்மையான இடம் கிடைக்கின்றது. தேர்தலில்தான் யாருக்கு ஆட்சி என்பது நிச்சயிக்கப்படுகின்றது. அத்தேர்தலில் வெற்றி பெறத் தங்கள் கொள்கைகளையும், வாக்குறுதிகளையும் வாக்காளர்களுக்குத் தெரிவிக்கப் பொதுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அப்போது சிறந்த சொற்பொழிவு வன்மையுடையவர்களே மக்களைக் கவர்ந்து வாக்குகளைப் பெற முடியும். அதுபோன்றே நாடாளுமன்றங்களிலும் சொல்வன்மையிருந்தால்தான் பேசி வாதாட முடியும். எனவே இன்றைய குடியாட்சி முறையில் பேச்சு வன்மையின் பங்கு முதன்மையானதாக அமைகின்றது. அரசு பற்றித் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றுள் முத்தாய்ப்பாய் விளங்கும் சில கருத்துகளை இங்குக் காணலாம்.

அரசியலில் தலைமைக்கும் மற்றவர்களுக்கும் இருக்க வேண்டிய உறவை,

**அகலா தணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்**

—திருக்குறள்; மன்னரைச் சேர்ந்து ஒழுகல் : 1

என்னும் குறள்மூலம் விளக்கிக் காட்டுகின்றார். அரசியலில் நட்புக்கு இன்றியமையாத இடம் உண்டு. பல நாட்டுடன் நல்ல நட்புக் கொண்டிருக்கும் ஒரு நாட்டிற்குப் பலவிதமான உதவிகள் கிடைப்பதோடு, அந்நாட்டின்மீது படையெடுக்கப் பிற நாடுகளும் அஞ்சும். இதனால் விளையும் நன்மைகள் மிகப் பல. இதை,

**செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு.**

—திருக்குறள்; நட்பு : 1

என்று வலியுறுத்துகின்றார் திருவள்ளுவர். பெரியாரைப் பிழையாத தன்மை அரசியலில் வேண்டற்பாலது.

**ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்**
**போற்றலு ளெல்லாந் தலை.**

—திருக்குறள்; பெரியாரைப் பிழையாமை : 1

என்று எடுத்துரைக்கின்றார் திருவள்ளுவர்.

ஒரு நாட்டில் இருக்கக்கூடாத ஒன்று உட்பகையாகும். இது குறித்து எச்சரிக்கும் திருவள்ளுவர்,

**வாள்போல் பகைவரை யஞ்சற்க அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு.**

—திருக்குறள்; உட்பகை : 2

என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக, சமுதாயம் சிறப்புற்றோங்க வழிகாட்டியாக, நல்லது உரைக்கும் சான்றோராக விளங்குகின்றார் திருவள்ளுவர். அவர்தம் கருத்துகள் இன்றைய அமைதியற்ற, சீர்கேடான சமுதாயத்திற்கு மிகவும் தேவைப்படுவனவாகும். வள்ளுவத்தின்வழி வாழ்க்கையமையுமானால் நாடும் வீடும் மிகுநலம்பெறும் என்பது திண்ணம்.

# 6. கார்நாற்பது காட்டும் தலைமகன் பண்புகள்

## தோற்றுவாய்

ஒருவர் பேசும் முறை, அவர் மற்றவர்களோடு பழகும் விதம், நடை உடை பாவனைகள், பழக்க வழக்கங்கள், பிறரோடு உரையாடும் உரையாடல் திறம், அவர்களைப் பற்றிய மற்றவர்கள் எண்ணம்—இவை அவர் தம் பண்புகளைப் பற்றி விளக்குவனவாக அமைகின்றன. நடைமுறை வாழ்க்கையில் ஒருவரின் பண்புகளை அறிய இவை கருவியாக அமைவதைப் போன்றே இலக்கிய உலகில் காணப்படும் பல்வகைப் பட்ட மாந்தர்களின் பண்புநலன்களைப் பற்றி அறிய இவை அளவுகோலாகின்றன. இந்த அளவுகோலை அடிப்படையாகக் கொண்டு கார்நாற்பது காட்டும் தலைமகன் பண்புகளைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரை.

## கார்நாற்பதில் தலைமகன்

கார்நாற்பதில் இடம்பெறும் நாற்பது பாடல்களில் 12 பாடல்கள் தலைமகன் கூற்றுக்களாக அமைந்தவை. இவற்றில் வினைமுற்றிய தலைமகன் நெஞ்சொடு கூறியதாக அமைந்தவை நான்கு பாடல்கள். வினைமுற்றிய தலைமகன் பாகனொடு கூறியதாக அமைந்தவை ஏழு பாடல்கள், வினைமுற்றி மீளும் தலைமசன் பாகனொடு கூறியது ஒரு

பாடல். இவை தவிர ஏனைய 28 பாடல்களும் தோழி கூற்றுகள். இத்தோழி கூற்றுக்கள் சிலவும் தலைமகன் பண்புகளை அறிய உதவுகின்றன. ஆக, கார்நாற்பதில் தலைமகன் வாய்மொழிகளும் தோழியின் வாய்மொழிகளும் அவன்தன் பண்புநலன்களைப் பறைசாற்றி நிற்கின்றன.

## சமய அறிவு

தலைமகன் முதன்முதலில் பேசுகின்ற பேச்சே அவன்தன் இறையுணர்வைப் புலப்படுத்தி நிற்கிறது. செவ்விய தாளினையும் பூஞ்சினைகளையுமுடைய வெண்கடம்ப மரங்கள் மலர்ந்த நிலையைக் கூற வருகின்றவன் அவற்றை நாஞ்சில் வலவனின் நிறத்திற்கு ஒப்புமைப்படுத்திப் பேசுகின்றான். இது அக்கடவுள்மாட்டு அவன்கொண்ட அன்பினைக் காட்டுவதாக அமைகிறது.

**நாஞ்சில் வலவன் நிறம்போலப் பூஞ்சினைச்**
**செங்கால் மராஅந் தகைந்தன**

என்ற அவன் கூற்று அவன்தன் இறையுணர்வைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

## விலங்கியல் அறிவு

கார் நாற்பது காட்டும் விலங்குகளின் செயலைப் பற்றி அறிந்த விலங்கியல் அறிவு மிக்கவனாகவும் காணப்படுகின்றான். இடியோசையால் நாகம் வருந்தும் என்பதை,

**ஏறொடு அரு மணி நாகம் அனுங்க**

என்ற கூற்றின்வழி வெளிப்படுத்துகின்றான். புல்லினை உண்கின்ற குதிரையின் தலையில் கவரிமான் மயிரால் செய்யப்பட்ட சாமரை எனப்படும் தலையாட்டம் அணியப் பெறும் என்பதை,

.................வுளையணிந்து
புல்லுண் கலைமாவும் பூட்டிய

எனக் கூறுகின்றான். இச் செய்திகள் அவன்தன் விலங்கியல் அறிவினைப்புலப்படுத்தி நிற்கின்றன.

## இயற்கை அறிவு

1. நாஞ்சில் வலவன் நிறம்போலச் செங்கால் மராஅந் தகைதல்

2. செல்வ மழைத் தடங்கட் சின்மொழிப் பேதைவாய் முள்ளெயிறு ஏய்ப்ப சிறுமுல்லைப் போது அவிழ்தல்

3. நல்லார் இள்நலம் போலக் கவினி வளருடையார் ஆக்கம் போல் காடு பூத்தல்

4. குமிழின்பூப் பொன்செய் குழையின் துணர் தூங்கல்

5. சிரல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப ஈர்ந்தண் தளவம் தகைதல்

இவை அனைத்தும் கார்காலத்தில் நிகழக்கூடியன எனக் கூறும் கூற்று அவன்தன் இயற்கை அறிவை உணர்த்தி நிற்கிறது. இப் பூக்கள் அனைத்தும் கார்காலத்தில் பூக்கக் கூடியன எனக் கூறுவது அவன் தன் தாவர இயல் அறிவை உணர்த்துகின்றது.

## இயந்திர அறிவு

கார் நாற்பதின் தலைமகன் தன் தேரினைப் பற்றிக் கூறும்போது எந்திரச் செய்கைகளான மாட்சிமைப்பட்ட திண்ணியதேர் எனக் கூறுவது அவன்தன் அலங்கரிக்கப் பட்ட இயந்திர அறிவைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

**பொறிமாண் புனைதிண்டேர்**

என்ற பகுதியால் இதனை அறியலாம்.

## வானியல் அறிவு

மேகமானது கடலினது நீரை முகந்து கொண்டு சென்று பின்னர் மலையிடத்தே பொழியும் தன்மை உடையது என்பதை,

**கடனீர் முகந்த கமஞ்சூல் எழிலி**
**குடமலை ஆகத்துக் கொள்அப்பு இறைக்கும்**

என்று கூறுகின்றான். மேலும்,

**கார்ச்சேணிகந்த கரைமருங்கி னீர்சேர்ந்து**

என்ற தலைமகன் கூற்றும் அவன்தன் வானியல் அறிவைப் புலப்படுத்துவதாக அமைகிறது. மழை பொழியும் முறையினை இத் தலைமகன் கூற்று உணர்த்தி நிற்கின்றது.

## இசை ஈடுபாடு

கார் நாற்பது காட்டும் தலைமகன் இசையில் நாட்டம் உடையவன் என்பதை அவன் கூற்றுக்களாலேயே தெளியலாம். காட்டினைப் பற்றி வருணிக்க வருகின்றவன்,

**தங்காத் தகைவண்டு பாண்முரலுங் கானம்**
**கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போற்**
**படாஅ மகிழ்வண்டு பாண்முரலும் கானம்**

என்றெல்லாம் காட்டில் வண்டுகள் இசையெழுப்பித் திரிதலைக் குறிப்பிடுவது அவன்தன் இசை ஈடுபாட்டினைப் புலப்படுத்துவதாக அமைகின்றது.

## இயற்கை ஈடுபாடு

பொதுவாகக் கார்நாற்பதில் இடம்பெறும் தலைமகன் கூற்றுக்களில் பெரும்பான்மையான பகுதி இயற்கையை வருணிக்கின்ற நிலையிலேயே அமைகின்றன. இயற்கையை அவன் புனைந்துரைப்பது அவன் இயற்கை ஈடுபாட்டினை அறிவுறுத்துவதாக அமைகிறது.

**இமிழிசை வயனம் முழங்கக் குமிழின்பூப்**
**பொன்செய் குழையிற் றுணர்தூங்க**

என்று கூறுவதும்,

**சிரல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப**
**ஈர்ந்தண் தளவந் தகைந்தன**

என்று கூறுவதும் இயற்கையை மிக நுண்மையாக நோக்கும் தலைமகனின் இயல்பினை உணர்த்துகின்றன.

**பொங்கரு ஞாங்கர் மலர்ந்தன தங்காத்**
**தகைவண்டு பாண்முரலும் கானம் பகைகொண்டல்**
**எவ்வத் திசைகளும் வந்தன்று**

என்று கூறுவதும்,

**வரை மல்க வானஞ் சிறப்ப வுறைபோழ்ந்**
**திருநிலம் தீம்பெயல் தாழ — விரை நாற**
**ஊதை யுண்டு நறுந்தண்கா**

என்று கூறுவதும் இயற்கையில் தோய்ந்த தலைமகனின் உள்ளத்து வெளிப்பாடுகளாகக் காணப்படுகின்றன.

## புகழில் நாட்டம்

மண்ணியல் ஞாலத்து மன்னு புகழ் வேண்டித் தலைமகன் பிரிந்தான் என்ற தோழி கூற்றும், காட்டினை வருணிக்கின்ற நிலையில்,

**கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போற்**
**படாஅ மகிழ்வண்டு பாண்முரலும் கானம்**

எனக் 'கெடாஅப் புகழ்வேட்கைச்செல்வர்' மனத்தை உவமையாக்கி உரைப்பதும் புகழில் நாட்டம் கொண்ட தலைமகனின் நெஞ்சப் பிரதிபலிப்புகளாகத் துலங்கு கின்றன.

## பழிக்கு அஞ்சும் பண்பினன்

வினைமுற்றிய தலைமகன் இமிழிசை வானம் முழங்குவ தாலும், குமிழின்பூப் பொன்செய் குழையிற் றுணர் தூங்குவ தாலும் கார் காலம் தோன்றிவிட்டமையை உணர்ந்த நிலை யில் தன் உள்ளம் கவர்ந்தவளின் ஊர்க்கு ஊரார் கூறும் வசைமொழி கெடும்வகையில் தான் செல்லும் வழியில் செவ்வியுடையதாகக் கூறுவது பழிக்கு நாணும் பண்புள்ளதைப் படம்பிடிப்பதாக அமைகிறது.

**இமிழிசை வானம் முழங்கக் குமிழின்பூப்**
**பொன்செய் குழையிற் றுணர் தூங்கத் தண்பதஞ்**
**செவ்வி யுடைய சுர நெஞ்சே காதலியூர்**
**கவ்வை யழுங்கச் செலற்கு**

என்றதலைமகன் கூற்று இதனைப் புலப்படுத்துகிறது.

'இகழுநகர் சொல்லஞ்சிச் சென்றார் வடுதல் பொய்யன்மை' என்ற தோழி கூற்று பிறர் கூறும் பழிச் சொற்கு நாணும் இயல்புடையவன் தலைமகன் என்பதை உணர்த்தி நிற்கிறது.

## நினைத்ததை முடிப்பவன்

**வீறுசால் வேந்தன் வினையும் முடிந்தன**

என்ற கூற்று வந்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடித்த தலைமகனின் பெருமிதத்தை வெளிப்படுத்தி

**நச்சியார்க் கீதலும் நண்ணார்த் தெறுதலும்**
**தற் செய்வான் சென்றார்**
**இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார்**
**நெடுவிடைச் சென்றார்**
**செல்வம் தரல்வேண்டிச் சென்றநம் காதலர்**

என்ற தோழியின் கூற்றுக்கள் 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற கொள்கையை உணர்ந்த தலைமகனை—கடமையைக் கண்ணெனக் கொண்ட தலைமகனை நமக்குக் காட்டுகின்றன.

## சொற்றிறம்பாதவன்

கார் நாற்பது காட்டும் தலைமகன் சொன்ன சொல் தவறாதவன். கார்வானம் மெல்லப் பெயலைத் தோற்றி நிற்சவும், கல்லோங்கு கானம் களிற்றின் மதம் நாறவும் கார் காலம் வந்துவிட்டமையை உணருகின்றான் தலைமகன். உடனே அவனுக்குத் தன் தலைவிக்குக் கார்காலத்தில் வருதும் என மொழிந்துவந்த வார்த்தைகள் நினைவுக்கு வரத் தன் நெஞ்சை நோக்கி,

**எல்லா வினையும கிடப்ப வெழு நெஞ்சே**

எனக் கூறுகின்றான். வினையையே தன் உயிராகக் கொண்ட இத் தலைமகன் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் பொருட்டு எல்லா வினையும் கிடப்ப, எழுகின்றான். இதனால் தலைமகனின் சொற்றிறம்பாமை புலனாகின்றதன்றோ? இவ்வாறே எருமையினது எழுச்சியை உடைய ஆண்மேகம் கரை மருங்கின் நீர்சேர்ந்து, எறியப்பட்ட மலர்களை சூடிக் கொண்டு போரின்கண் செம்மாந்து நிற்கும் மறவரைப் போல செம்மாந்திருக்கும் காலமே தன் தலைவிக்குத் தான் திரும்பி வருவதாகக் கூறிவந்த காலம் என்பதைப் பாகற்கு உணர்த்தித் தேரை விரைவில்

செலுத்துமாறு கூறுவதும் அவன் சொற்றிறம்பாமைக்குச் சான்று.

## விருந்தில் விருப்பம்

வினைமுற்றிய தலைமகன் தன் காதலியுடன் விருந் தயரும் வழக்கத்தை,

**வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து**
**மாலை யயர்கம் விருந்து**

எனக் குறிக்கின்றது குறள். இதற்கேற்பவே வினைமுற்றி மீளும் கார்நாற்பது தலைவனும் விருந்தயர்வதில் பெரு விருப்பம் உடையனாகத் திகழ்வதை,

**சீர்த்தக்க, செல்வ மழை மதர்க்கட் சின்மொழிப்**
**பேதையூர்**
**நல்விருந்தாக நமக்கு**

என்ற தலைமகன் கூற்றுப் புலப்படுத்தி நிற்கின்றது.

## செல்வத்தில் ஈடுபாடு

பொதுவாகக் கார்நாற்பது பாடல்களில் தலைமகன் வினைமேற் சென்ற பிரிவைக் காட்டிலும் பொருள்மேற் சென்ற பிரிவே மிகுதியாகப் பேசப்படுகிறது. ஏனைய பிரிவைக் காட்டிலும் பொருள் காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்வதும் ஆங்காங்கே தம் கூற்றுகளில் செல்வத்தை உவமித்துப் பேசுவதும் செல்வத்தில் தலைமகன் கொண்ட ஈடுபாட்டை உணர்த்தி நிற்கின்றன.

**இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார் ...**
**நச்சியார்க் கீதலும் நண்ணார்த் தெறுதலும்**
**தற்செய்வான் சென்றார்**

புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்
செல்வம் தரல் வேண்டிச் சென்றநம் காதலர்

என்ற தோழியின் கூற்றுக்கள் பொருள் ஈட்டுவதில் தலைமகன் கொண்ட ஆர்வத்தினைப் புலப்படுத்தி நிற்கின்றன.

இனி கானகத்தில் பாண்முரலும் வண்டினுக்கு உவமை கூறுகையில்,

கெடாஅப் புகழ் வேட்கைச் செல்வர் மனம்போல்
படாஅ மகிழ்வண்டு பாண்முரலும்

எனச் செல்வர்களை உவமித்துக் கூறுவதும், தன் தலைவியைப் பற்றிக் கூறுகையில்,

செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதை

எனக் கூறுவதும், காடுகள் பொலிவுற்றமைக்கு வளமுடையார் ஆக்கத்தை ஒப்புமைப்படுத்தி,

.................. நல்லார்
இளநலம் போலக் கவினி வளமுடையார்
ஆக்கம்போற் பூத்தன காடு

எனக் கூறுவதும் செல்வத்தின்பால் தலைமகன் கொண்ட பற்றினைத் தெளிவுறுத்துகிறது. இவற்றால் செல்வத்தில் நாட்டம் மிக்கவன் தலைமகன் என்பதைத் தெளியலாம்.

## நுண்ணிய நோக்கு

ஈர்ந்தண் புறவில் செம்முல்லைப் பூக்கள் பூத்து நிற்கும் நிலையை சிச்சிலிப் பறவையின் வாய்க்கு ஒப்பிட்டு உரைப்பதும், குமிழின் பூக்கள் பொன்னாற் செய்யப்பட்ட குழைகளைப் போலப் பூத்துக் குலுங்குகின்றன எனக்

கூறுவதும் இயற்கையைக் கூர்ந்து நோக்கும் தலைமகனின் நுண்ணிய நோக்கிற்குச் சான்றுகளாகும்.

**சிரல்வாய் வனப்பின் வாஇ நிரலொப்ப**
**ஈர்ந்தண் தளவந் தகைந்தன**
**குமிழின்பூப் பொன்செய் குழையிற் றுணர்தூங்க**

என்பன அப் பகுதிகள்.

## பிற பண்புகள்

தன் தலைமகனைப் பற்றி குறிப்பிடும்போது,

**தொடிபொலி முன்கையாள்**

எனக் குறிக்கின்றான். 'தொடிபொலி முன்கை' என்ற தொடரின்மூலம் அவன் உள்ளத்தைக் கவர்ந்தது 'தொடி' என்பது பெறப்படுகிறது இதனாலும், குமிழின்பூக்களுக்குப் பொன்செய் குழைகளை உவமித்துக் கூறுவதாலும் அணிகலனில் நாட்டம் மிக்கவன் தலைமகன் என்பது பெறப் படுகிறது.

**ஐயந்தீர் காட்சி யவர்**

என்னும் தலைமகனைப் பற்றிய தோழி கூற்று தலைமகன் அறிவுடையவன் என்பதைப் புலப்படுத்துகிறது.

**இன்சொற் பலவும் உரைத்துத் துறந்தார்**

என்றதனால் தலைமகன் இன்சொல் கூறுபவன். கடுஞ்சொல் கூறுபவன் அல்லன் என்பது பெறப்படுகிறது.

**இளையரும் ஈர்ங்கட்டயர**

என்ற தலைமகன் கூற்றினால் அவன்தன் சமுதாயச் சிந்தனையும் பெறப்படுகிறது.

## அகவாழ்வில் தலைமகன்

அகவாழ்வில் தலைமகன் நிலையினை நோக்கும்போது கருணை மறவனாகவும், கூடலில் விருப்பம் மிக்கவனாகவும், துன்பம் தீர்க்கும் துணைவனாகவும், தலைமகளைத் தன் நெஞ்சத் திரையில் எழுதி மகிழும் உள்ளத்தனாகவும் காட்சி அளிக்கின்றான்.

## கருணை மறவன்

கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் செல்கின்றான் தலைமகன். கார்காலம் வந்து விடுகிறது. தலைமகன் இன்னும் திரும்பவில்லை. இந்த நிலையில் தலைமகளை நினைத்து,

**பல்லிருங் கூந்தல் பணிநோனாள்**

எனவே எல்லா வினையும் கிடப்ப எழுநெஞ்சே எனக் கூறுவது தலைமகள்மாட்டு அவன் கொண்ட அன்பையும், இரக்கத்தையும் புலப்படுத்தி நிற்கிறது.

## கூடலில் விருப்பம்

கார் காலம் தொடங்கிவிட்டது. நாஞ்சில் வளவன் நிறம்போலப் பூஞ்சினைச் செங்கால் மராஅந் தகைந்து விட்டன. இந்த நிலையில் தொடி பொலி முன்கையாள் தோள்களைத் துணையாக நாடுகின்றது தலைமகனின் உள்ளம். விழைந்த நிலையில் நெடிய விடையில் சென்று விடுகிறது.

**.................. பைங்கோற்**
**றொடிபொலி முன்கையாள் தோள்துணையா வேண்டி**
**நெடுவிடைச் சென்றதென் நெஞ்சு**

எனக் கூறுவது தலைமகளைக் கூடத் துடிக்கும் தலைமகனின் உள்ளத்தைப் புலப்படுத்துகிறது.

## தலைமகளை நெஞ்சத்திரையில் எழுதியவன்

தலைமகளைப் பற்றித் தலைமகன் கூறுகின்ற சொற்கள் அவள் எந்த அளவிற்கு அவன் உள்ளத்தை ஆட்கொண்டிருக்கிறாள் என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றன.

**தொடி பொலி முன் கையாள்**
**பல்லிருங் கூந்தல்**
**செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதை**
**நறுநுதல்**
**திருநுதல்**
**செல்வ மழைத்தடங்கண்**

என்றெல்லாம் தலைமகளைப் பற்றிக் கூறுவது தலைமகள் நினைவில் வாடும் தலைமகனின் உள்ளத்தைச் சித்திரிக்கின்றன.

## அன்பு நெஞ்சத்தன்

1. காதலியூர் கவ்வை அழுங்கச் செலற்குச் சுரம் செவ்வியுடை யதாயிருக்கிறது எனக் கூறுவதும்.

2. பல்லிருங் கூந்தல் பணி நோனாள் எனக் கூறுவதும்,

3. சிறுமுல்லைப் போதெல்லாம் செல்வ மழைமதர்க் கண் சின்மொழிப் பேதை வாய் முள்ளெயிறு ஏய்ப்ப மலர்ந்தது என்று கூறுவதும் தலைமகளிடத்துத் தலைமகன் கொண்ட அன்பின் எதிரொலியாகத் திகழ்கிறது.

காதலர் நம்மை விட்டுப் பிரியமாட்டார் எனத் தோழி தலைவிக்குக் கூறுவதும், தலைமகளிடத்துத் தலைமகன் கொண்ட உயர்ந்த அன்பினைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

**காதலர் தீர்குவரல்லர்**

என்பது அப் பகுதி.

பொதுவாக நோக்கும்போது கார்நாற்பது காட்டும் தலைமகன் கற்பு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைமகனாவே தோற்றமளிக்கிறார். தலைமகன்தன் களவு வாழ்க்கையை இவ்விலக்கியம் குறித்து நிற்கவில்லை.

## நிறைவுரை

இவ்வாறாகக் கார் நாற்பது காட்டும் தலைமகன் அறிவிற் சிறந்தவனாக, இசை ஈடுபாடு மிக்கவனாக, இயற்கை ஈடுபாடு உடையவனாக, புகழில் நாட்டம் உடையவனாக, பழிக்கு அஞ்சும் பண்பினனாக, நினைத்ததை முடிப்பவனாக, சொற்றிறம்பாதவனாக, விருந்தில் விருப்பம் மிக்கவனாக, செல்வத்தில் ஈடுபாடு கொண்டவனாக, நுண்ணிய நோக்கு உடையவனாக, இன்சொற் கூறுபவனாகத் துலங்குகின்றான். அகவாழ்க்கையில் கருணை மறவனாகவும் கூடலில் விருப்பம் மிக்கவனாகவும் அன்பு நெஞ்சத்தனாகவும் தலைமகளின் நினைவில் வாடுபவனாகவும் காட்சி அளிக்கிறான். பொதுவாக நோக்கும் உயர் பண்புகளின் இருப்பிடமாகக் கார் நாற்பதின் தலைவன் விளங்குகின்றான்.

# 7. தமிழ் அறநூல்கள் காட்டும் தமிழர் கல்வி

---

## முன்னுரை

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த இனம் தமிழினம். அமிழ்தினும் இனிய தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் படைத்தது தமிழினம்.[1] 'ஒல்காப் புகழ் தொல்காப்பியமும் சங்க நூல்களும் தமிழரின் அழியாக் கருவூலங்கள். தமிழ்மொழி அறத்துடன் இயைந்தது. தமிழர் அறவாழ்க்கை மேற்கொண்டனர். சங்க நூல்களில் அறக்கருத்துகள் விரவிக்கிடக்கக் காணலாம். போரில் கூடத் தமிழர் அறங்காத்தனர்; அறப்போர் செய்தனர். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பாடியுள்ள புறப்பாடல் அக்காலத் தமிழரின் அறப்போர் முறையை விளக்கி நிற்கின்றது

**ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்கட னீறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென**
**அறத்தாறு நுவலும் பூட்கை மறம்[2]**

சங்க காலத்தில் அறமுரைக்கும் அறநூல்கள் என்னும் தனிப்பிரிவு தோன்றவில்லை. காலப்போக்கில் அயல்

இனங்கள் தமிழகத்தில் ஊடுருவின. தமிழர்களின் அறவாழ்விற்குக் கேடு நேர்ந்தது. இக் காலத்தில் அறம் கூறும் அறநூல்கள் தோன்றின. அவை, மக்களை நல்வழியில் ஆற்றுப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு அறமுரைத்தன. அந்நூல்களுள் கல்வி பற்றி ஆங்காங்கு விரவியுள்ள கருத்துக்களைச் சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## கல்வி—விளக்கம்

கல்+வி—கல்வி. அறியாமை அகற்றிய பின் பெறப்படுதலே கல்வி. கல்லுதல் என்பதன் பொருள் தோண்டுதல். கலை எனும் வேரின் அடிப்படையில் கல்வி எனும் பண்புப் பெயர் தோன்றியது. கல்வி கல்லுதல் என்பது மனத்தைத் திருத்திப் பண்படுத்தலைக் குறிக்கும். கல்வி கற்பதன் நோக்கம் மனத்தில் புதைந்து இருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தல் ஆகும். கல்வி என்பது, ஒழுக்கம், பக்தி முதலியவற்றை வளர்த்தல் வேண்டும் என்பார் காந்தியடிகள்.

இன்றைய வாழ்க்கையில் கல்வி பெறுதல் இன்றியமையாத ஒன்று. பண்டைக் காலம் போன்ற கல்வி பெறும் முறைகள் இன்று இல்லை. கற்றல் என்பது இன்று வாழ்நாளில் ஒரு பகுதியாக மட்டுமே அமைகின்றது. இன்று வயிற்றினை வளர்க்கவும் வேண்டும்; வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளவும் வேண்டும்; இவ்விரண்டையும் தந்துவுதவுவதே கல்வி ஆகும்.

## வனப்பும் கல்வியும்

கல்வியை உடல் வனப்புகளை விடப் பெருமை உடையது என்று தமிழ் அற நூல்கள் கூறுகின்றன. கல்வி பயிலுவதால் அறிவு வளர்ச்சி அடைகின்றது. கல்வியே உயிர்க்கு அணிகலன். கல்விப் புலமையே நம்மை அணி செய்யும் அணிகலன். இவையன்றி ஆடை, அணிகலன் போன்ற புற அழகுச் சாதனங்களும், கண், தோள், முகம் போன்ற

உறுப்புக்களின் அழகும், மற்றும் ஏனைய ஒப்பனைகளும் நம்மை அழகுபடுத்தாது, கல்வி ஒன்றே அழகு தரும்.

**இடை வனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்**
**நடை வனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்**
**கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு**
**எழுத்தின் வனப்பே வனப்பு[3]**

என்று ஏலாதியும்,

**குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து**
**நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி யழகே அழகு[4]**

என்று நாலடியாரும்,

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை யற்று[5]**

என்று திருக்குறளும் கல்வியின் வனப்பை வலியுறுத்து கின்றன.

**.........நண்ணும்**
**மறுமைக் கண்நலங் கல்வி[6]**

என்று திரிகடுகம் கல்வியை மறுமைப்பயன் அளிக்கவல்லது என்று கூறுகின்றது. நாம் உழைத்துத் தேடும் பொன், பொருள், ஆடை அணிகலன்கள் முதலான இன்பப் பொருள் கள் எல்லாம் இம்பிறவியில் மட்டுமே நம்முடன் தொடர்பு கொள்ளும் தன்மையின. ஆனால், நாம் பெறும் கல்வியறிவே பின்வருகின்ற பிறவிகளிலும் நம்மைப் பாதுகாக்க வல்லது என்கின்றார் திருவள்ளுவர்.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து[7]**

## கல்வியின் சிறப்பு

தமிழ் அறநூல்களில் திருக்குறள், நாலடியார், திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, பழமொழி நானூறு, நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது முதலான நூல்களும், நீதிநெறி விளக்கம், சதக இலக்கியங்கள், நன்னெறி, அறநெறிச்சாரம் மற்றும் ஆத்திசூடி முதலான ஔவையாரது நூல்களும் கல்வியின் பெருமையை விரிவாகக் கூறுகின்றன. கல்வியின் சிறப்பை எடுத்தியம்பியும் கல்லாமையின் இழிவைக் கூறியும், கல்வியின் பெருமையைப் பெரிதும் வலியுறுத்துகின்றன.

கல்வியை, ஒருவனுக்குக் கற்புடைய மனைவியாகவும் கல்வியின் பயனாக விளையும் இனிய கவிதைகளைப் புதல்வர்களாகவும் உருவகப்படுத்தியுள்ளார் குமரகுருபரர். மனிதனுக்கு இல்வாழ்க்கைத் துணை இன்றியமையாத ஒன்று. அது போன்றே, கல்வியும் என்கின்றது குமரகுருபரர் இயற்றிய நீதிநெறி விளக்கப் பாடல்.

**கல்வியே கற்புடைப் பெண்டிர் பெண்டிர்க்குச்**
**செல்வப் புதல்வனே தீங்கவி......**[8]

மதம் பிடித்து முறை தவறி நடக்கும் யானையைப் பாகன் அடக்குவான். அதுபோல், மடம் கொண்டு நெறி தவறும் மனித இனத்தைக் கல்வி திருத்தவல்லது. இது குறித்தே பெரியோர்கள் கல்வியை யானைப் பாகனாக உருவகம் செய்துள்ளனர்.

**கல்விப் பாகரிற் காப்புவலை யோட்டி**[9]

என்னும் மணிமேகலை அடியாலும்,

**இடங்கழி நெஞ்சத்து இளமை யானை**
**கல்விப் பாகன் கையகப் படாஅது**
**ஓங்கா உள்ளத் தோடு மாயினும்[10]**

என்னும் சிலப்பதிகார அடிகளாலும் அறியலாம்.

சிலம்பும் மேகலையும் கல்வியை யானைப் பாகனாக உருவகம் செய்துள்ளது போலவே, நான்மணிக் கடிகை கல்வியை விளக்காக உருவகம் செய்துள்ளது. எரியும் விளக்குத் தன்னையும் விளக்கும், ஏனைய பொருள்களையும் விளக்கும். அதுபோல் கல்வியும் தன்னையும் விளக்கித் தம்மைச் சார்ந்தோரது புகழையும் விளக்கி நிற்கின்றது. இதனை,

**மனைக்கு விளக்க மடவார் மடவார்**
**தமக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய**
**காதற் புதல்வர்க்கும் கல்வியே கல்விக்கும்**
**ஓதிற் புகழ்சா லுணர்வு[11]**

என்னும் நான்மணிக்கடிகைப் பாடலாலும்,

**இம்மை மயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாம்காணோம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து[12]**

என்னும் நாலடியார்ப் பாடலாலும் அறியலாம்.

கல்வி கற்றவர் எத்திசைச் சென்றாலும் அவர்க்குச் சிறப்பே. எல்லா மக்களும் அவரது உறவினரே. எல்லா நாடும் அவரது நாடே. இது பற்றியே திருவள்ளுவர்,

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு[13]**

என்று வினவுகின்றார். சிறுபஞ்சமூலம் கற்றவர்களைத் தேவர்களுடனும் கல்லாதவர்களை நரகர்களுடனும், ஒப்பிடுகின்றது.

**தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்**
**பூதரே[14]**

கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே எங்குச் சென்றாலும் உணவு அளிக்கும். அவர்கள் தமது பயணங்களில் கட்டுச் சோறு எடுத்துச் செல்ல வேண்டியதில்லை.

**ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்**
**நாற்றிசையும் செல்லா நாடில்லை அந்நாடு**
**வேற்றுநா டாகா; தமவேயாம் ஆயினால்**
**ஆற்றுணா வேண்டுவ தில்[15]**

என்று பழமொழி நானூறு குறிப்பிடுகின்றது. இவண்,

**மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்**
**மன்னனின் கற்றோன் சிறப்புடையன் மன்னர்க்குத்**
**தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்றவிட மெல்லாஞ் சிறப்பு[16]**

என்னும் ஔவையார் கூற்றும் நோக்கத்தக்கது.

## கல்லாமையின் இழிவு

தமிழ் அறநூல்களுள் தலையாய அறநூலான திருக்குறள் 'கல்வி' என்னும் தலைப்பின்கீழ், கல்வியின் சிறப்பை உடன்பாட்டான் விளக்கி நிற்கின்றது, அது போலவே 'கல்லாமை' என்னும் தலைப்பின்கீழ் எதிர்மறையானும் கல்வியின் சிறப்பை, வலியுறுத்துகின்றது. இவ்வாறு, ஏனைய நூல்களும் கல்லாமையின் இழிவை இயம்புகின்றன. திருவள்ளுவர் கல்வி கல்லாதவர்களை விலங்குகளுடன் ஒப்பிடுகின்றார். அவர் முகத்திலிருப்பது கண்கள் அல்ல

புண்கள் என்றும் கூறுகின்றார். கல்லாதவர் இயற்கை அறிவுடையவராக இருப்பினும் அதனை அறிஞர் ஏற்க மாட்டார். இதனை வள்ளுவர்,

**கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்[17]**

என்கின்றார். இவண்,

**கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்**
**சொல்லுங்கால் சோர்வு படும்[18]**

என்னும் பழமொழி நானூறு கூறுவதும், இவண்,

**கல்லாதான் தான்காணும் நுட்பமும்**
**நல்லார்கள் கேட்பின் நகை[19]**

என்னும் சிறுபஞ்சமூல அடிகளும்,

**கல்லார் உரைக்கும் கருமப் பொருள் இன்னா[20]**

என்னும் இன்னாநாற்பது அடியும் சிந்தித்தல் நலம்.

கல்லாத ஒருவன் முதலில் தனக்கே பகைவன் ஆகின்றான். அவன் நல்வினைப் பயனால் உழைத்துப் பொருளைக் குவித்தாலும் அவற்றைத் துய்த்து மகிழவும் அவனால் முடியாது. இத்தகையவனுடைய செல்வத்தைவிட அறிஞர்களின் வறுமை பன்மடங்கு உயர்ந்தது என்கின்றது திருக்குறள்.

**நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார் கண்பட்ட திரு[21]**

கல்வியறிவில்லாத மக்களைச் சார்ந்தால் பாவம், பழி பகை, கேடு, அச்சம் முதலிய தீய பண்புகள் இம்மை, மறுமை ஆகிய இருநிலைகளிலும் சாபம்போல் சென்று

அடையும் என்று ஏலாதி கூறுகின்றது. மேலும், அவர்களது வாய்ச்சொற்கள் வழியே அவர்கள் இடர்ப்படுவர்.

**கல்லா ஒருவர்க்குத் தம்வாயின் சொற்கூற்றம்[22]**

என்று நான்மணிக்கடிகை சுட்டுகின்றது.

வாழ்க்கையில் இன்னல்கள் எதிர்ப்படுதல் என்பது இயற்கை. கல்வி அறிவுள்ளவர்கள் தமது தெளிந்த சிந்தனையால் அவற்றை எதிர்நோக்குவர். இடும்பைக்குக் கலங்காமல், இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை என்று வாழ்வர். ஆனால் கல்வி அறிவில்லாதவர் இன்னல்களைக் கண்டு கலங்குவர்; ஊக்கம் இழப்பர்; அவற்றை எதிர்நோக்க வழி தெரியாமல் திணறுவர். ஒருவேளை, கற்றவர்கள் தளர்ந்து போனாலும் மீண்டும் கிளர்ந்து எழுவர். ஆனால் கல்லாதவர் சிக்கித் தவிப்பர். இதனை,

**கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத**
**பேதையான் வீழ்வானேற் கால் முரியும்[23]**

என்னும் நான்மணிக்கடிகை அடிகளால் அறியலாம்.

## இளமையில் கல்வி

கல்வி கற்றவர்களுக்கு ஏற்ற பருவம் இளமைப் பருவமே. தாய் தந்தையரின் அரவணைப்பில், உலகத் துன்பங்கள் அண்டாத இளமைப் பருவமே கற்கச் சிறந்த பருவம் ஆகும். மேலும், மனித மூளையின் அமைப்பும் கல்வி பயில அப்பருவத்தில் பெருந்துணை செய்கின்றது. "இளமையில் கல்வி சிலையில் எழுத்து." "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" போன்ற முதுமொழிகளும் இளமையில் கற்க வேண்டியதின் அருமையை உணர்த்துகின்றது. இதனைப் பின்வரும் பழமொழி நானூறு தெளிவுடன் விளக்குகின்றது.

**ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்**
**போற்றும் எனவும் புணருமோ? ஆற்றச்**
**சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை**
**மரம் போக்கிக் கூலிகொண் டார்**[24]

சுங்கத்தீர்வை வசூலிக்கின்றவர், சாவடியைக் கடப்ப தற்கு முன்னரே அதனை வசூலித்தல் வேண்டும். அங்ஙனமே தோணி ஓட்டுபவர், பயணிகளை அக்கரையில் சேர்ப்பதற்கு முன்னரே தமக்குரிய கூலியைப் பெறுதல் வேண்டும். சுங்கச் சாவடியைக் கடந்த பின்னர் தீர்வை பெறுதல் என்பது இயலாது. அவ்வாறே கற்பதற்கு ஏற்ற இளமைப் பருவத்தை வீணே கழித்து விட்டுப் பின்னால் கற்க இயலாது.

உலகில், உள்ள குற்றங்களுள் இளமையில் கல்லா திருப்பதும் ஒன்று. இதனை,

**இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்**[25]

என்னும் நான்மணிக்கடிகை அடி உணர்த்தி நிற்கிறது. இளமையில், பல நூல்களை நாடிக் கற்காத மூத்த மகன் அவனது தந்தையை அட்டமத்துச் சனியாகத் துன்பப் படுத்துவான் என்கின்றார் ஔவையார்.

## கல்வியின் வகைகள்

இன்று கல்வியிற் பல பிரிவுகள் உள்ளன. ஆனால் இன்றுள்ள அனைத்துப் பிரிவுகளும் அன்றைய கல்வி முறை யில் இல்லை. இன்று கலைகளையும் கல்விப் பிரிவின் கீழ் அடக்குகின்றனர். பழந்தமிழகத்தில் எண், எழுத்து என்றிரு பிரிவுகள் இருந்ததைத் திருக்குறள்வழி அறிய முடிகின்றது.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு**[26]

இக்குறட்பாவுக்கு எண் என்பது கணிதம். அது கருவியும் செய்கையும் என இருவகைப்படும். அவை ஏரம்பம் முதலிய

நூல்களுட் காண்க. எழுத்தெனவே அதனோடு ஒற்றுமை யுடைய சொல்லும் அடங்கிற்று என்று உரை கண்டுள்ளார்.[27] இது பற்றியே 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று கொன்றைவேந்தன்[28] கூறுகின்றது. எண், எழுத்து என்னும் இரண்டு பிரிவுகளை மேலும்,

**கண்ணுங்காற் கண்ணும் கணிதம் எழுத்து[29]**

என்னும் சிறுபஞ்சமூல அடியாலும்,

**.........எண்ணொடு**
**எழுத்தின் வனப்பே வனப்பு[30]**

என்னும் ஏலாதி அடியாலும் அறியலாம். இவண்,

**எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர்[31]**

என்னும் அப்பரடிகள் வாக்கையும்,

**அண்ணலும் நூலும் பொருளும் நிகழ்வும் இவை எனலும்**
**எண்ணினும் ஏனை எழுத்தினும் மிக்காய் இருந்தவர்[32]**

என்னும் நீலகேசி அடியையும்.

**எண்ணெழுத்து இகழேல்[33]**

என்னும் ஆத்திச்சூடியையும் ஒப்பு நோக்கலாம்.

## கேள்விக் கல்வி

கல்வி, கேள்வி வழியும் பெறப்படும். அறிவு கல்வியால் விளக்கமுறும். கல்வி கேள்வி வழியே பழங்காலத்தில் பெரிதும் அளிக்கப்பட்டு வந்தது. கேள்வியும் ஒருவகைக் கல்வியே. இதனைக்

**கேள்வியும் கல்வி ஆகும்[34]**

என்னும் திவாகர நிகண்டு நூற்பா உணர்த்துகின்றது. திருவள்ளுவர் 'கேள்வி' என்று ஓர் அதிகாரத்தையே அமைத்துள்ளார்.

பரிமேலழகர், கல்லாத வழியும் கேள்வியால் கல்வியறிவை உண்டாக்கலாம் என்பர். திருவள்ளுவர், ஒருவன் கற்கவில்லை எனினும் வருந்த வேண்டாம். அவன் முயன்றால் கேள்வி வழியே அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம் என்கின்றார். இதனை,

**கற்றிலன் ஆயினும் கேட்க...[35]**

என்னும் திருக்குறள் உணர்த்துகின்றது.

பழமொழி நானூறு ஒருபடி மேலே சென்று கற்றலை விடக் கேள்வி வழி பெறும் அறிவே சிறந்தது என்கின்றது. இதனைக்,

**கற்றலின் கேட்டலே நன்று[36]**

என்னும் பழமொழி நானூற்றின் அடி விளக்குகின்றது. திருஞானசம்பந்தர் கல்வியறிவுடன் கேள்வியறிவும் வாய்க்கப் பெற்றவர்களே பெரியோர் என்று கூறுகின்றார்.

**கற்றல் கேட்டல் உடையார் பெரியார்[37]**

என்பது சம்பந்தர் தேவாரம்.

கல்லாத ஒருவன் கற்றாரைச் சேர்ந்து வாழ்ந்தால் அவனும் நாளடைவில் அறிஞனாவான். கற்றவர் கூறும் கேள்விப் பொருளைச் செவிமடுத்துச் செவிமடுத்துக் கல்லாதவனும் அறிவு விளக்கம் பெறுவான். இதனைக்,

**கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளும் தலைப்படுவர்**[38]

என்னும் நாலடியார் விளக்கி நிற்கின்றது.

## சாதி வேறுபாடு கல்விக்கு இல்லை

கல்வி கற்றவர் அனைவராலும் போற்றப்படுவர். கல்வி உள்ள இடத்தில் வயது, குலம், சாதி, மொழி, நாடு, இனம் முதலிய எல்லைகள் இல்லை. ஒரு குடியில் பிறந்த பலருள்ளும் இளையோன் கற்றவன் எனினும் உலகம் அவனைப் போற்றும் வயதில் இளையவன் என்று அவனை இகழாது,

**....................ஒருகுடியிற்**
**கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்**
**இளமை பாராட்டும் உலகு**[39]

என்று நான்மணிக்கடிகை கூறுகின்றது. இங்கு,

**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக என்னா தவருள்**
**அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்**[40]

என்னும் புறநானூற்று அடிகளும் ஒப்பு நோக்கத்தக்கன.

இங்ஙனமே, சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள இனங்களில் பிறந்த மக்கள் கல்வி பெறுவாரேல் அவர்களும் அனைவராலும் வரவேற்கப்படுவர். பாராட்டப்படுவர். அம்மக்கள் பெற்ற கல்வியின் முன்னர், தாழ்ந்த இனம் முதலான சமுதாய இழிகூறுகள் செயலிழந்துவிடும். இதனை,

**கடைநிலத்தோர் ஆயினும் கற்றறிந் தோரைத்**
**தலைநிலத்து வைக்கப் படும்**[41]

என்னும் நாலடியார் அடிகளால் அறியலாம். இவண்,

**வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே**[42]

என்னும் புறப்பாடல் அடிகளும் ஆராயத்தக்கன.

நவமணிகளுள் ஒன்றாக மாணிக்கம் என்னும் உயர்ந்த மணி நஞ்சுடைய நாகத்தினின்று பிறக்கின்றது. நச்சுப் பாம்பின் வழிவந்த விலையுயர்ந்த மணியை உலகம் போற்றிப் பாராட்டுகின்றது. விளைந்த இடம் பாராமல் அணிந்து மகிழ்கின்றனர். உலக மக்கள் ஆயினும் திருப்பாற்கடலில் தோன்றிய நஞ்சைக் கண்டு தேவர்களும்கூட அஞ்சினர். உயர்ந்த பாற்கடலில் தோன்றிய காரணத்திற்காக நஞ்சை மக்கள் ஏற்ற முன்வராார். அதுபோன்றே தாழ்ந்த குலத்தில் தோன்றிய ஒருவனது கல்வி நலத்தை மகிழ்ந்து ஏற்பர். உயர்ந்த குலத்தில் உதித்தோரது கல்லாமையை நகைப்பர். அறிவைக்கொண்டே மக்கள் பிறப்பில் உயர்வு தாழ்வுகூற வேண்டுமே அன்றிப் பிறப்பைக் கொண்டு அல்ல என்கின்றார் துறை மங்கலம் சிவப்பிரகாச அடிகள்.

**ஆக்கும் அறிவான் அலது பிறப்பினான்**
**மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க நீக்கு**
**பவரார் அரவின் வருமணிகண் டென்றும்**
**கவரார் கடலின் கடு**[43]

தோணியைச் செலுத்துபவன் தாழ்ந்த இனத்தவன் என்று உலக மக்கள் அவனை இகழார். மேலும் அவன் துணையால், அக்கரையையும் அடைவர். அதுபோன்றே கல்வியறிவு உடையவரிடம் சாதி வேறுபாடுகளைப் பாராட்டாமல், அவரது துணையைப் பெற்று வாழ்தல் வேண்டும், என்று நாலடியார் வலியுறுத்துகின்றது.[44]

## இரந்தும் கற்க

இரத்தல் என்பது மிகவும் கொடியது. பிறரிடம் தன்மானம் இழந்து கைகட்டி, வாய்மூடி நின்று இரத்தலை விட இழிசெயல் வேறொன்றும் இல்லை. திருவள்ளுவர், ஔவையார் போன்ற புலவர்கள் இரத்தலின் இழிவு பற்றி விவரித்துள்ளனர்.

**ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்தது இல்**[45]

என்பது திருக்குறள். நான் என் பொருட்டு எதையும் இரக்க வில்லை. பசுவின் பொருட்டு இரந்தேன். அதுவும் தண்ணீர் மட்டும்தான் இரந்தேன், என்று ஒருவர் கூறி இரப்பாரே யானால் அதுகூட இழிவே என்கின்றார் திருவள்ளுவர்.

இங்ஙனம் இரத்தலைப் புலவர் உலகம் கடிந்தது. ஆயினும் கல்வியின் பொருட்டு இரத்தலை அவர்கள் வெறுக்கவில்லை, மாறாக வரவேற்றனர். பிச்சை எடுத்தா யினும் கல்வி பயிலுக என்றே வலியுறுத்தினர். சங்க காலத்தில், மாணாக்கர்கள் இரந்தும் கல்வி பயின்றனர்.

**அன்னா இயிவனோர் இளமா ணாக்கன்**
**தன்னூர் மன்றத்து என்னன் கொல்லோ**
**இரந்தூண் நிரம்பா மேனியொடு**
**விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே**[46]

என்னும் குறுந்தொகைப் பாடலின்கண் இடம் பெற்றுள்ள "இரந்து ஊண் நிரம்பாமேனி" என்னும் அடி, சங்க காலத்தில் இரந்தும் கூடக் கல்வி கற்றனர் என்னும் குறிப்பை உணர்த்து கின்றது.

இனியவை நாற்பது 'பிச்சை எடுத்தேனும் கற்க' என்று கூறுகின்றது. மேலும் அங்ஙனம் கல்வி பயிலுதல்

மிகவும் இனிமையானது என்றும் சுட்டுகின்றது. இக் கருத்தைப்,

பிச்சை புக்காயினும் கற்றல் மிகவினிதே[47]

என்னும் இனியவை நாற்பது அடி உணர்த்துகின்றது. அதிவீரராம பாண்டியன் இக்கருத்தை,

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே[48]

என்று கூறுதல்வழி வலியுறுத்துகின்றார்.

செல்வர்கள், சமுதாயத்தில் கற்க வாய்ப்பின்றி வாடும் வறிய மாணவர்களுக்கு உணவு, உடை, புத்தகம், எழுதுகோல் முதலானவற்றை வழங்கி அம்மாணவர் கல்வி பெற உதவினர் என்னும் கருத்தை ஏலாதிப் பாடல் ஒன்று உணர்த்து கின்றது.

ஊணொடு கூறை யெழுத்தாணி புத்தகம்
பேணொடு மெண்ணும் எழுத்திவை மாணொடு
கேட்டெழுதி யோதிவாழ்வார்க்கு ஈய்ந்தார் இம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து[49]

## ஆசிரியர் மாணாக்கர் இலக்கணம்

பண்டைத் தமிழகத்தில் குருகுலக் கல்வி முறையே இருந்தது. ஒரு குறிப்பிட்ட வயதுவரை மாணவர்கள் ஆசிரியர் இல்லத்திலே தங்கி, அவரோடு உடன் உறைந்து கல்வி பயிலுவர். அக்காலத்தில் சமுதாயத்தில் ஆசிரியப் பெருமக்கள் பெரிதும் போற்றப்பட்டனர். திரிகடுகம், ஆசிரியர் இல்லாத (அ) வாழாத ஊர் பயனில்லாத ஊர் என்று குறிப்பிடுகின்றது. இதனைக்,

**கணக்காயர் இல்லாத ஊரும்...**
**நன்மை பயத்தல் இல**[50]

என்னும் திரிகடுக அடிகளால் அறியலாம்.

கல்வி கற்பிக்கும் ஆசிரியனை இறைவனுக்கு நிகராகத் தமிழர் போற்றினர். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்[51] என்பது வெற்றிவேற்கை. தமிழ் அறநூல்கள் குருவழிக் கற்றலை வரவேற்கின்றன. குருவின்றிக் கற்ற வித்தையால் பயன் இல்லை[52] என்று குமரேச சதகம் இயம்புகின்றது. கற்பிக்கும் ஆசிரியருக்குரிய ஊதியத்தை அவ்வப்போது அளித்துவிடல் வேண்டும் என்கின்றது உலகநீதி.[53]

நூல் கற்பிக்கும் ஆசிரியரது இலக்கணங்களை நன்னூல் தெளிவுறுத்துகின்றது:

**குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலமலை நிறைகோள் மலர்நிகர் மாட்சி**
**உலகியல் அறிவோ டுயர்குணம் இனையவும்**
**அமைபவன் நூலுரை யாசிரி யனன்னே**[54]

என்று பவணந்தி முனிவர் நல்லாசிரியர் பண்புகளைக் குறிப்பிடுவதுடன் ஆசிரியர் அல்லாதார் பண்புகளையும் சுட்டுகின்றனர். ஆசிரியர் பிரம்மச்சரியம் காப்பவராக இருத்தல் வேண்டும்.

**ஆணாக்கம் வேண்டாதான் ஆசான்...**[55]

என்பது சிறுபஞ்சமூலம் கூறும் செய்தி.

ஆசிரியர் என்பவர் நூலை மட்டும் கற்பிக்கின்றவர் என்று தமிழ் மக்கள் கருதினர் அல்லர். வாழ்க்கை வழிகாட்டியாகவும், பிறவிப் பிணிப்பை நீக்கும் ஆன்ம குருவாகவும் கருதிப் போற்றினர். நம் தமிழ் மக்கள்

ஆசிரியரைப் போற்றிய விதம் மேலைநாட்டார் கல்வி முறையினின்று முற்றிலும் மாறுபட்டது. இதனைப் பின்வரும் அறநெறிச்சாரப் பாடல்வழி அறியலாம்:

**அறங்கேட் டருள்புரிந் தைம்புலன்கள்மாட்டும்**
**இறங்கா திருசார் பொருளும் துறந்தடங்கி**
**மன்னுயிர்க்கு உய்ந்துபோம் வாயில் உரைப்பானேல்**
**பன்னுதற்குப் பாற்பட் டவன்[56]**

இத்தகைய நற்பண்புகளை உடைய ஆசிரியர்களிடம் கல்வி பயிலும் மாணவர்களை நன்னூல் ஆசிரியர் மூன்று பிரிவாகப் பிரித்துள்ளார்.

**அன்னம் ஆவே மண்ணொடு கிளியே**
**இல்லிக் குடம்ஆடு எருமை நெய்யரி**
**என்னல் தலையிடை கடைமா ணாக்கர்[57]**

என்னும் நன்னூல் நூற்பா தலை மாணாக்கர்கள், அன்னம், பசு போல்வர் என்றும் இடை மாணாக்கர் நிலம், கிளி போன்று இருப்பர் என்றும் கடையாய மாணாக்கர் இல்லிக்குடம் ஆடு, எருமை, நெய்யரி போன்று இருப்பர் என்றும் கூறுகின்றது.

இதைப் போன்றே சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஆசாரக் கோவை, அறப்பளீச்சுர சதகம் முதலிய தமிழ் அறநூல்கள் நன்மாணாக்கர் இயல்புகளை விளக்குகின்றன.

**மாணாக்கன் அன்பால் வழிபடுவான்[58]**

என்பது சிறுபஞ்சமூலம் கூறும் செய்தி, மேலும் ஆசிரியர் இரு என்றால் இருந்து, அவர் பாடம் சொல்லும்போது செவி வாயாகவும். நெஞ்சு களனாகவும், பாடம் போற்றுதல் பழைய மரபு. இதனையே,

**நின்றக்கால் நிற்க அடக்கத்தால் என்றும்**
**இருந்தக்கால் ஏவாமை யேகார் பெருந்தக்கார்**
**சொல்லிற் செவிகொடுத்து கேட்டீக மீட்டும்**
**வினாவற்க சொல்லொழிந்தக் கால்[59]**

என்னும் ஆசாரக்கோவைப் பாடலும்,

**ஆணாக்கம் வேண்டாதான் ஆசான் அவற்கியைந்த**
**மாணாக்கன் அன்பான் வழிபடுவான் மாணாக்கன்**
**கற்பனைத்து மூன்றும் கடிந்தான் கடியாதான்**
**நிற்பனைத்தும் நெஞ்சிற்கோர் நோய்[60]**

என்னும் சிறுபஞ்சமூலப் பாடலும்,

**கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்[61]**

என்னும் முதுமொழிக் காஞ்சி அடியும் வலியுறுத்துகின்றன.

ஆசிரியரை வழிபட்டும், பொருள் கொடுத்தும் பல்வகை உதவிகளைச் செய்தும் கல்வி பயிலும் முறை அக்காலத்தில் இருந்தது.

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே[62]**

என்பது புறநானூறு கூறும் செய்தி.

ஆசிரியர்க்கு உதவி ஒன்றும் புரியாமல் கற்றது கல்வி ஆகாது என்னும் கருத்தை,

**நேராமல் கற்றது கல்வி அன்று[63]**

என்னும் முதுமொழிக்காஞ்சி வழி அறிய முடிகின்றது,

**தன்மகன் ஆசான் மகனே மன்மகன்**
**பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே**
**உரைகோ ளாளற் குரைப்பது நூலே[64]**

என்னும் நன்னூல் நூற்பாவும் இவண் ஒப்பு நோக்கத் தக்கன.

## கல்விப் பயன்

கல்வியின் நோக்கம் பண்பாட்டை வளர்ப்பதாய் இருத்தல் வேண்டும். கல்வி கற்றும், மக்கட் பண்பு இல்லாதாரை மரத்துடன் ஒப்பிடுகின்றார் திருவள்ளுவர்.[65] அதைப்போன்று நற்பண்புகளின் உறைவிடமாக விளங்கு கின்ற இறைவனது திருவடிகளைத் தொழாத கல்வியினால் பயன் ஒன்றும் இல்லை என்பது திருவள்ளுவர் கருத்து.[66]

மனிதன் தூயவனாய் இருத்தலும், கற்றவழி நிற்றலும் கல்விப் பயன்களில் ஒன்று. கற்றபின் நிற்க அதற்குத் தக[67] என்பது திருக்குறள். நல்ல நூல்களை ஐயமறக் கற்று பிறர்க்கு உரைப்பதைவிட அவை கூறும் வழிகளை வாழ்வில் பின்பற்றுதலே மிகவும் உயர்ந்தது. இதனை,

> **ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
> **பேதையின் பேதையார் இல்[68]**

என்னும் திருக்குறள் உணர்த்துகின்றது. இதனை,

> **அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்[69]**

என்னும் வெற்றி வேற்கை அடியும் வலியுறுத்துகின்றது.

கல்வியால் அறிவு விள்க்கமுறும், சிந்தனை விரியும். இங்ஙனம், மனதில் எழும் நற்சிந்தனைகளைப் பிறர்க்கு எடுத்து உரைத்து மக்களை நல்வழியில் ஆற்றுப்படுத்தல் கற்றவர்களின் கடமை. மனத்தில் தோன்றும் நற்சிந்தனை களை வெளியிட அஞ்சுகின்றவர்கள் கற்ற கல்வியால் பயன் ஏதும் விளையாது. கற்றறிந்த சான்றோர் அவையிலே தமது சிந்தனைகளை வெளியிட்டு மேலும் மேலும் புகழ் பெறுதல் வேண்டும். சான்றோர் அவையைக் கண்டு அஞ்சுபவன் கற்ற கல்வி பயனற்ற கல்வியே. அக்கல்வி அவனைப் புற உலகிற்கு அறிமுகப்படுத்தாது.

**பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சும் அவன்கற்ற நூல்**[70]
**பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்**
**நன்கு செலச் சொல்லா தார்**[71]

என்னும் குறட்பாக்கள் இக்கருத்தை வெளிப்படுத்துகின்றன. சான்றோர் அவையில் போற்றப்படுபவர் கற்ற கல்வியை 'நல்லவையும் மேம்பட்ட கல்வி,[72] என்று திரிகடுகம் பாராட்டு கின்றது. இவண்,

**கழறும் அவையஞ்சான் கல்வி யினிதே**[73]

என்னும் இனியவை நாற்பது அடிகளும்,

**அவையஞ்சி மெய்விதிர்ப்பர் கல்வியும்**
**பூத்தலிற் பூவாமை நன்று**[74]

என்னும் நீதிநெறி விளக்கக் கருத்தும்,

**ஆஸ்தான கோழை பலஅரியநூல் ஓதியென்ன**[75]

என்னும் குமரேச சதக அடியும் ஒப்பு நோக்கத்தக்கன.

## மேன்மேலும் கற்க

தமிழ் அறநூல்கள் கல்வியையும் ஒரு செல்வமாகப் போற்றிக் கூறுகின்றன. மேலும், கல்வியையும், செல்வத்தை யும் ஒப்பிட்டுச் செல்வத்தின் நிலையாமையை எடுத்தியம்பிக் கல்வியின் உறுதியைக் கூறுகின்றன, செல்வத்திற்கு எல்லை கூறும் தமிழ் அறநூல்கள் கல்விக்கு அங்ஙனம் எல்லை வகுக்கவில்லை.

நம்மைவிடச் செல்வந்தர்களைத் தம்முடன் ஒப்பிட்டு மென்மேலும் செல்வம் தேட முயலாமல் தம்மைவிடத் தாழ்ந்தவர்களை நோக்கித் தமது செல்வம் பெரியது என்று மகிழ வேண்டும். கல்வியும் ஒருவகைச் செல்வமே ஆயினும்

மேற்கூறிய எல்லை அதற்குப் பொருந்தாது. கற்றறிந்த சான்றோர்களது அறிவுடன் நம் அறிவை ஒப்பிட்டு மேன் மேலும் கற்றல் வேண்டும் என்கின்றார் குமரகுருபரர்.

**தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை**
**அம்மா பெரிதென் றகமகிழ்க தம்மினும்**
**கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்**
**எற்றே யிவர்க்கு நாம் என்று[76]**

இங்ஙனம் கற்றலை ஊக்குவிக்கும் தமிழ் அறநூல்கள் கல்விச் செருக்கைக் கடிந்துரைக்கின்றன. கல்வியால் செருக்கித் திரிந்தவர்கள் கற்று அடங்கிய சான்றோர்களிடம் தோல்வியுற்றதையும் தமிழ் நூல்கள் இயம்புகின்றன. அகன்ற வானத்தில் விரிகதிர் வீசும் ஞாயிற்றின் வெப்பத்தி லிருந்து அளவில் சிறிய கைக்குட்டை நம்மைக் காக்கின்றது. அளவில் பலகோடி மடங்கு பெரிய கதிரவனின் சீற்றத்தி லிருந்து சிறிய குடை நம்மைக் காக்க வல்லது. அதைப் போன்று பெரிய கல்வியாளர் அறியாமையை ஒரு சில நூல் களைக் கற்றவர் வாய்ச்சொல்லே போக்க வல்லது. எனவே, கல்விச் செருக்கைக் கைவிடுதல் நல்லது என்கின்றது அறநெறிச்சாரப் பாடல் ஒன்று.

**பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா**
**அலகதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்**
**சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு**
**அச்சாணி அன்னதோர் சொல்[77]**

இங்ஙனம் தமிழ் அறநூல்கள் கல்வி கற்றலை ஊக்கப் படுத்தியும் அதே போழ்து கற்றவழித் தோன்றுகின்ற கல்விச் செருக்கையும் கடிந்துரைக்கின்றன.

## முடிவுரை

தமிழ் அறநூல்கள் காட்டும் தமிழர் கல்வி என்னும் இக்கட்டுரையில் கல்வி பற்றிய விளக்கம் முதற்கண் கூறப் பட்டுள்ளது. கல்வியே சிற்றுயிர்க்கு உற்றதுணை; கல்வி போல் மம்மர் அறுக்கும் மருந்து எவ்வுலகிலும் இல்லை. கல்லாதவன் தனக்கே பகைவன் ஆகின்றான் என்னும் கல்வி யின் சிறப்பும் கல்லாமையின் இழிவும் விளக்கப்பட்டன. கற்றற்குரிய பருவம் இளமையே என்பதும் கூறப்பட்டது. எண்ணும் எழுத்துமாகிய கல்வி வகைகளும் கேள்வி வாயிலாகவும் கல்வி பெறலாம் என்பதும் சுட்டப்பட்டன. கல்வி சாதி வேறுபாடுகளைக் கடந்தது. இரந்தும் கூடக் கற்றல் வேண்டும். கல்விக்கு அடிப்படையாகிய ஆசிரியர்— மாணவர் நல்லியல்புகள் கல்விப் பயன் ஆகியனவும் சுட்டப் பட்டுள்ளன.

## குறிப்புகள்

1. பா. துரைக்கண்ணு முதலியார், கல்விக்கலை, பக்கம். 18
2. புறநானூறு, 9,
3. ஏலாதி, 74.
4. நாலடியார் 1.
5. திருக்குறள், 407.
6. திரிகடுகம், 52.
7. திருக்குறள், 398.
8. நீதிநெறிவிளக்கம், 4.
9. மணிமேகலை, 18 : 165.
10. சிலப்பதிகாரம், 23 : 37-9.
11. நான்மணிக்கடிகை, 103.
12. நாலடியார், 2.
13. திருக்குறள், 397

14. சிறுபஞ்சமூலம், 20.
15. பழமொழி நானூறு, 4.
16. மூதுரை, 26.
17. திருக்குறள், 404.
18. பழமொழி நானூறு, 12.
19. சிறுபஞ்சமூலம், 5.
20. இன்னா நாற்பது, 16.
21. திருக்குறள், 408.
22. நான்மணிக்கடிகை, 84.
23. நான்மணிக்கடிகை, 74.
24. பழமொழி நானூறு, 1,
25. நான்மணிக்கடிகை, 93.
26. திருக்குறள், 392.
27. திருக்குறள், 392, பரிமேலழகர் உரை.
28. கொன்றைவேந்தன், 7.
29. சிறுபஞ்சமூலம், 93.
30. ஏலாதி, 74.
31. திருநாவுக்கரசர் தேவாரம், திருவேதிகுடி திருப்பதிகம். 6.
32. நீலகேசி, 679,
33. ஆத்திசூடி, 7.
34. திவாகரம், ஒலி பற்றிய பெயர்த்தொகுதி, பக்கம். 230.
35. திருக்குறள், 416.
36. பழமொழி நானூறு, 5.
37. திருஞானசம்பந்தர் தேவாரம், திருப்பிரம்மபுர பதிகம், 2.
38. நாலடியார், 9.
39. நான்மணிக்கடிகை, 65.
40. புறநானூறு, 183.
41. நாலடியார், 3.
42. புறநானூறு, 183.
43. நன்னெறி, 22.

44. நாலடியார், 136.
45. திருக்குறள், 1066.
46. குறுந்தொகை, 296.
47. இனியவை நாற்பது, 2.
48. வெற்றி வேற்கை, 18 : 3.
49. ஏலாதி, 63.
50. திரிகடுகம், 10.
51. வெற்றிவேற்கை, 1.
52. குமரேச சதகம், 21.
53. உலகநீதி, 6.
54. நன்னூல், பொதுப்பாயிரம், 26.
55. சிறுபஞ்சமூலம். 29.
56. அறநெறிச்சாரம், 4,
57. நன்னூல், பொதுப்பாயிரம், 38.
58. சிறுபஞ்சமூலம், 29.
59. ஆசாரக்கோவை, 74
60. சிறுபஞ்சமூலம், 29.
61. முதுமொழிக்காஞ்சி, 10:3.
62. புறநானூறு, 183.
63. முதுமொழிக்காஞ்சி, 5:6
64. நன்னூல், பொதுப்பாயிரம், 37.
65. திருக்குறள், 997.
66. திருக்குறள், 2.
67. திருக்குறள், 391.
68. திருக்குறள், 834.
69. வெற்றிவேற்கை, 14.
70. திருக்குறள், 727
71. திருக்குறள், 728.
72. திரிகடுகம். 8.
73. இனியவை நாற்பது, 12.
74. நீதிநெறிவிளக்கம், 6.
75. குமரேச சதகம், 27.
76. நீதிநெறி விளக்கம், 15.
77. அறநெறிச்சாரம், 79.

# 8. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

ஊனமொன் றறியா ஞானமெய்ப் பூமி!
வானவர் விழையு மாட்சியார் தேயம்!

என நம் பாரத நாட்டைப் பாடிப் பரவினார் கவியரசர் பாரதியார். ஞான மெய்ப்பூமியாகிய இந்நாட்டில் காலந் தோறும் அருளாளர் பலர் தோன்றி மக்களை நன்னெறியில் செலுத்தி அருந்தொண்டாற்றிச் சென்றுள்ளனர். குறிப்பாக, தமிழ் நாட்டில் பழம்பெரும் சமயமாம் சைவ சமயத்தை மக்களிடையே பரப்பும் பணியில் பலர் ஈடுபட்டனர். அவர்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் குறிப்பிடத்தக்கவர்கள். சைவத்தின் பெருமையை மக்கள் மறந்திருந்த வேளையில் இப்பெருமக்கள் தோன்றினர்; நற்றமிழின் துணையோடு நன்னெறியாம் சைவ நெறியை நாளும் பரப்பினர். மக்களையும் சமயத் தொண்டாற்ற அழைத்தனர். மக்களின் துணையாலே சைவ சமய மறுமலர்ச்சியை உருவாக்கினர். இந்நால்வரும் தோன்றியிராவிடில் சைவ சமயத்தின் பெருமையும், திருநீற்றின் பெருமையும் ஐந்தெழுத்தின் பெருமையும் வீழ்ச்சி பெற்றிருக்கும் என்னும் கருத்தில்,

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
எந்தைபிரா னஞ்செழுத்தெங் கே!

என்னும் பாடல் ஒன்று வழங்கப் பெறுகின்றது. இந் நால்வருள், ஞான மார்க்கத்தைப் பின்பற்றி இறைவனை வழிபட்டு, சைவத்தின் பெருமையை நிலைநாட்டி, 'தோணிபுரத் தோன்றல்' என அழைக்கப்பெறும் திருஞானசம்பந்தர் குறிப்பிடத்தக்கவர். தன்னலம் சிறிதும் பேணாது மக்களின் நலனுக்காகவே இறைவனை வழிபட்ட பெருமை சம்பந்தருக்கு உண்டு. அவர் தம் கவிதையாகிய கனியிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட சாற்றின் சாரம், 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்பது. மானிட வாழ்க்கையின் அடித்தளமாக அமைந்த நம்பிக்கை ஒளியூட்டும் வாழ்வியல் கருத்தாக இதனைக் கருதலாம். இச்சிறந்த உண்மையைச் சீருற உணர்ந்து செப்பிய அச் செம்மலின் திறத்தை ஒவ்வொருவரும் அறிதல் இன்றியமை யாதது.

சோழவள நாட்டில், தில்லையென்னும் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள சீகாழிப் பதியில் சிவபாத இருதயர் என்னும் சிவபக்தருக்கும் பகவதியார் என்னும் அம்மையார்க்கும் சம்பந்தர் பிறந்தார். கவுணிய மரபில் அந்தணர் குலத்தில் தோன்றிய சம்பந்தரின் பிறப்பே ஒரு குறிக்கோளை உட் கொண்டது என்பதைத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.

**வேதநெறி தழைத்தோங்க**
**மிகு சைவத்துறை விளங்கப்**
**பூதபரம் பரை பொலியப்**
**புனிதவாய் மலர்ந்தழுத**
**பூதவள் வயற்புகலித்**
**திருஞான சம்பந்தர்**
**பாதமலர் தலைக்கொண்டு**
**திருத்தொண்டு பரவுவாம்**

(பெரியபுராணம் : )

என்னும் பாடலில் வேதநெறி தழைத்தோங்கவும் சைவ சமயம் வளர்ச்சி பெற்று விளக்கமுறவும் அவர் திருவவதாரம் செய்தார் எனத் தெய்வப்புலமைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.

பிறையென வளர்ந்து, செங்கீரையாடி, சப்பாணி கொட்டி, குழந்தைப் பருவத்தைக் கடந்து மூன்று வயதை எட்டினார் சம்பந்தர். அப்பொழுதே இறையுணர்வு அவர்பால் தலைகாட்டலாயிற்று. இறைவனோடு தமக்கு நெருங்கிய தொடர்பிருப்பதை அவர் உணர்ந்தார். அதனை ஊரார்க்கு வெளிக்காட்டும் வாய்ப்பொன்று கிடைத்தது ஒரு நாள் சிவபாத இருதயர் நீராடச் சென்றபோது சம்பந்தர், தாமும் உடன்வருவதாகக் கூறி அவர் பின்னே சென்றார். தந்தை நீராடிக் கொண்டிருக்கும்பொழுது, சம்பந்தர் பெருமான் இறையுணர்வு தூண்டலால் அழத் தொடங்கினார். அவரது அழுகை பெருகியது. தோணிபுரத்தீசன் குடிகொண்டிருக்கும் கோவிலின் சிகரத்தை நோக்கியவாறு அழுதார். கருணைப் பெருங்கடலாம் சிவபெருமான் அழும்பிள்ளையை அரவணைக்க எண்ணி ஆங்கு எழுந்தருளி, உமையம்மையிடம் ‘நினது பாலை அழுகின்ற இப்பிள்ளைக்கு ஊட்டு’ என வேண்டினார். உமையவளும் அவ்வாறே செய்தாள். பிள்ளை சம்பந்தரின் பெருகிய அழுகை நின்றது. இதற்குள் சிவபாத இருதயர் குளித்து முடித்துக் கரையேறினார். தம் பிள்ளை வாயிலும் இதழோரத்திலும் பாலொழுக நிற்கும் காட்சியைக் கண்ட அவர் பிள்ளையிடம், ‘உனக்குப் பால் புகட்டியவர் யார்? ,என அச்சுறுத்தி வினவினார். சம்பந்தப் பெருமான் உடனே,

**தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்**
**காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்**
**ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த**
**பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானி வனன்றே**

(பதிகம் 1 பாடல் 1)

என்ற பாடலைப் பாடி 'எனக்கு இதைச் செய்தவன் இங்கிருக்கும் இறைவனாகிய சிவபெருமானே' என விடையிறுத்தார். இவ்வாறு மூன்று வயதிலேயே அருந்தமிழில் கவிபாடும் ஆற்றலைப் பெற்றிருந்ததோடு, அச்சிறுபருவத்திலேயே இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவராகவும் சம்பந்தர் விளங்கினார். இறைவன் விரும்பி ஆட்கொண்ட காரணத்தால் 'ஆளுடைய பிள்ளை' என்னும் பெயராலும் சம்பந்தர் அழைக்கப்படுகின்றார்.

இறையருள் வாய்த்ததை எண்ணி இறும்பூதெய்திய சம்பந்தர் வாழ்நாள் முழுதும் இறைவனைப் பாடி வழிபட முடிவு மேற்கொண்டார். ஒவ்வொரு திருத்தலங்களுக்கும் சென்று இறைவனைப்பாடி வணங்கவும், அதன்மூலம் சமயத் தொண்டு நிகழ்த்தவும் உறுதி பூண்டார். அவ்வண்ணமே அவர் பல திருப்பதிகங்களுக்குச் சென்றபோது, திருக்கோலக்கா என்னும் ஊரில் இறைவனால் பொன்தாளம் வழங்கப்பட்டார். இந்நிலையில் யாழிசையில் வல்லவராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தொடர்பு சம்பந்தருக்கு ஏற்பட்டது. தமது பாடல்களை யாழில் இசைக்கும் உரிமையைத் திருநீலகண்டர்க்கு வழங்கினார். அதுமுதல் இருவரும் பல திருத்தலங்களுக்கு நடந்தே சென்று பாடல்கள் பாடி இறைவனை வழிபட்டனர். இச்சிறுவயது பாலகன் பாதம் நோகப் பல ஊர்களுக்கும் நடந்து செல்வதைப் பொறாத கண்ணுதற்கடவுள், திருநெல்வாயில் அரத்துறை என்னும் ஊரில் சம்பந்தருக்கு முத்துச் சிவிகையும் முத்துச் சின்னமும் முத்துக்குடையும் வழங்கி அருளினார். சம்பந்தர்,

**எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென்றேத்திச்**
**சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவதன்றால்**
**கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்**
**அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே**

*(பதிகம் 226 பாடல் 1)*

என்னும் பாடலைப்பாடி அவற்றையேற்றுக் கொண்டு தொடர்ந்து பல தலங்களுக்கும் சென்றுவழிபட்டார்.

ஆளுடைய பிள்ளை உமையொருபாகனை ஊர்தொறும் சென்று வழிபட்டு வருகையில் அவருக்கு உபநயனம் செய்விக்கும் பருவம் வந்தடைந்தது. பெற்றோரும் உறவினரும் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். தெய்வத் தன்மை திகழும் நன்னாளில் சம்பந்தருக்குப் பூணூல் அணிவித்து உபநயனம் செய்யப்பெற்றது. சம்பந்தர் அவ்வமயம் மறையவர்க்கும், உலகோர்க்கும் ஆன்மாவை உய்விக்கக்கூடிய உண்மைப் பொருளை உணர்த்த விழைந்தார். அவ்வுண்மைப் பொருள் 'பஞ்சாக்கரமாகும்.' சிவபெருமானின் ஐந்தெழுத்தையே (சிவாயநம) உண்மைப் பொருளாக அவர் உரைத்தார். அதற்காக ஒரு பதிகம் பாடினார். அது பஞ்சாக்கரத் திருப்பதிகம் என்று அழைக்கப் பெறுகிறது.

**துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்**
**நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்**
**வஞ்சக மற்றுஅடி வாழ்த்த வந்தகூற்**
**றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே**

*(பதிகம் 280 பாடல் 1)*

என்னும் இப்பதிகப் பாடலில் திருவைந்தெழுத்தை எப்போதும் சிந்தை செய்து வந்தால் கூற்றுவன் அஞ்சுமாறு உதைத்து மீளலாம் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது. சம்பந்தரின் இப்பாடலைக் கேட்ட மறையவர் தாம் நாள் தோறும் செய்யும் அந்திக்கால பூசையினை அஞ்செழுத்து ஓதிச் செய்ய வேண்டும்' என உணர்ந்தமையும் இப்பதிகத்தின் வாயிலாக அறிய முடிகின்றது.

இந்நிகழ்ச்சி நடந்த சில நாள் கழித்து அப்பர் பெருமானின் தொடர்பும் நட்பும் சம்பந்தருக்குக் கிடைத்தன. அப்பரைத் தம் ஊரில் கண்டு வீட்டிற்கு அழைத்து விருந்து நல்கிச் சிறப்பித்தார். பின்னர் இருவரும் இறைவன் புகழ் பரப்ப வேண்டித் தனித்தனியே பயணம் மேற்கொண்டனர்.

இவ்வாறு பாடல்களைப் பாடி இறைவனை வழிபட்டு வருகையிலே அவருக்குப் பல அரிய ஆற்றல்கள் கைகூடின. எவராலும் செய்ய இயலாத செயல்களைத் தம் அருள் வலிமையால், இறைத் தன்மையால் செய்து காட்டினார். அவ்வாறு அவர் ஆற்றிய அருஞ்செயல்களுள் சிலவற்றை யேனும் அறிந்து இன்புறல் நலம் பயக்கும்.

திருப்பாச்சிலா சிராமம் என்னும் ஊர் சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. அங்கே கொல்லி மழவன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கிருந்த ஒரே பெண்மகளை 'முயலகன்' என்னும் கொடுநோய் பிடித்திருந்தது. அவளது நோயைத் தீர்க்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயின், நோய் தீராது தொடர்ந்து தொல்லை தந்து கொண்டிருந்தது. இந்நிலையில் அவ்வூரைச் சென்றடைந் தார் சம்பந்தர் பெருமான். கொல்லி மழவன் சம்பந்தரை வணங்கி, தனக்கேற்பட்டிருக்கும் துயர நிலையைக் கூறினான். சம்பந்தர் சிவபெருமானை மனத்துள் எண்ணி அப்பெண்ணின் துயரைத் தீர்க்குமாறு வேண்டி,

**துணிவளர்திங்கள் துளங்கி விளங்கச்**
**சுடர்ச்சடை சுற்றிமுடித்து**
**பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ**
**வாரிடமும் பலிதேர்வர்**
**அணிவளர்கோல மெலாஞ்செய்து பாச்சி**
**லாச்சிரா மத்துறைகின்ற**
**மணிவளர் கண்டரோ, மங்கையைவாட**
**மயல் செய்வதோ இவர்மாண்பே**

(பதிகம் 44 பாடல் 1)

என்னும் பாடலைப் பாடினார். 'இம்மங்கை வாடும்படி மயல் செய்வதுதான் நினது மாண்போ' என வினவி அவ்வூர் இறைவனைப் பத்துப் பாடல்களில் பாடிப்பரவினார். உடனே அப்பெண்ணின் பிணி நீங்கிற்று. கொல்லி மழவனும்

மகிழ்வெய்திப் புதல்வியோடு சேர்ந்து ஞானசம்பந்தப் பெருமானை வணங்கி.வாழ்த்தினான்.

ஞானசம்பந்தரின் தந்தை ஒரு நாள் தம் பிள்ளையை நோக்கி 'வேள்வி செய்யும் காலம் நெருங்கிவிட்டது. அதற்குப் பொருள் தேவை' எனக் கேட்டார். சீகாழி வள்ளலாகிய சம்பந்தர் உடனே கோயிலுக்குச் சென்று தந்தையின் வேள்விக்குப் பொருள் அளிக்குமாறு இறைவனை வேண்டினார்.

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசலில்லையே

இறைவ ராயினீர், மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே.
(பதிகம் 92 - பாடல் 1,2)

என்னும் பாடல் பாடி வேண்ட, இறைவனும் அவருக்கு அருள் புரிந்தான். திருவீழிமிழலையாற் குடிகொண்ட இறைவன் ஒரு பூதத்தை அனுப்பி, பொற்கிழியொன்றைச் சம்பந்தர்க்கு வழங்கினான். இவ்வாறு பொருள் கேட்டுப் பாமாலை பாடியவுடனே இறைவன் அவரது வேண்டுகோளை ஏற்று அருள்புரிந்த நிகழ்ச்சி சம்பந்தரின் இறைத் தன்மையை ஓர்தற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தந்தையின் வேள்விக்குப் பொருள்வேண்டி மீட்டும் ஒருமுறை திருவாவடுதுறை அமர்ந்த ஈசனை நோக்கிச் சம்பந்தர்,

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே
(பதிகம் 262 - பாடல் 1)

என்ற பாடலைப் பாடினார். 'என்னிடம் பொருள் கேட்டு வருவார்க்குக் கொடுப்பதற்கென்று ஏதும் இல்லை; அவ்வாறு இருப்பினும் அது உன் திருவடியே தவிர வேறெதுவும் இல்லை' என்னும் பொருளை அமைத்து இப்பாடலைச் சம்பந்தர் பெருமான் பாடினார். சிவனின் செய்ய கருணையால் சிவபூதம் ஒன்று பலிபீடத்தின்மீது பொன் நிறைந்த கிழி ஒன்றை வைத்து 'இவ்வுலவாக் கிழி யுமக்கிறைவன் நல்கியது' என்று கூறிச் சென்றது. சம்பந்தர் அக்கிழியினைத் தம் தந்தையிடம் கொடுத்து, வேள்வியை நடத்தும்படிச் செய்தார்.

அடுத்து, திருமருகல் என்னும் ஊரில் வணிகன் ஒருவனின் விடந்தீர்த்து அவன் விரும்பிய பெண்ணை மணமுடித்து வைத்த நிகழ்ச்சி, சம்பந்தரின் அருட்செயல் களுள் சிறந்த ஒன்றாகப் போற்றப்படுகின்றது. வைப்பூர் என்ற ஊரைச் சேர்ந்த தாமன் என்பவன் மருகனாகிய வணிகனுக்குத் தன் பெண்களைத் தருவதாகக் கூறியிருந்தான். ஆனால் அவனுக்கிருந்த ஏழு பெண்களுள் ஆறுபேரை வேறுவேறு ஆண்களுக்கு மணமுடித்துத் தம் வாய்மொழியைப் பொய்யாக்கினான். இதனை உணர்ந்த அவனது ஏழாவது பெண் பெற்றோரை விட்டுப் பிரிந்து, வீட்டை விட்டு விலகி வணிகன் துணையோடு வெளியூர்க்குப் பயணமானாள். திருமருகலை அவர்கள் அடைந்து வழிநடைத் துயரைப் போக்கியிருந்த வேளையில் பாம்பொன்று வணிகனைத் தீண்ட அவன் இறந்து விடுகின்றான். உடனே அப்பெண், தனக்குநேர்ந்த அவலத்தை நினைந்து வருந்தி 'அன்னையையும் அத்தனையும் நீக்கி உன்னோடு வந்தேன். நீயும் இப்போது பிரிந்து விட்டாய், இனி நான் என் செய்வேன்' என அழுது அரற்றுகின்றாள். அவ் அழுகையைக் கேட்டு அங்கே வந்த சம்பந்தப் பெருமான் உண்மை நிலையைக் கேட்டறிந்து இறைவனிடம் 'வணிகனின் விடம் நீக்கி அவனை உயிர்ப்பிக்குமாறு வேண்டினார்.

**சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்**
**விடையாய் எனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவளுண் மெலிவே**

(பதிகம் 154 பாடல் 1)

என்னும் பாடலைப்பாடி திருமருகலில் குடிகொண்ட ஈசனை வணங்கினார். 'பெண் இவளின் மெலிவை நீடித்தல் தகுமோ?' என்ற சம்பந்தரின் வினாவினால் கட்டுண்ட சிவபெருமான் இவ்வணிகனின் விடத்தைத் தீர்த்து அவனுக்கு உயிரளித்தான். பின்னர், சம்பந்தர் அவ்விருவருக்கும் மணம் முடித்து வைத்தார். அவர்கள், ஆளுடைய பிள்ளையாம் நம் சம்பந்தர் பெருமானைப் போற்றி, வணங்கி விடை பெற்றனர். இவ்வாறு, சென்ற உயிரை மீட்டுத் தருகின்ற ஆற்றல் வாய்ந்த அருளாளராக ஞானசம்பந்தப் பெருமான் விளங்கியமை புலனாகின்றது.

திருஞான சம்பந்தரின் இறை நம்பிக்கைக்கு மற்றுமொரு சான்றாக அவர் பாடிய கோளறு பதிகத்தைக் குறிப்பிடலாம். சோழநாட்டுத் திருப்பதிகளில் தொண்டாற்றி வந்த சம்பந்தரை, பாண்டிய நாட்டு ஒற்றர் சிலர் சந்தித்து, 'எங்கள் நாட்டில் சைவ நெறி அருகி சமணம் ஓங்கியிருக்கின்றது; நீங்கள் அருள்கூர்ந்து பாண்டி நாட்டிற்கு எழுந்தருள வேண்டும். இது எங்கள் அரசியார் மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையாரும் இணைந்து விடுத்த வேண்டு கோள். நீங்கள் தவறாது எழுந்தருள் வேண்டும்' என்று பணிந்துரைத்தனர். சம்பந்தரும் அவருடனிருந்தோரும் அவ் வேண்டுகோளினைஏற்றனர். அப்பொழுது அங்கிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள், சம்பந்தரை நோக்கி, பாண்டி நாட்டிற்குச் செல்ல இது தருணமன்று; கோள் நிலையும் சரி இல்லைஎன்றார். அதற்கு, ஞானசம்பந்தர் 'நம்மைக் காப்பது சிவபெருமான் அருள். நாம் போற்றுவது அவனது திருவடி கள். நம்மை நாளும் கோளும் என்ன செய்யும்' என்று வினவும் வகையில் ஒரு பதிகம் பாடினார்.

வேயுறுதோளி பங்கன் விட முண்டகண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்லவவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

(பதிகம் 221 பாடல் 1)

என்பது சம்பந்தர் பாடிய பாடல். இதில் 'அடியவர்களுக்கு எந்த நாளும் நல்ல நாளே. திங்களைச் சடையிலே அணிந்துள்ள சிவபெருமான் நம் உள்ளத்தில் புகுந்திருப்பதால் நமக்கு எல்லா நாளும் நல்ல நாளே' என்னும் கருத்து அமைந்து சம்பந்தரின் இறை நம்பிக்கை உணர்வைச் சிறப்பிக்கக் காணலாம்.

சம்பந்தரின் அருட்செயல்களுள் சிறப்புடையதாக அவர் மதுரையம்பதியில் ஒரு பெரும் பேரரசையே சைவநெறியில் செலுத்தியது போற்றப்படுகின்றது. திருவாலவாய் அண்ணலின் அருட்கருணைப் பெருவெள்ளத்தில் தம்மை மறந்து அவர் பாடிய பாடல்கள் விழுமிய ஓசையும் ஆழ்ந்த பொருளும் கொண்டிலங்குகின்றன.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

(பதிகம் 378 - பாடல் 1)

என வரும் பாடலில் ஓசையினிமை சிறந்திருக்கக் காணலாம். மேலும் சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் அரசோச்சிய மன்னனின் வாழ்க்கைத் துணையாகிய மங்கையர்க்கரசியார் இத்திருவாலவாய் இறைவனைப் பணிசெய்து போற்றிய பாங்கு இப்பாடலில் இடம் பெறுவதையும் காணமுடிகின்றது. இதிலிருந்து பாண்டியன் மனைவி சைவநெறி பரப்புவதில் துணை நின்றாள் என்னும் வரலாற்றுக் குறிப்பினையும் நாம் அறிகின்றோம்.

ஆலவாய் அழகரின் அருட்செயலை வியந்து போற்றி வணங்கி மதுரையின் நகர்ப்புறத்தே வந்தார் சம்பந்தர். அங்கே, மன்னன் கூன் பாண்டியன் வைப்பு நோயால் உழன்று வருந்துவதை அவனது இல்லத்தரசி மங்கையர்க்கரசியாரின் வாயிலாக அறிந்தார். அரசியார் மன்னனின் நோயைத் தீர்க்குமாறு வேண்டினார். அருள்நெறியண்ணலாம் சம்பந்தப் பெருந்தகை அரசியின் வேண்டுகோளை ஏற்று, மன்னனின் உடலில் திருநீறு பூசி,

**மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயன்திருநீறே**

*(பதிகம் 202 - பாடல் 1)*

என்னும் இப்பாடலைப் பாடி நோயைத் தீர்த்தார். இப் பாடலின் வாயிலாகத் திருநீற்றின் பெருமையை, உலகோர்க்கு உணர்த்தியுள்ளார் ஞானசம்பந்தர்.

பாண்டி நாட்டுத் திருத்தலங்களை வழிபட்ட பிறகு சம்பந்தர் சோழ நாட்டை நோக்கிப் பயணம் மேற் கொண்டார். பிள்ளையுடனே வருவதாக வேண்டினர். சம்பந்தர், அவர்களிடம் ‘இங்கிருந்தே சைவப் பயிரை வளருங்கள்’ என்று கூறி விடை பெற்றார். சோழ நாட்டை அடைகையில் முள்ளிவாய்க்கரை என்னும் ஊரின் கண்ண

தாகிய ஆற்றில் பெருவெள்ளம் பாய்ந்து சென்றது. ஆற்றின் அக்கரையில் திருக்கொள்ளம்பூதூர் ஆலயம் அமைந்திருக்கக் கண்ட சம்பந்தர் அவ்வூர் சென்று வழிபட எண்ணினார். ஆற்றைக் கடந்தால்தான் அக்கரைக்குச் செல்ல முடியும். ஓடங்கள் ஆற்றின் கரையில் இருந்தன. வெள்ளப்பெருக்கு மிகுதியாக இருந்ததால் ஓடக்காரர் ஓடங்களை அங்கேயே நிறுத்திவிட்டுப் போய் விட்டனர். கொள்ளம்பூதூர் இறைவனை வழிபட வேண்டும் என்னும் ஆவல் மீதூரலால் சம்பந்தர் தாமே ஓடம் செலுத்த முடிவு செய்தார். அங்கிருந்த ஓர் ஓடத்தில் அடியவரை ஏற்றிக் கொண்டு, தாமும் அதிலேறி இறைவனை வணங்கி,

**கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்**
**நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்**
**செல்ல வுந்துக சிந்தை யார்தொழ**
**நல்கு மாறருள் நம்பனே.**

(பதிகம் 264 - பாடல் 1)

என்னும் பாடலைப் பாடினார். ஓடம் எவ்வித இன்னலுமின்றி அக்கரையை அடைந்தது. அனைவரும் சம்பந்தரின் அருள் வலிமையை எண்ணி வியந்தனர்.

அடுத்து, திருவோத்தூர் என்ற ஊரில் ஒரு சிவபக்தர் இருந்தார். அவர் சிவபெருமானுக்காகப் பனைமரங்கள் வைத்து வளர்த்தார். அப்பனைகள் ஆண்களாகிக் காய்க்கா திருந்தன. மாற்றுச் சமயத்தினர் சிலர் அச் சிவபக்தரை நோக்கி 'சிவனருளால் உன் ஆண் பனைகளைக் காய்க்குமாறு செய்ய முடியுமா?' என வினவினர். அதைக் கேட்டு வருந்திய சிவபக்தர், திருவோத்தூருக்கு எழுந்தருளியிருந்த சம்பந்த ரிடத்தில் தமது மன வருத்தத்தைக் கூறினார். அன்பரின் வருத்தம் போக்கிடத் துணிந்தார் ஆளுடைய பிள்ளை. உடனே, சம்பந்தர்,

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தார்இல்லை எண்ணுங்கால்
ஓத்தூர் மேய ஒளிமழு வாள் அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

(பதிகம் 54 - பாடல் 1)

என்று பாடத் தொடங்கி,

குரும்பை யாண்பனை யின்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.

(பதிகம் 54 - பாடல் 11)

என்று முடிக்கையில் அச்சிவபக்தரின் ஆண் பனைகள் பெண் பனைகளாக மாறி காய்த்துக் குலை சாய்த்திருந்தன. இவ்வாறு ஆண் பனைகளாக இருந்தவற்றைத் தம் அருளாற்றலால் பெண் பனைகளாக மாற்றியதுடன், சிவபக்தரின் வருத்தத்தையும் போக்கினார். இப்படிச் சம்பந்தரின் திருவருள் செயல்கள் பல நிகழ்ந்தமை அறிகின்றோம். இறுதியாகச் சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கிய நிகழ்ச்சி அனைவரும் அறியவேண்டிய ஒன்றாகும். மயிலாப்பூரில் சிவநேசர் ஒருவர் தமது மகளுடன் வாழ்ந்து வந்தார். அவரது மகள் ஒரு நாள் நந்தவனம் சென்றபோது பாம்பு தீண்டி உயிரிழந்தாள். அவளது மறைவு கேட்டுப் பெரிதும் வருத்தமுற்ற சிவநேசர் 'என் பெண்ணை உயிர்ப்பித்து எழச் செய்பவர்களுக்குப் பெரும்நிதி தருவேன்' என அறிவித்தார். சிலர் முயன்றனர். எவராலும் அப்பெண்ணை உயிர்ப்பிக்க இயலவில்லை. சிவநேசர் மகளை முறைப்படி எரியூட்டி அவளது எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் இட்டுப் பாதுகாத்து வந்தார். திருஞானசம்பந்தர்க்கே இவள் உரியவள். அவர் வரும்வரை இவ்வாறு பாதுகாத்து வைப்பதே நல்லது என்ற எண்ணத்தில் சிவநேசர் இருந்தார். அவர் எண்ணியவாறே சம்பந்தரும் வந்தார்; அடியார்கள் வாயிலாகச் சிவநேசர்

உற்ற துயரினை அறிந்தார். எலும்பும் சாம்பலும் நிறைந்த குடத்தைக் கொண்டுவரச் செய்தார். அவ்வெலும்பைப் பெண்ணாக்கும் முயற்சி வெற்றி பெறவேண்டிச் சிவபெருமானை வணங்கி,

**மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான்கபாலீச் சரமமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.**

(பதிகம் 183 - பாடல் 1)

என்ற பதிகத்தைப் பாடத் தொடங்கினார். பதிகம் முடிந்தவுடன் எலும்பு பெண்ணாக உயிர்பெற்று எழுந்தது. அப்பெண்ணைச் சிவநேசரிடம் ஒப்படைத்தார் சம்பந்தர். பின்னர் அச்சிவநேசர் தம் பெண்ணை மணந்து கொள்ளுமாறு சம்பந்தரை வேண்ட, அவர் 'இவளைச் சிவனருளால்' நான் தோற்றுவித்தேன். எனவே இவளை நான் மணத்தல் முறையன்று' என்று கூறித் தம் ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

சம்பந்தர் சீகாழிப் பதியை அடைந்தவுடன் அவருக்குத் திருமணம் செய்விக்க முயற்சிகள் நடந்தன. திருநல்லூரி லுள்ள நம்பியாண்டார் நம்பி என்பாரின் மகளை ஆளுடைய பிள்ளைக்கு உரிய மணமகளாகத் தேர்ந்தெடுத்தனர். நம்பியாண்டார் நம்பி இதனை அறிந்து பெருமகிழ்வுற்றார். குறிப்பிட்ட நாளில் சம்பந்தர் நம்பியாண்டார் நம்பியின் மகளைக் கைப்பிடித்தார். தீயை வலம் வந்து வணங்கும் வேளையில் சிவனொடு இரண்டறக் கலக்க விரும்பினார் சம்பந்தர். 'உனது திருவடி நிழலை அடையும் தருணம் இதுவே' என்று இறைவனிடம் வேண்டினார். இறைவனும் அவர் விருப்பத்தை அறிந்து 'ஞான சம்பந்தனே! நீயும் உன் மனைவியும் திருமணம் காணவந்த மக்களும் இச்சோதியி னுள்ளே வந்து சேருங்கள்' என்று திருவாய் மலர்ந்தார். இறைவன் திருக்கோயில் முழுதும் சோதி மயமாக்கினார். அதன்கண் ஒரு வாயிலையும் இறைவன் அமைத்தார். அப்பொழுது, சம்பந்தர்,

**காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்**
**வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவதும்**
**நாதன் நாமம் நமச்சி வாயவே.**

(பதிகம் 307 - பாடல் 1)

என்ற பாடலைப் பாடி, சுற்றத்தினருடன் அச் சோதியிற் கலந்தார்.

திருஞானசம்பந்தரின் வாழ்க்கையிலிருந்து நாம் இரண்டு உண்மைகளை அறிய முடிகின்றது. ஒன்று, அவர் இறைவனுடைய புதல்வர் என்னும் பெருந்தகுதியைப் பெற்றவர். இரண்டாவது, அவர் தமக்கென்று வாழவில்லை. பிறருக்கு உதவும் நோக்கிலேயே அவரது வாழ்க்கை அமைந்தது. அடுத்து இறைவன் சம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கியது முதல் சோதியில் இணைத்துக் கொண்டது வரையில் அனைத்தையும் தாமாகவே அருள் செய்தார்; எதையும் சம்பந்தர் இறைவனிடம் கேட்டதில்லை. அப்படி அவர் கேட்டதெல்லாம் அவருக்காகக் கேட்டவையல்ல; பிறருடைய குறை போக்க வேண்டியே அவர் இறைவனிடம் பல வேண்டுதல்களைச் செய்தார்.

இவ்வாறு தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த சம்பந்தரின் பாடல்களில் காணப்பெறும் சில நெறிகளையும் நாம் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது ஆகும். சம்பந்தரின் பாடல்களில் அகப்பொருள் நெறியும், இயற்கையை வருணிக்கும் நெறியும், வாழ்வியல் உண்மைகள் சிலவற்றை எடுத்துரைக்கும் நெறியும் அளவாகவும் அழகாகவும் அமைந்து இலக்கிய இன்பத்தை ஊட்டக் காணலாம்,

தமிழ் இலக்கிய மரபில் அகப்பொருள் குறிப்பிடத்தக்க இடத்தை இன்றளவும் வகித்து வருகிறது. தொல்காப்பியர் உருவாக்கிய அகமரபு அன்பின் ஐந்திணையோடு நின்றுவிடவில்லை. அது பக்தி இலக்கியக் காலத்திலும் தொடர்ந்தது. இன்னும் சொல்லப் போனால் பக்தி இலக்கியக் காலத்தில்

தான் அகப்பொருள் மரபில் புதுமைகள் நிகழ்ந்தன. இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் நினைந்து புலவர்கள் அகப்பாடல்கள் பலவற்றைப் பாடினர். நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தப் பெருமானும் அத்தகு பாடல் கள் சில பாடியிருக்கக் காண்கிறோம். இவற்றை நாயகி நாயகி பாவத்தில் அமைந்த பாடல்கள் என்று குறிப்பர்.

ஆளுடைய பிள்ளையாம் நம் சம்பந்தர் முதன்முதலாகப் பாடிய திருப்பதிகமே நாயகி நாயகி பாவத்தில் அமைந்த அகப்பாடலாகும். 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கு கின்ற அந்தப் பாடலில் 'என் உள்ளங்கவர் கள்வன்' எனவரும் தொடர் தலைவி ஒருத்தி கூறுவது போன்று அமைந்துள்ளது என்று குறிப்பிடுகின்றனர். மூன்றுவயதே யாகிய நிலையில் நம் முத்தமிழ் விரகர் பாடிய முதற்பாடலே அகப்பொருள் அமைதி சான்றதாய் இலங்குவதை எண்ணி அறிஞர்கள் வியந்து போற்றுவர்.

சங்க இலக்கியங்களில் தலைவி அஃறிணை உயிர் களிடத்துப்பேசி, தன் ஆற்றாமையை வெளிப்படுத்தும் நிலை காணப்படுகின்றது. மேலும் சில பாடல்களில் அஃறிணை உயிர்களைத் தலைவி தூதாக அனுப்பும் பாங்கும் காணப்படு கின்றது. அந்த மரபை ஞானசம்பந்தரும் பின்பற்றுகின்றார். 'கிளியைவிளித்து, தோணி புரத்தில் குடி கொண்டிருக்கும் ஈசனின் திருநாமத்தைக் குறித்து என்னிடம் பேசுவாயாக, நான் உனக்குத் தேனும் பாலும் உண்ணத் தருவேன்' என்று சம்பந்தர் பேசுவதாக ஒரு பாடல் தேவாரத்தில் இடம் பெற்றிருக்கின்றது.

**சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்**
**முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்**
**துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்**
**பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே.**

*(பதிகம் 60 - பாடல் 10)*

என்பது சம்பந்தரின் பாடல். இதில் கிளியை விளித்து அதனிடம் பேசும் நிலையும், தன்னை நாயகியாகவும், தோணிபுரத்தீசனை நாயகனாகவும் கருதும் நிலையும் இடம் பெற்றிருக்கின்றன.

திருமாலை வழிபடும் திருக்கூட்ட மரபில் வந்த ஆழ்வார்களுடைய பாடலிலும் இத்தகு அகப்பொருள் நெறி அமைந்து சிறக்கக் காணலாம். ‘திராவிட வேதம்’ எனச் சிறப்பித் துரைக்கப்படும் திருவாய்மொழியினை அருளிச் செய்த நம்மாழ்வாரின் பாடலொன்றில் தலைவி, காதல் வேட்கை மிகுதியானதால் ஆற்றாதவளாகி, தான் வளர்த்த பூவையிடம் தன்னையும் தலைவனாம் திருமாலையும் இணைத்துப் பேசும் பாங்கு புனையப்பட்டுள்ளது.

> **சிறுபூவையே! நெடுமாலாரிடம் என் காதல் நோயைத் தெரிவிக்குமாறு உன்னைக் கேட்டேன். நீயோ அவரைச் சந்தித்து என்நிலை உரைக்காது விட்டாய்; அதனால் உடலும் உள்ளமும் நைந்தன. உனக்கு இனிமை நிறைந்த உணவை ஊட்டும் சக்தியையும் இழந்து நிற்கிறேன். இனிமை நிறைந்த உணவை ஊட்டும் சக்தியையும் இழந்து நிற்கிறேன். ஆகையால், நீ வேறு இடம் சென்று உணவைத் தேடிக்கொள்**

எனத் தலைவி ஆற்றாமை வெளிப்பட நாகணவாய்ப் புள்ளிடம் மொழிகின்றாள்.

> **நீஅலையே சிறுபூவாய் நெடுமாலார்க்கு என்தூதாய்**
> **நோய்எனது நுவலென்ன நுவலாதே இருந்தொழிந்தாய்**
> **சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான் இனிவுனது**
> **வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே.**
>
> *(நாலாயிர திவ்விய பிரபந்தம் - 2715)*

என்பது நம்மாழ்வார் அமைத்த, அகப்பொருள் நெறிசார்ந்த பாடல். இதில் தலைவி தன்நிலை தடுமாறி, திருமாலின் நினைவொன்றிலேயே திளைத்து நிற்கும் பாங்கு வெளிப்படுகின்றது.

திருநாவுக்கரசரும், தலைவி நிலையில் நின்று இறைவனைத் தலைவனாக எண்ணிப் பல பாடல்களைப் புனைந்துள்ளார். அவற்றுள் தலைவி தன்னை முற்றிலுமாக இழந்து தலைவனின் 'திருப்பாதங்களே சரண்' என அவனோடு ஒன்றிவிட்ட நிலையைச் சித்திரிக்கும் பாடல் குறிப்பிடத்தகுந்தது.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

என்னும் அப்பர் பெருமானின் பாடல், இறைவனின் இணையடிகளோடு இயைந்த தத்துவ நிலையை, தலைவனும் தலைவியும் கலந்தனர் என்னும் அகமரபின் அடிப்படையில் விளக்குகின்றது. நம்மாழ்வார், அப்பர் பெருமான் ஆகியோர் பாடியுள்ள இப்பாடல்கள் ஞானசம்பந்தரின் அகப்பொருள் தன்மை சார்ந்த பாடல்களுடன் ஒப்புமையுடையனவாய் விளங்குகின்றமை அறிந்து மகிழ்தற்குரியது.

அடுத்து, திருவாரூர்ப் பதிகத்தில் அமைந்துள்ள பாடல்களில் தலைவியின் ஏக்க உணர்வு வெளிப்படுவதைத் காண முடிகின்றது. தலைவன் பிரிந்து சென்றதால் ஆற்றாமை

கொண்ட தலைவன் மீண்டும் வந்து தன்னைத் தழுவி 'அஞ்சாதே' என்று அன்பொழுகப் பேசி அணைத்திட மாட்டானோ என ஏங்குகின்ற ஏக்க உணர்வு இப்பதிகத்தில் எதிரொலிக்கின்றது.

**இலங்கை மன்னன் இருபது தோளிறக்**
**கலங்கக் கால்விர லாற்கடைக் கண்டவன்**
**வலங்கொள் மாமதில் சூழ்திரு வாரூரான்**
**அலங்க றந்தெனை அஞ்சல் எனுங்கொலோ**

*(பதிகம் 303 - பாடல் 8)*

என்ற பாடலில் தலைவியின் ஏக்க உணர்வு வெளிப்பட்டு நிற்கின்றமை அறியலாம். சம்பந்தரின் பாடல்களில் அமைந்துள்ள அகப்பாட்டு நெறியை முழுமைப்படுத்தி நோக்கும்பொழுது அவற்றில் பண்டையோர் வகுத்த அகமரபு பெரிதும் பின்பற்றப் பட்டிருத்தலைக் காணமுடிகின்றது.

இனி, சம்பந்தர் பெருமானின் பாடல்களில் இயற்கை வளம் இடம் பெற்றிருக்கின்ற மாண்பினைக் காண்பது இன்பம் பயப்பதுடன் கலை உணர்வையும் மிகுவிக்கும்.

நீர் நிறைந்த குளங்களிலும், தடாகங்களிலும் மலர்ந்து மணம் வீசும் மலர்கள் சம்பந்தரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து அவர்தம் கவிதைகளில் சீரியதோர் இடத்தைப் பெற்றிருக்கக் காண்கிறோம். குளங்களில் மலர்ந்திருக்கின்ற பல மலர்களை மங்கையரின் சில உடல் உறுப்புகளுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார் ஞானசம்பந்தர்.

**வாவி தொறும் வண்கமலம் முகம்காட்டச்**
**செங்குமுதம் வாய்கள் காட்டக்**
**காவி இருக்கும் கருங்குவளை கருநெய்தல்**
**கண்காட்டும் கழுமலமே.**

*(பதிகம் 129 - பாடல் 1)*

என்னும் இப்பாடலில் தாமரை மலர்கள் மாதர்களின் முகத்தழகைக் காட்டுகின்றன; செவ்வல்லி மலர்கள் அவர்தம் வாயின் அழகைக் காட்டுகின்றன; காவி, கரிய குவளை, கருநெய்தல் ஆகிய மலர்கள் பெண்டிர்தம் கண்களின் அழகைக் காட்டுகின்றன என ஒப்புமைப் பண்பு ஒளிர்வதுடன் இயற்கைவளம் நம் கண் முன்னே படமாக விரிவதையும் காணலாம்.

சம்பந்தரின் பாடல்களில் மந்திகளின் (குரங்கின்) செயல் விதந்து பாடப் பட்டிருத்தலைக் காணமுடிகிறது. இயற்கையை விவரிப்பதுடன், திருவையாறு பதிகத்தில் உள்ள பாடல் ஒன்றில் மந்தியின் செயல் நம்மை மகிழ்விக்கும் வண்ணம் சம்பந்தர் பெருமானால் புனையப்பட்டிருக்கின்றது. ‘கோயிலை வலம் வந்த பெண்கள் நடனம் ஆடுகின்றனர்; அவர்களுடைய நடனத்திற்கு ஏற்றவாறு தாளம், மத்தளம் ஆகியவற்றின் ஓசை முழங்குகின்றது; இவ்வோசையைக் கேட்ட சில மந்திகள் அச்சம் கொண்டன; அவ் ஓசையை மழை பெய்யும் மேகத்தின் முழக்கோ என நினைத்தன. அந்நினைவு தோன்றிய உடனே மரத்தின் மேலேறி வானத்தில் ஓடிக் கொண்டிருக்கும் மேகத்தைப் பார்த்தன’ என்று அந் நிகழ்ச்சியை அழகுற அமைத்துள்ளார் சம்பந்தர்.

**புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி**
**அறிவழிந்திட்டு ஐம் மேலுந்தி**
**அலமந்த போதாக அஞ்சேல்என்று**
**அருள் செய்வான் அமருங்கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட**
**முழவதிர மழையென்றஞ்சிச்**
**சிலமந்தி யலமந்து மரமேறி**
**முகில் பார்க்குந் திருவையாறே.**

*(பதிகம் 130 - பாடல் 1)*

என்னும் இப்பாடல் மாதர்களின் நடனத்தை, மேகக்கூட்டம், அவற்றின் முழக்கம், குரங்குகளின் செயல் என்னும்

மூன்றனோடும் இயைபுபடுத்தி இன்பம் விளைப்பதை உணர்கின்றோம் அல்லவா?

குற்றாலத்தின் இயற்கை அமைப்பை, அதன் அழகை இரண்டே வரிகளில் மிக இயல்பாக வருணித்துள்ளார் ஞானசம்பந்தர்.

> புத்தம் புதிய மலர்கள் நிறைந்து மணம்வீசும் மலை; மிக நெடிதாக உயர்ந்த மலைச்சாரல்; அங்குவேங்கை மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அவை தம் கிளைகளை நான்குபுறங்களிலும் பரப்பி அடர்த்தியான நிழலைத் தருகின்றன. மரங்களின் ஊடே அழகிய சோலை; சோலையில் பல்வகை வண்டுகள் யாழ் போன்ற இனிமையாகப் பாடிக்கொண்டிருக்கின்றன. இக்காட்சி யமைந்த தலமே குற்றாலம்'

இதனை,

> வம்பார் குன்றம் நீடு உயர் சாரல்வளர் வேங்கைக்
> கொம்பு ஆர்சோலைக் கோலவண்டு யாழ்செய்யும்
> குற்றாலம்
> (பதிகம் 99 - பாடல் 1)

என இரு அடிகளில் நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்து கின்றார் ஞானசம்பந்தர். இவரது பாடல்களில் இடம் பெறும் இயற்கைக் காட்சிகளைத் தொகுத்துப் பார்க்கும் போது அவற்றில் குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலை என்னும் ஐந்நில வருணனைகள் இடம் பெற்றிருத்தலையும், சம்பந்தரின் வயதுக்கும் அனுபவத்துக்கும் ஏற்றவாறு இயற்கைக் காட்சிகள் புனையப்பட்டிருத்தலையும் அவற்றில் மிகைத்தன்மை இல்லை என்பதையும் உணர முடிகின்றது.

இயற்கையைப் பாடியது போன்றே மக்கள் இன்புற்று வாழும் வகையையும் நெறியையும் சம்பந்தர் பாடியுள்ளார்.

இம்மண்ணுலக வாழ்வைச் சில சமயவாதிகள் மாயமென்றும், பொய்யென்றும் உரைத்து மக்களின் மதியிலே மருட்சியை உண்டாக்கினார்கள். இதனைக் கண்ட சம்பந்தர் மண்ணுலக வாழ்வு கொடியதன்று; பொய்மையானதன்று. அது இன்ப மானதே; யாவரும் எம்விதக் குறையுமில்லாமல் வாழ்வை அமைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உணர்வைத் தம் பாடல்வழிப் புலப்படுத்தினார்.

'இல்லறத்திலிருந்து துறவறம்' என்னும் கருத்தை ஞானசம்பந்தர் வலியுறுத்திப் பாடியுள்ளார். இறைவனை அடைதற்கு உரிய வழிகளுள் ஒன்றாக இதனையும் குறிப்பிட்டிருப்பது தமிழ் இலக்கிய மரபிற்கு ஏற்றதாக விளங்கு கின்றது. தொல்காப்பியனாரும்,

**காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.**

*(தொல். பொருள். கற்பியல் - நூற்பா 190)*

என இல்லறத்தின்வழி துறவற மாண்பை விளக்கியிருக்கக் காணலாம். தொல்காப்பிய இலக்கணத்தை ஒட்டியெழுந்த சங்கப் பாக்களிலும் இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. 'ஆண்டு பலவாகியும் நரை தோன்றாததற்குக் காரணம் யாது?' என ஒரு புலவரை வினவ, அவர் பல காரணங்களைக் கூறுகின்றார். அவற்றுள் ஒன்று 'மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்' என்பதாம்.

**யாண்டுபல வாக நரையில வாகுதல்**
**யாங்கா கியரென வினவுதிர் ஆயின்**
**மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்**
**யான்கண் டனையர்என இளையரும் வேந்தனும்**

**அல்லவை செய்யாள் காக்கும் அதன்தலை**
**ஆன்றுஅவிந் தடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.**

(புறம்.191)

என்பது பிசிராந்தையார் என்னும் பெயருடைய அப்புலவர் பெருமான் நரை தோன்றாமைக்குக் காரணம் கூறிப் பாடிய பாடல். இங்கே மாட்சிமை நிலை மனைவி அவருக்கு வாய்த்தமையால் நரை தோன்றவில்லை என்று கூறுவதி லிருந்து வாழ்க்கையில் பெண்மைக்கு உயரிய நிலையினை நம் முன்னோர்கள் அளித்து வந்துள்ளமை தெளிவாகும். வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையும்,

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை**

(திருக்குறள்.53)

என்ற குறளில் இல்லாளாகிய மனைவி மாட்சிமை கொண்டவளாக அமையின் ஒருவன் எல்லா வளங்களையும், இன்பங் களையும் பெற்றவனாவான் எனக் கூறியிருப்பதும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

பக்தி இலக்கியங்கள் பெருகிய காலத்திலும் 'இல்லற நெறி' சிறந்ததென்றே கருதப்பட்டது. சம்பந்தரின் சமகாலத் தவரான அப்பர் சுவாமிகளும் இல்லறநெறியை ஏற்புடைய ஒன்றாகவே கருதியுள்ளமை அவர் பாடல்களை நோக்கும்பொழுது புலனாகும். பிறவிப் பெருங்கடலிலிருந்து கரை சேர்க்க வல்ல இறைவனை நமது இலக்கியங்கள் தனியனாகக் காட்டவில்லை. உமையவளுக்குத் தன் உடலின் ஒரு பாதியை அளித்தவனாகவே இலக்கியங்கள் சுட்டுவதைக் காண்கிறோம். இறைவன் அடியவர்களுக்குக் காட்சி அளிக்கையிலும் தன் துணைவியோடு சேர்ந்தே எழுந்தருளும் நிலை பரவலாகக் காணப்படுகின்றது. அப்பர் பெருமானுக்குக் காட்சியளித்த சிவபெருமான் தன் துணைவி உமையவளுடன் சேர்ந்தே எழுந்தருளினார் என்பதை அப்பரின் திருவாக்கினா

லேயே அறியலாம். உடல் தளர்ந்து, உறுப்புகள் செயலிழந்த நிலையிலும் கயிலைக்காட்சியை எப்படியும் காணவேண்டும் என்னும் வேட்கை கொண்டார் அப்பர். அவரது அன்பின் திறத்தை அறிந்த சிவபெருமான் உமையவளுடன் 'கயிலைக் காட்சியினை' அப்பருக்கு வழங்கினார். அக்காட்சியைக் கண்டுகளித்த அப்பர்,

**மாதர்ப் பிறைக்கண்ணி யானைமலையான் மகளொடும் பாடிப்**
**பாதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின்புகு வேன்**
**யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது**
**காதன் மடப்பிடி யோடுங் களிறுவருவன கண்டேன்.**
**கண்டேன் அவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்**

(திருவையாற்றுப்பதிகம் - பாடல் 1)

எனப் பாடிப் பரவசமெய்தினார். இவ்வாறு ஆணும் பெண்ணுமாய் இணைந்து நடத்தும் இல்லறமாண்பை இறை நிலைக்குரியதாகக் காட்டும் மரபினை அப்பர் பெருமான் அடியொற்றிப் பாடல்கள் புனைந்தமை அறிகின்றோம்.

இத்தகு மரபில் வந்த திருஞானசம்பந்தர் இல்லறத்தின் பெருமையினை,

**மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணினல் லகதிக்குயாதுமோர் குறைவிலைக்**
**கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே**

(பதிகம் 282 - பாடல் 1)

என்னும் பாடலின்வழி எடுத்துரைக்கின்றார். பேரின்பமாகிய இறைவனுடன் இரண்டற இயைந்து நிற்பதற்கு இல்லறம் பெருந்துணை புரிவதாகக் காட்டியுள்ளமை அறிந்து இன்புறுதற்குரியது. சம்பந்தர் பெருமான் இப்பாடலில் மட்டுமன்றி வேறு சில பாடல்களிலும் சிவபெருமானையும்

உமையவளையும் ஒருங்குவைத்துப் பாடியுள்ளமை அறியலா கின்றது. திருவண்ணாமலைப் பதிகத்தில் இறைவன் உமைய வளுடன் தோன்றும் காட்சியை அழகுத் தமிழில் நம் கண் முன்னே படம் போன்று காட்டுகின்றார்.

**உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய**
**வொருவன்**
**பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ**
**மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம் முழவதிரும்**
**அண்ணாமலை தொழுவார்வினை வழுவா**
**வண்ணமறுமே**

(பதிகம் 10—பாடல் 1)

என இறைவனும் இறைவியும் இணைந்து தோன்றும் காட்சி இப்பாடலில் வெளிப்படுகின்றது. சக்தி, சிவம் என்னும் தத்துவமும் இப்பாடலில் அமைகின்றது. இவ்வாறு வாழ்வின் அடிப்படையாய் அமையும் இல்லற நெறியினைத் தம் பாடல் களின் வழியே பண்டை மரபினை ஒட்டியவாறு சம்பந்தர் அமைத்துள்ள பாங்கு போற்றுதற்குரியது.

இல்லறத்தைப் பாடியது போன்றே வாழ்வின் பிற கூறுகளையும் சம்பந்தர் பாடியுள்ளார். வாழ்வு துன்பங்கள் நிறைந்தது; அதிலிருந்து மீள வேண்டுமெனில் ஏதேனும் ஒரு நெறியைப் பின்பற்ற வேண்டும்; அவ்வாறு பின்பற்றினால் வாழ்வு சிறக்கும் என்றும் கூறுகின்றார். இதனை,

**அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரித்திராது நீர்**
**நல்லதோர் நெறியினை நாடுமின்! நாடுமினோ**
**வில்லை அன்ன வாள்நுதல் வெள்வளை ஓர் பாகமாம்**
**கொல்லை வெள்ளை ஏற்றினான் கோடி காவு**
**சேர்மினே.**

(பதிகம் 235, பாடல் 2)

எனவரும் பாடலின்மூலம் சுட்டுகின்றார். இதில், முதலிரண்டு அடிகளில் துன்பமிக்க வாழ்வை ஆதரிக்காது, இன்பமிக்க

வாழ்வை விரும்பி அதனை அடைய நல்ல நெறியைத் தேடுங்கள்; அதனைத் தேடுவதுடன் நின்றுவிடாது அந்நெறிப்படியே நடவுங்கள் என்று அறிவுறுத்துவதைக் காண்கிறோம். இதுபோன்றே மற்றோர் பாடலில்,

துன்பமிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்துநீர்
தக்கதுஓர் நெற்றியினைச் சார்தல் செய்யப் போதுமின்
(பதிகம்—235—பாடல் 3)

என்று சீரிய நெறி ஒன்றைப் பின்பற்றுமாறு உரைக்கின்றார். வாழ்க்கை என்பது மேடும் பள்ளமும் நிறைந்தது; கல்லும் முள்ளும் கலந்த பாதைவழிச் செல்லும் பயணம் போன்றது. அதற்காக அஞ்சி வாழ்வை நடத்தாமல் வாளாவிருத்தல் பண்பன்று. வாழ்வை எதிர்நோக்கும் துணிவைப் பெற்று நடக்க வேண்டும். அதற்கேற்ற நல்ல வழியை அறிந்து கொண்டு அதன்வழி ஒழுகவேண்டும், என உலகியல் நிலையை ஒட்டியவாறு தமது கருத்தை வழங்கியுள்ளார் ஞானசம்பந்தர். 'வாழ்வே மாயம்' என்னும் கொள்கையை அவர் போற்றவில்லை. 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்னும் அரிய உண்மையை கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே ஒரு சமயவாதி எடுத்துக் கூறியிருப்பது நமது சிந்தையை மகிழ்விக்கும் செய்தியாக அமைகின்றது.

ஒரு நெறியைப் பின்பற்றுமாறு கூறிய சம்பந்தர் ஆண்டவனின் அருங்குணங்களையும் அவனை அடையும் முறைகளையும் கூறி மக்களைத் தமது பாதைக்கு அழைத்து வரும் முயற்சியில் இறங்கினார். அதற்கு அவர் பின்பற்றிய வழி அன்புவழி. அன்பினால் ஆகாதது உண்டோ? என்ற வினாவை நெஞ்சில் நிறுத்தி அன்புரிமை பூண்டு வாழும் நெறியைக் கைக்கொண்டார். பிறரையும் அன்புவழியில் ஒழுகுமாறு செய்தார். 'அன்புவழியே உயரியவழி' என்ற உண்மையை நிறுவுவதற்கே 'இறைவன் அன்பு வடிவானவன் அன்புடையார் மாட்டே அவன் இருப்பான்' என்ற கருத்தமைந்த பாடல்களைப் பாடினார்.

**அருந்தானை அன்புசெய்து ஏத்த இயலார் பால்**
**பொருந்தானைப் பொய்அடிமைத் தொழில் செய்வாருள்**
**விருந்தானை; வேதியர் ஓதிமிடை காழி**
**இருந்தானை ஏத்துமின்! நம்வினை கெடவே**
*(பதிகம்—147—பாடல் 3)*

எனவரும் பாடலில், 'பழவினைப் பற்றிலிருந்து விடுபட சீகாழிப் பெருமானை வணங்குக; அவன் அன்புடையார் மாட்டே இருப்பான்; உங்களிடம் அன்புணர்வு பெருகு மானால் அவன் உங்களின் வினைத்தொடர்பை அறுத்தெறி வான்' என்னும் பொருள்பட அன்பின் பெருமையை வலியுறுத்தி உள்ளார் சம்பந்தர்.

அன்புரிமை உடையவராய் இருப்பதுடன் கூடவே வஞ்சனை புரியும் மனம், பொய்மைக் கருத்து ஆகியவற்றை ஒழித்துவிட்டு உள்ளம் ஒன்றிய உயரிய வழியிலே நிற்பவ ராயும் இருக்க வேண்டும் என்னும் கருத்தையும் ஞான சம்பந்தர் போற்றி உரைக்கின்றார்.

**கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட்டு அருத்தியோடு**
**உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்து உளான்**
**உகந்தஊர்**
**துள்ளி வாளை பாய்வயல் கரும்பு உலாவு நெய்தல்வாய்**
**அள்ளல் நாரை ஆரல்வாரும் அம்தன் ஆரூர் என்பதே.**
*(பதிகம் 237—பாடல் 6)*

என நெஞ்சிலே கள்ளம், வஞ்சகம் இவற்றை ஒழித்துவிட்டு, அன்புடன், உள்ளத்தை வேறுவழியில் செலுத்தாமல் ஒரே நிலையில் நின்று இறைவனை நினைக்கவேண்டும்; இப்படி நினைப்பவர்கள் நெஞ்சிலேதான் இறைவன் இருப்பான் என்று கூறுவதன் வாயிலாக அவர் வஞ்சம், பொய்மை இவற்றைக் கண்டித்து மக்களை நல்லாற்றுப்படுத்தியுள்ள பாங்கு வெளிப்படுகின்றது.

அன்பு நெறி நின்று, கள்ளம், வஞ்சம் ஒழித்து, உள்ளம் ஒன்றி இறைவனை வழிபடுமாறு வேண்டிய சம்பந்தர் அவ்விறைவனின் பெருமைகளைப் புகழ்ந்துரைக்கின்றார்.

**மன்னானவ னுலகிற்கொரு மழையானவன் மழையில்**
**பொன்னானவன் முதலானவன் பொழில்சூழ்**
**புளமங்கைக்**
**என்னானவ னிசையானவ னிளஞாயிறின் சோதி**
**அன்னானவ னுறையும்மிட மாலந் துறையதுவே**
(பதிகம் 16—பாடல் 6)

என வருகின்ற இப்பாடலில் இறைவன் எவ்வெத் தன்மை களைக் கொண்டிலங்குகின்றான் என்பதை விளக்குகின்றார். இறைவன் நாடாளும் மன்னனாக, எவ்வுயிர்க்கும் இன்றியமை யாத மழையாக. செல்வக்களஞ்சியமாம் பொன்னாக, எதிலும் முதன்மையானவனாக, இன்புறுத்தும் இசையாக, இளஞாயிற்றின் சோதியாக இருக்கின்ற பான்மையைச் சம்பந்தர் எடுத்தோதி உய்யும் வழி கூறுகின்றார்.

சம்பந்தர் தமக்கென்று இறைவனிடம் எதுவும் கேட்ட தில்லை. பிறர் நலன் பேணியே இறைவனிடம் வேண்டுகோள் களை விடுத்தார். அத்தகு பரந்த மனப்பான்மை கொண்ட அவர் 'உலகம் முழுதும் துயர்நீங்கி இன்புறுக' என வாழ்த்தும் வகையில் இறைவனைப் பரவுகின்றார்.

**வாழ்க அந்தணர்; வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல்லாம்; அரன் நாமமே**
**சூழ்க வையகமும் துயர் தீர்கவே.**
(பதிகம் 312—பாடல் 1)

என்னும் பாடலில் சம்பந்தரின் 'உலகு தழுவிய பார்வை' பளிச்செனவெளிப்படுகின்றது. தன்னலமற்ற சமயவாதியாக உலகநலம் பேணும் உயர்ந்த உள்ளத்தராகச் சம்பந்தர்

திகழ்வதை இப்பாடல்வழி அறிய முடிகின்றது. சம்பந்தரின் முழு ஆளுமையையும் வெளிப்படுத்தும் பாடலாக இதனைக் கருதுவதில் தவறில்லை.

சம்பந்தர், பதினாறு ஆண்டுகளே இம்மண்ணில் வாழ்ந்து 385 திருப்பதிகங்களிலே ஏறத்தாழ 4000த்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, சைவநெறி ஓங்கும் வகையில் உள்ளம் ஒன்றி உழைத்தார். அவர் பாடிய பாடல்களிலிருந்து அவரது அருட்செயல்கள் பல வெளிப்படுகின்றன; அவருடைய பாடல்களில் அகப்பொருள் நெறி பாங்குற அமைந்து இலக்கிய இன்பம் அளிக்கின்றது; இயற்கை வளம் எழில்மிகச் சித்திரிக்கப்பட்டிருப்பதை அவர்தம் பாடல்கள் புலப்படுத்துகின்றன; தூயநெறி, ஒன்றைப் பின்பற்றி அன்பு கொண்டு, வஞ்சம், கள்ளம் அழித்து, மனம் ஒன்றி இறைவனை வழிபட்டால் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்னும் வாழ்வியல் முறையை விளக்குவனவாக அவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தன்னலம் சிறிதும் பேணாதவர். பிறர்நலம் பெரிதும் பேணியவர். 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பி' சைவ நெறியைத் தழைக்கச் செய்தவர். அவரது தொண்டால் சைவம் மறுமலர்ச்சி பெற்றது; சிவநெறி செழித்தது; தமிழ் மொழி வளம் பெற்றது; இன்னிசையொலி எங்கும் பரந்தது; கண்ணுதற் கடவுளின் தண்ணருள் அனைவர் மாட்டும் சுரந்தது; இவ்உலகம் உய்ந்தது. சுருங்கக் கூறின் திருஞான சம்பந்தர் சைவத்தின் மறுபிறப்பாய்த் தோன்றியவர் எனலாம்.

★

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

### தமிழ்

1. தமிழ் இலக்கிய வரலாறு (1959; 20-வது பதிப்பு 1989)
2. உருவும் திருவும் (1965; 6வ-து 1981)
3. கட்டுரை வளம் (1966; 9-வது 1980)
4. மனோன்மணீயம் (பதிப்பு) (1966, 10-வது 1987)
5. வாழையடி வாழை (1966, 8-வது 1981)
6. காரும் தேரும் (1966; 6-வது 1984)
7. முருகன் காட்சி 1966: 3-வது 1985)
8. இலக்கிய அணிகள் (1972, 2-வது 1977)
9. பெருந்தகை மு.வ. (1976)
10. மலர் காட்டும் வாழ்க்கை (1980, 2-வது 1982)
11. சான்றோர் தமிழ் (1980; 2-வது 1983)
12. நெஞ்சின் நினைவுகள் (1980)
13. இலக்கியக் காட்சிகள் (1980; 2-வது 1983)
14. நல்லோர் நல்லுரை (1980; 2-வது 1984)
15. சங்க கால மகளிர் (1983)
16. ஆண்டாள் (1984)
17. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் (1985)
18. சேர நாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள் (1985)
19. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் (1986)
20. அறவோர் மு.வ. (1986)
21. திருவெம்பாவை (1986)
22. குறுந்தொகைத் திறனாய்வு (1989)
23. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் (1989)

### ஆங்கிலம்

24. The Status of women in Tamil nadu During the Sangam Age. (1976)
25. A Study of Literature of the Cera ountry (Upt 11th century A.D.) (1980)
26. Papers In Tamil Literature (1981)
27. A Critical Study of Kuruntokai (1989)



## சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். காஞ்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில், கற்றஇடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ.ஆனர்சு அங்கு!' முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேர நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புக்கள். நல்ல நடை கொண்ட இந்த நாகரிகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமாவார்.

இருபது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும்உயர்தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு' ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன், பெருந்தகை மு.வ. ஆங்கிலத்தில் ஒரு நூல், 'சங்க கால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உருபா முதல் பரிசைப் பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற் புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்), சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்), சங்கத் தமிழ்ச் செல்வர் (தருமை ஆதீனம்)

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி. பா. அவர் புகழ் பாடும் அந்தமிழ்த் தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி. பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடு படு!

—மா. செ.